# காகிதக் கத்திகள்

## முழுநிலவன்

அடர்ந்த காட்டுக்குள்
அகோர சத்தத்துடன்
தொடர்வண்டிகள்
வண்டிச் சக்கரங்களில்
வன விலங்குகள்

அணைக்கட்டுகளுக்காய்
அழிக்கப்பட்ட காடுகளின்
தேன் ருசித்த குரங்கு
பாடப்புத்தகத்தின்
ஏழாம் பக்கத்தில்
தூக்கிட்டு தொங்க
கதறி அழுகின்றன
குழந்தைகள்

நிலம் முழுதும் உழுதும்
மீன் பிடிக்கக் கூட
மண்புழுக்கள் இல்லை

புல், பூண்டுகளற்ற பூமியில்
ஆடு மாடு வளர்க்க
அம்மாவால் முடியவில்லை
பெட்டை ஆட்டையும்
குட்டியையும் கூட
அறுப்புக்காரனிடம் விற்ற காசை
சேர்க்கவும் இல்லை
செலவழிக்கவும் இல்லை
மூன்றாவது வெள்ளிக் கிழமை
முனியன் கோயில் உண்டியலிடம்

எதுவுமற்ற காட்டில்
என்ன தந்திரத்தை நரி செய்ய?
ஊரைப் பார்த்து
ஊளையிடுவது தவிர
அல்லது
தெற்கு வாய்க்காலில்
உயிர்விடுவது தவிர

காடழித்து வீடுகளாக்கிவிட்டு
வீடேறும் பாம்புகளை
வேலிக்கம்பால் கொன்ற பின்
வயல்களிலும்



வைக்கோல் போரிலும்
ஏகத்துக்கும் பெருகிவிட்டன
எலிகளின் எண்ணிக்கை
விதை நெல்லுக்கான செலவை விட
எலி மருந்துக்கான செலவு அதிகம்

படித்தவர்கள் பெருக பெருக
பல்லுயிர்கள் குறைந்து போக
தாவரங்கள், விலங்கினங்களால்
தட்பவெப்பம் வகுபட
ஈவாய், மீதியாய் வந்து நிற்கிறது
எல்லோர் வீட்டுக்கும்
புயல், வெள்ளம், பூகம்பம்

■

புதிய தமிழர் கண்ணோட்டம்

**சூன்** 2008 6 – 6

**கட்டண விவரம்**

ஆண்டுக் கட்டணம் ரூ. 120/-
மூன்றாண்டுக் கட்டணம்ரூ. 300/-
வாழ்நாள் கட்டணம் ரூ.1200/-

கெடுதலிலும் ஒரு நன்மை 6
***பெ.மணியரசன்***

வர்க்கப் புரட்சியா தேசியப் புரட்சியா 16
***பெ.மணியரசன்***

துரோகியைப் புறந்தள்ளி முன்னேறும்
கூர்கா இனப்போராட்டம் 22
***செவ்வேள்***


தில்லைப் போராட்டம்
புதிய ஜனநாயகத்தின் அவதூறு 24
***கி.வெங்கட்ராமன்***

கருநாகம் 27
***மு.நியாஸ் அகமது***

மோசடி நிறுவனங்களும் உலகமய
நுகர்வியமும் 40
***க. அருணபாரதி***

உத்தப்புரம் தீண்டாமைச் சுவர் 44
***மேரி- இராசு***

நிறை குறை 45



**நவீன இந்திர சபையின்**
**பேரழிவுத் திட்டம் - 10**
***ம.செந்தமிழன்***



**யானை விழுங்கி**
**விளாம் பழங்களாய் மாநிலங்கள்- 30**
***முனைவர் த.செயராமன்***



**பிரசண்டா பாதையில் பாட்டாளிவர்க்க**
**சர்வாதிகாரம் உண்டா - 28**
***தமிழ்த்தேசியன்***

*ஆசிரியர் -வெளியீட்டாளர் :*
**பெ.மணியரசன்**
*இணை ஆசிரியர்:*
**கி.வெங்கட்ராமன்**
*குழு உறுப்பினர்கள்:*
**நெய்வேலி பாலு**
**கவிபாஸ்கர்**
**க.அருணபாரதி**

*வடிவமைப்பு*
**ஓவியர் புகழேந்தி**
**கவிபாஸ்கர்**
*ஒளி அச்சு*
**அடவி வரைகலை**

*தொடர்புக்கு*
புதிய தமிழர் கண்ணோட்டம்,
2ஆம் தளம், 20/7, முத்துரங்கம் சாலை,
தியாகராயர் நகர்,
சென்னை-17. ✆ **24348911**

இணையதளம் : www.tamizharkannotam.blogspot.com
மின்னஞ்சல் : tamizhdesiyam@gmail.com
தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி
இணையதளம் :
www.tamizharkannotam.blogspot.com

# வாய்ப்பிருந்தால் அமைதி வழி தேவையெழுந்தால் ஆய்த வழி

ஆய்தப் போராட்டம் நடத்தினால், தேர்தலில் நின்று மக்களின் கட்டளையைப் பெறுங்கள் என்பார்கள்; தேர்தலில் நின்று மக்களின் கட்டளையைப் பெற்றால் அதைத் தடுக்கப் பல்வேறு சிக்கல்களை உருவாக்குவார்கள். உலகம் முழுவதும் ஆதிக்க சக்திகள் கையாளும் உத்தி இதுதான். நாடாளுமன்றச் சேற்றில் கால் புதைந்து நிற்கும் மார்க்சியத் திரிபாளர்களின் அணுகுமுறையும் இதுதான். நேப்பாள நடப்புகள் இந்தத் தப்பிலித் தனத்தை மீண்டும் மெய்ப்பிக்கின்றன.

பத்தாண்டுகள் ஆய்தப்போர் நடத்திய மாவோவியர்கள், ஏழு தேர்தல் கட்சிகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டு அமைதிப் பாதைக்குத் திரும்பினார்கள். அரசமைப்புப் பேரவைக்கான தேர்தலில் தனித்துப் போட்டியிட்டார்கள். தனிப்பெரும்பான்மை வழங்காவிட்டாலும் தனிப்பெருங்கட்சியாக, நேப்பாளி மக்கள் மாவோவியர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

பலகட்சி முறையே நேப்பாள மார்க்சிய - லெனினிய - மாவோவிய - பிரசண்டப்பாதை என அக்கட்சி முரசறைந்து அறிவித்துள்ளது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அல்ல. தமது கொள்கை என இதன்வழி அக்கட்சி தெரிவிக்கிறது. மற்ற கட்சிகளைக் கூட்டணி ஆட்சி அமைக்க அழைக்கிறது. ஆனால், பழுத்த நாடாளுமன்றக் கட்சிகளான நேப்பாளிக் காங்கிரஸ், ஒருங்கிணைந்த மார்க்சிய - லெனினியக் கட்சி ஆகியவை அவ்வழைப்பை ஏற்க மனமுவந்து முன்வரவில்லை. பல்வேறு தடைகள் போடுகின்றன.

இக்கட்சிகளுடன் 25.05.2008 அன்று மாவோவியக் கட்சி, உடன்பாட்டுக்கான பேச்சு நடத்தியது. அப்போது மேற்கண்ட இருகட்சிகளும் விதித்த நிபந்தனை வஞ்சகமானது.

ஏற்கெனவே ஓர் இடைக்கால அரசமைப்புச் சட்டம் அங்கு செயலில் உள்ளது. அதன்படிதான் தேர்தல் நடந்தது. அச்சட்டத்தில், பிரதமரைப் பதவி நீக்கம் செய்வதெனில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அவ்விதியை நீக்கிவிட்டு, புதுவிதியைச் சேர்க்கவேண்டும் என்கின்றன.

சாதாரணப் பெரும்பான்மை கொண்டே ( ஒரு வாக்கு கூடுதலாக இருந்தாலே) பிரதமரைப் பதவி நீக்கம் செய்யலாம் என புது விதி சேர்க்கக் கோருகின்றனர்.

ஏன் இந்த மாற்றம்? தேர்தலில், நாடாளுமன்ற நாயகர்களான, தங்களைத்தான் தேர்ந்தெடுப்பார்கள் மக்கள்; தாங்கள் ஆட்சி அமைத்தால், சாதாரணப் பெரும்பான்மையில் பிரதமரை நீக்க அனுமதிக்கக்கூடாது; மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆட்சி நீக்கத்திற்கு தேவை என்று நிபந்தனை வைத்தால் தான் நீடித்து ஆள முடியும் என்று கருதியிருக்கிறார்கள்.

நேப்பாளி மக்கள், காலாவதி ஆகிப்போன தேர்தல் கதாநாயகர்களைப் புறந்தள்ளி, புரட்சிக் கதாநாயர்களை முதன்மைப்படுத்தி விட்டார்கள். நாடாளுமன்ற நரிகள் நயவஞ்சகத் திட்டங்கள் தீட்டத் தொடங்கிவிட்டன.

நேப்பாளப் பொதுவுடைமைக் கட்சி (மாவோவியர்) கூட்டணி ஆட்சி அமைத்தால் அதன் பிரதமரை எந்த நேரத்திலும் கவிழ்த்து விடக் கூடிய வாய்ப்பு தங்களுக்கு வழங்க வேண்டும் என்று கோருகின்றன. இந்த நிபந்தனையை மாவோவியர்கள் ஏற்கவில்லை. பேச்சு முறிந்துவிடவில்லை; தொடர்கிறது. முடிவு என்னவாகும் என்று இப்பொழுது சொல்ல முடியாது.

ஆனால் ஒன்று உறுதி. நாடாளுமன்ற நரியர்களின் நெஞ்சக அரியணையில் நிலையாக வீற்றிருக்கும் மன்னர் ஞானேந்திராவுக்கு அரசமைப்புச் சட்டத் தகுதி வழங்கவும், அமெரிக்க, இந்திய ஆதிக்கச் சக்திகள் உள்நாட்டு அரசியலில் புகுந்து விளையாடவும் இவ்விரு கட்சிகளும் கொல்லைப்புற ஏற்பாடுகள் செய்யவே, இந்தப் புது நிபந்தனையை விதிக்கின்றன.

பன்னிரண்டு கூறு( அம்ச) உடன்படிக்கையிலும், இடைக்கால அரசமைப்புச் சட்டத்திலும் இடம் பெறாத புதிய நிபந்தனையை விதிப்பது என்ன ஞாயம் ? என்ன நேர்மை?

ஞானேந்திரா, மே 27-க்குள் அரண்மனையைக் காலிசெய்து, வெளியேறிவிடவேண்டும் என்று பிரசண்டா கெடு விதித்தார். ஞானேந்திராவும் 23.05.2008 அன்று காத்மாண்டு அரண்மனையை விட்டு வெளியேறி, வேறொரு வெளிப்புற அரண்மனைக்குப் போயுள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

கடந்த ஏப்ரல் 10 -இல் தேர்தல் நடந்து, 25 - இல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபின், இத்தனை நாட்களாக, ஆட்சி அமைக்கப்படாமல் இருப்பது சரியல்ல. அரச விசுவாச வலதுசாரிகளும், இடதுசாரிகளும் போடும் முட்டுக்கட்டைகள் தாம் இத்தாமதத்திற்குக் காரணம். கடந்த இதழ் தமிழர் கண்ணோட்டத்தில் இந்நெருக்கடிகள் குறித்தும், இந்திய அமெரிக்கத் தலையீடுகள் குறித்தும் எழுதியிருந்தோம்.

இப்பொழுது நேப்பாளத்தில், புரட்சிகர சக்திகளை ஆட்சி அமைக்க விடாமல் முதலாளிய மற்றும் மார்க்சியத்திரிபாளர்கள் செய்யும் சதியும், மக்களால் தூக்கி எறியப்பட்ட மன்னரைத் தூக்கிச் சுமக்கச் செய்யும் முயற்சியும் ரசியப்புரட்சியில் நடந்த நிகழ்வுகளை நினைவு படுத்துகின்றன.

அங்கே ஜார் மன்னன்; இங்கே ஞானேந்திரா மன்னன். அங்கே ஜாரை ஆதரித்த அக்டோபரிஸ்ட் என்ற முதலாளிய நிலக்கிழமைக்கட்சி. இங்கே ஞானேந்திராவை ஆதரிக்கும் நேப்பாளி காங்கிரஸ். அங்கே ஜாரை ஆதரித்த மென்ஷ்விக் மார்க்சியக் கட்சி மற்றும் சோசலிசப்புரட்சிக் கட்சிகள். இங்கே ஞானேந்திராவை ஆதரிக்கும் ஒருங்கிணைந்த மார்க்சிய லெனினியக் கட்சி என்ற மார்க்சியத் திரிபுக் கட்சி.

இவை மட்டுமல்ல; இப்போது நேப்பாளத்தில் நடக்கும் அரசியல் நிகழ்வுகள் கிட்டத்தட்ட அப்போது ரசியாவில் நடந்த நிகழ்வுகளை நினைவூட்டுகின்றன.

1917 பிப்ரவரியில் ரசியாவில் புரட்சி வெடித்தது. மக்கள் வெளிப்படுத்திய எழுச்சியின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் ஜார்மன்னன் அதிகாரமுள்ள அமைச்சரவையையும் நாடாளுமன்றத்தையும் நிறுவினான். அக்டோபரிஸ்ட்டுகள் போன்ற முதலாளியப் பிரதிநிதிகள், மென்ஷ்விக் கட்சி, சோசலிசப் புரட்சிக் கட்சி, ஆகியவற்றின் இடதுசாரிப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் அமைச்சரவையில் இருந்தனர். சோசலிசப்புரட்சிக் கட்சியின் கெரென்ஸ்கி அமைச்சரவைக்குத் தலைமை தாங்கினார்.

லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சி, அமைச்சரவையில் சேரவில்லை. புதிதாக அமைந்த இடைக்கால அரசிடம் மூன்று கோரிக்கைகளை முன்வைத்தது.

1. ஜார்மன்னனை முற்றிலுமாகப் பதவி நீக்கம் செய்து ரசியாவைக் குடியரசு நாடாக அறிவிக்க வேண்டும்.
2. உலகப் போரிலிருந்து ரசியா விலகி விடவேண்டும்.
3. பெரும் நிலக்கிழார்கள் வசம் உள்ள நிலங்களை உழவர்களுக்கு வழங்கவேண்டும்.

இக்கோரிக்கைகளை இடைக்கால ஆட்சி ஏற்கவில்லை. எல்லா அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே என்று போல்ஷ்விக் கட்சி கொடுத்த முழக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு, மென்ஷ்விக்குகள் பெரும்பான்மை சோவியத்துகளைக் கைப்பற்றி இருந்தனர்.

தொழிலாளிகளும், சனநாயக சக்திகளும் பெட்ரோ கிராட், மாஸ்கோ போன்ற தலைநகரங்களில் வீதிக்கு வந்து போராடினர். வெளிநாடுகளில் தங்கிக்கொண்டு கட்சிக்குத் தலைமை தாங்கிய லெனின் நாடு திரும்பி போராட்டங்களை வழி நடத்தினார். நாடு கடத்தப்பட்டு சைபீரியாவில் தங்கியிருந்த ஸ்டாலின் திரும்பிவிட்டார்.

மன்னராட்சியை ஒழிக்கக்கோரி மக்கள் கொந்தளிக்கிறார்கள். கெரென்ஸ்கி, பட்டாளத்தை அனுப்பி மக்கள் போராட்டங்களை ஒடுக்க முனைகிறார்.

உடனே புரட்சியைத் தொடங்க வேண்டும் என்று போல்ஷ்விக் கட்சிக்குள் ஒரு சாரார் ஆவேசம் கொண்டனர். அப்போது லெனின் சொன்னார்.

“இந்த அரசு எவ்வளவு நாட்களுக்கு, முதலாளிகளுடைய செல்வாக்கிற்கு அடிபணிகிறதோ, அவ்வளவு நாட்களுக்கு அவர்களுடைய போர்த் தந்திரங்களின் தவறுகளை எடுத்துக்காட்டி, பொறுமையுடன் ஒழுங்குமுறைப்படி விடாமல் விளக்கப் பிரசாரம் செய்யவேண்டும். இந்த பிரசாரம் மக்களுடைய நடைமுறைத் தேவைகளைப் பிரதிபலிக்கக்கூடிய விளக்கமாக இருக்கவேண்டும். நாம் எவ்வளவு நாட்களுக்குச் சிறுபான்மையாக இருக்கிறோமோ அவ்வளவு நாட்களுக்குத் தவறுகளை எடுத்துக்காட்டி, அம்பலப்படுத்தி, கண்டித்து விமர்சனம் செய்து கொண்டே இருப்போம். இந்தக் காரியத்தைச் செய்கிறபோதே அரசாங்க அதிகாரம் முழுவதையும் தொழிலாளர் பிரதிநிதிகளுடைய சோவியத்துகளிடம் மாற்றப்படவேண்டியதின் அவசியத்தைப் பற்றியும் போதிப்போம்.”

மக்கள் கொந்தளிப்பு உச்சத்திற்குப் போனது. மக்கள் உணர்வுக்கு எதிரான நிலையில் மென்ஷ்விக்குகள், சோசலிசப் புரட்சியாளர்கள் போன்ற திரிபு வாதிகளின் தலைமையில் உள்ள சோவியத்துகளே பெரும்பான்மையாக இருந்தன. கட்சி தனது முடிவை மறு ஆய்வுசெய்தது. “எல்லா சோவியத்துகளும் கலைக்கப்பட்டன” என்று ஸ்டாலின் அறிவித்தார்.

தலைநகர் பெட்ரோ கிராடில் போல்ஷ்விக்குகள் கை ஓங்கி இருந்தது. இதனால், பெட்ரோ கிராடை ஜெர்மனியிடம் விட்டுவிடுவதென்று கெரன்ஸ்கி முடிவு செய்தார். இந்த நேரத்தில் புரட்சியைத் தொடங்க லெனின் முடிவு செய்தார்.

அவர் நடுவண் குழுத்தீர்மான வரைவை இவ்வாறு எழுதினார்.

... ஆகவே ஆய்தந்தாங்கிய எழுச்சியைத் தவிர்க்க முடியாது என்பதையும் அதற்கு வேண்டிய நிலைமைகள் பக்குவப்பட்டுள்ளன என்பதையும் கவனித்து, இதற்கு ஏற்றவாறு நடந்துகொள்ள வேண்டும் என்று கட்சி அமைப்புகள் யாவற்றிற்கும் நடுவண்குழு கட்டளை இடுகிறது.

இக்கட்டளை 1917 அக்டோபர் 20 அன்று நடுவண் குழுத்தீர்மானமாகப் பிறப்பிக்கப்பட்டது. அக்டோபர் 25 அன்று அரோரா போர்க்கப்பல் தனது பீரங்கிகளை உயர்த்தி குளிர்கால அரண்மனை மீது குண்டுமாரி பொழிந்தது.

இந்த அனுபவம், இன்று நேபாள மாவோவியர்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும். முடிந்த வரை, அமைதி வழியில் அரசியல் தீர்வு காண முயற்சிக்க வேண்டும். அதன்வழி எதிரிகளையும் கங்காணிகளையும் அம்பலப்படுத்தி மக்கள் எழுச்சி அலையை உயர்த்த வேண்டும்.

அமைதி முயற்சிக்குப் பலன் இல்லையேல் ஆய்தவழிதான் எஞ்சி உள்ளது. மாவோயிஸ்ட் படைவீரர்கள் மட்டும் போராடுவதாக இல்லாமல், மக்கள் பேரெழுச்சியும் படைவீரர்களின் போரும் கலந்ததாக இருக்க வேண்டும்.

நேப்பாளப் புரட்சி பின்னடையக் கூடாது!

# கெடுதலிலும் ஒரு நன்மை

■ பெ.மணியரசன்



தமிழர் கண்ணோட்டத்தின் மீது எவ்வளவு பேர் அக்கறை கொண்டுள்ளார்கள், அன்பு பாராட்டுகிறார்கள் என்பது, அதற்கு ஒரு நெருக்கடி வந்தபோதுதான் நன்கு தெரியவந்தது.

*"கேட்டிலும் உண்டோர் உறுதி*
*கிளைஞரை*
*நீட்டி அளக்குமோர் கோல்"*

என்றார் திருவள்ளுவப் பெருந்தகை. கெடுதலிலும் ஒரு நன்மை உண்டு. நம் மீது அன்பு செலுத்துவோரையும், நமக்கு எதிராகத் திரும்புவோரையும் அடையாளம் காண அது ஓர் அளவு கோல்.

இராசேந்திரச் சோழன், தணிகைச் செல்வன், பத்மநாபன் மூவரும் சேர்ந்து தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் இதழான தமிழர் கண்ணோட்டத்தின் பெயரைத் திருடி, அப்பெயரிலேயே 2008 மே இதழ் கொண்டுவந்துள்ளனர்.

இவர்கள் மூவரும் மூன்று வகையான வெவ்வேறு திசைகளில் அரசியல் மற்றும் அமைப்புச் செயல்பாடுகள் கொண்டவர்கள். த.தே.பொ.க. வுக்கு எதிரான வன்மம், பழிவாங்கல் ஆகியவை மட்டுமே இவர்களை இணைத்த "இலட்சியங்கள் !"

இந்த **முத்திசை மூவர்** கொண்டுவந்த இதழின் வெளியீட்டு விழா, சென்னை தியாகராயர் நகர், முத்துரங்கம் சாலையில், த.தே.பொ.க. அலுவலகத்திற்கு மிக அருகில் 01.05.2008 அன்று நடந்தது.

அவ்விதழை வெளியிட்டு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தோழர் தொல்.திருமாவளவன் உரையாற்றினார். பேராசிரியர் சுப.வீரபாண்டியன், தோழர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். அவர்கள் த.தே.பொ.க. வைத் தாக்கிப் பேசவில்லை என்றாலும், அம்மேடையில் உரையாற்றியதன் மூலம் அறங்கொன்ற செயலொன்றுக்கு அங்கீகாரம் வழங்க விரும்பினர் என்று புரிந்துகொள்ள முடிகிறது.

முத்திசை மூவர் கொண்டுவந்த மே மாதத் "தமிழர் கண்ணோட்டத்தைப்" பார்த்ததும் பலர் பதறிப்போய் என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர். முதலில் அவ்வாறு பேசியவர் "தலித் முரசு" ஆசிரியர் தோழர் புனிதப் பாண்டியன் அவர்கள். 06.05.2008 பிற்பகல் 2.00 மணி இருக்கும். "தோழர் எனக்குத் தமிழர் கண்ணோட்டம் கருத்தோடு மாறுபாடு உண்டு. ஆனால் அதன் நேர்மை, தரம் ஆகியவற்றை மதிப்பேன். இப்பொழுது அப்பெயரில் ஓர் இதழ் எனக்கு அஞ்சலில் வந்துள்ளது. அதைப் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்துவிட்டேன். என்ன நடந்தது? ஏன் இப்படி? " என்றார்.

சிறிது நேரம் கழித்து முனைவர் மே.து.இராசுகுமார் அவர்கள் தொலைபேசினார்.

"அவ்விதழைப்" பார்த்துவிட்டு அதிர்ச்சி தெரிவித்தார். " த.தே.பொ.க.வின் தமிழர் கண்ணோட்டத்திற்கே என்னைப் போன்றவர்கள் ஆதரவு. அரசியல் வேறுபாடுகள் நமக்குள் உண்டு. ஆனால் உங்கள் இதழ் நடத்தும் மார்க்சியம் சார்ந்த விவாதத்தை மதிக்கிறேன் " என்றார்.

அதே நாள் மாலை சகோதரி உமா அவர்கள் (பூங்குழலி) பதறிப்போய் தொலைபேசியில் விசாரித்தார். " என்னய்யா ஆச்சு? ஏன் இப்படி? " என்றார்.

மறுநாள் சின்னமனூரிலிருந்து திருவாளர் சோமசுந்தரம் அவர்கள் நமது புதிய தமிழர் கண்ணோட்டத்தைப் படித்துவிட்டு, "கூடுதல் அஞ்சல் கட்டணத்திற்காகக் கூடுதல் தொகை அனுப்பட்டுமா" என்று கேட்டு ஆறுதல் மொழி கூறினார். " நன்றி, இப்பொழுது தொகை வேண்டாம்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றேன். அதே போல் திருப்பூரிலிருந்து தோழர் எழில் சுப்பிரமணியம் (த.தே.வி.இ.) "கூடுதல் அஞ்சல் கட்டணத்திற்காக , நிதி வேண்டுமானால் அனுப்புகிறேன்" என்றார். " நன்றி, வேண்டாம்" என்றேன். தோழர் சோழநாடன் (த.தே.வி.இ.), நமது இதழைப் படித்து, நடந்ததை அறிந்து ஆறுதல் கூறினார். திருச்சியிலிருந்து தோழர் வீ.ந.சோமசுந்தரம், தஞ்சையிலிருந்து திரு வீர.வெண்.முருகு.வீரசிங்கம், குடந்தையிலிருந்து தோழர் சா.பேகன் (குடந்தைத் தமிழ்க் கழகம்), சிதம்பரத்திலிருந்து அண்ணன் இராம.ஆதிமூலம் , கோவையிலிருந்து தோழர் பாமரன், ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்பியவுடன் முனைவர் யோகீஸ்வரன், இலண்டனிலிருந்து திரும்பியவுடன் தோழர் கண.குறிஞ்சி, பட்டுக்கோட்டை யிலிருந்து தோழர் அரங்க. குணசேகரன் மயிலாடுதுறை யிலிருந்து தோழர் நாக.இரகுபதி, பொறியாளர் அருட்கண்ணனார் உள்ளிட்டு, இன்னும் எத்தனை எத்தனைபேர் அன்புபொழிந்து ஆறுதல் கூறினர் !

பலர் மடல் எழுதி யுள்ளார்கள். அவை இங்கு வெளியிடப்பட்டுள்ளன. நேரிலும் , தொலைபேசியிலும் இது குறித்து விசாரித்து ஆறுதல் கூறிய நண்பர்கள், தோழர்கள், பெரியவர்கள் பலரின் பெயர்கள் விடுபட்டுள்ளன. மன்னியுங்கள்.

இன்னும் அங்கங்கே த.தே.பொ.க. தோழர்களைத் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறி ஆதரவு தெரிவித்தோர் ஏராளம்.

பல்வேறு தரப்புகளைச் சேர்ந்தவர்களுக்குத் தமிழர் கண்ணோட்டத்தின் மீது இவ்வளவு அக்கறையும்,அன்பும் இருக்கிறது என்ற செய்தி தெரியவரும்போது, நமக்கு ஓர் அச்சம் ஏற்படுகிறது. இவர்களின் நம்பிக்கை கெடாதவாறு , தொடர்ந்து இதழைத் தரத்தோடு , நேர்மையோடு நடத்தவேண்டுமே என்ற பொறுப்பின் பாற்பட்ட அச்ச உணர்வு தான் அது.

த.தே.பொ.க. வானது மார்க்சிய-லெனினிய நெறியில், கூட்டுத் தலைமையின் கீழ் இயங்கும் தமிழ்த் தேசிய அமைப்பு. அதன் தலைமை மட்டுமல்ல, கிளை வரை உள்ள தோழர்கள், ஆதரவாளர்கள் ஆகிய அனைவரும் நம் இதழின் அடித்தளம் ஆவர். கூட்டு மனித உழைப்பின் சாதனைக்கு எல்லை ஏது?

எனவே, சான்றோர்கள், நல்லவர்கள், நம் நண்பர்கள் உள்ளிட்ட அனைவரின் அன்பும், ஆதரவும், பரிவும், பாசமும், மேலும் வளரும்படி தரமாக இதழை நடத்துவோம்.

இந்த இடத்தில், தமிழ்த் தேசியத்தின் மீதும் , தமிழ் மொழி உரிமையின் மீதும் அக்கறையுள்ளவர்களுக்குச் சில சொல்ல வேண்டியுள்ளது.

முத்திசை மூவர் போன்றவர்கள் த.தே.பொ.க. வின் தலைமைக் குழுவில் இருந்தவர்கள். இவர்கள் அவ்வப்போது கட்சியை விட்டு விலகுவது, வளர வேண்டிய இயக்கத்தைப் பலவீனப்படுத்தாதா என்று கேட்டு, அக்கறையுள்ளோர் சிலர் வருந்துகிறார்கள்.

"சாவே நேராத வீட்டிலிருந்து ஒரு பிடி அரிசி வாங்கி வா, உன் மகனை உயிர்ப்பித்துத் தருகிறேன்" என்று ஒரு தாயிடம் சொன்ன புத்தரின் உரையாடல் தான் நினைவுக்கு வருகிறது. எந்தக் கட்சியில், எந்த இயக்கத்தில் முத்திசை மூவர் போன்றவர்கள் விலக வில்லை? துரோகம் புரிய வில்லை?

நம் நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் இதுபோல் எவ்வளவோ நடந்துள்ளன. லெனின் தலைமையில், போல்ஷ்விக் கட்சி ரசியப் புரட்சியை நடத்திக் கொண்டிருந்த போதே, துரோகம் செய்துவிட்டு, நடுவண் குழுவிலிருந்தும் கட்சி யிலிருந்தும் விலகிய பிரபலங்கள் பலர்.

1917 நவம்பர் 7-இல் புரட்சி வெற்றி பெற்று போல்ஷ்விக் அமைச்சரவை நிறுவப்பட்ட ஒருவாரத்தில், நவம்பர் 15 அன்று, காமனெவ், ஜீனோவீவ், ரைக்கோவ், மில்யூடின் ஆகிய நால்வரும் போஸ்ஷ்விக் கட்சியின் நடுவண் குழுவிலிருந்து விலகினர். நவம்பர் 17 அன்று போல்ஷ்விக் அமைச்சரவையிலிருந்து, நோஜின், ரைக்கோவ், மில்யூடின், டியோடரோவிச், ஷியாப் நிகாவ், ரியாஜனோவ், யூரெனவ், லாரின் ஆகிய எட்டு பேரும் விலகினர்.

லெனின் தலைமை தாங்கிய போதே, இவர்கள் புரட்சிக்குத் துரோகம் புரிந்துவிட்டு வெளியேறினர்.

உலகத்திலேயே புடம் போட்டு எடுக்கப்பட்ட உயர்தரம் வாய்ந்த போராளிகள் அமைப்பு விடுதலைப்புலிகள்.அதன் ஒப்பற்ற தலைவர் பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் தளபதிகளாக இருந்து வீரப்போர் புரிந்து வெற்றிகள் பல

குவித்தவர்கள் மாத்தையா, கருணா ஆகியோர். பின்னர் அவர்கள் மிகக் கேவலமான துரோகிகளாக மாறினார்கள்.

மேற்கண்டவர்கள் விலகலால் - துரோகத்தால் போல்ஷ்விக் கட்சிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் நெருக்கடிகளும், பாதிப்புகளும் ஏற்பட்டிருக்கும். ஆனால் அத்துன்பங்கள் தற்காலிகமானவை. தகுதியுடையது தங்கும்; தகுதியற்றது மறையும். லெனினும், பிரபாகரனும் - போல்ஷ்விக் கட்சியும், விடுதலைப் புலிகள் அமைப்பும், எதிரிகளும் மதிக்கத்தக்க அளவில் வரலாற்றில் இடம் பெற்றுள்ளார்கள். துரோகிகள் , வரலாற்றின் குப்பைக் கூடைக்குப் போனார்கள்.

போல்ஷ்விக் கட்சிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் ஈடான அமைப்பல்ல த.தே.பொ.க. முத்திசை மூவரும் காமனேவ், மாத்தையா , கருணா போன்ற ஆற்றலாளர்கள் அல்லர். இப்படிப் பட்ட துரோகங்களை எதிர் கொண்டுதான் ஒரு புரட்சிகர இயக்கம் நிலைக்கவேண்டியுள்ளது என்பதை எடுத்துக்காட்டவே இந்த உவமைகள் இங்கு கூறப்பட்டன.

இஸ்க்ரா (தீப்பொறி) என்ற இதழை 1900-இல் லெனின் தொடங்கினார். இது தான் ரசியாவில் முதலாவதாக தேசம் தழுவி வந்த, சட்ட விரோதமான, மார்க்சிய ஏடாகும். வெளி நாடுகளில் தங்கி கட்சிப் பணியாற்றியபோது, இதனை லெனின் கொண்டுவந்தார். இதன் முதன்மை ஆசிரியராகவும், இயக்குனராகவும் லெனினே இருந்தார். பின்னர் மென்ஷ்விக்காக மாறிப்போன மார்த்தவ் உள்ளிட்ட சிலர் ஆசிரியர் குழுவில் இருந்தனர். இவ்விதழில் லெனின் எழுதிய கட்டுரைகள் தாம் புரட்சிகர மார்க்சிய - லெனினியத்தின் தத்துவ அடித்தளமாகப் பின்னர் விளங்கின.

திரிபு வாத மார்த்தவ், சில வெளிநாட்டுவாழ் ரசியர்களைச் சேர்த்துக்கொண்டு, இஸ்க்ரா இதழில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினார்.

லெனின் எழுத்துகளுக்கு அவர்கள் அவ்வப்போது தடைகள் போட்டனர். இதனால் லெனின் 1903- இல் இஸ்க்ராவின் ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகினார்.

பின்னர் மார்த்தவ்வை முதன்மை ஆசிரியராகக் கொண்டு, இஸ்க்ரா வெளிவந்தது. ஆனால் வரலாற்றில் அது சாதித்தது எதுவும் இல்லை. லெனின் இஸ்க்ராதான் இன்றைக்கும் வாழ்ந்து கொண்டுள்ளது.

நிகழ்ச்சிப் போக்குகள் வெவ்வேறு வழி கொண்டதாக இருந்தாலும், தமிழர் கண்ணோட்டம் தற்போது சந்திக்கும் சிக்கல்கள், லெனின் இஸ்க்ராவுக்கு ஏற்பட்ட சிக்கல்களை நினைவுபடுத்து கின்றன.

மனித மனம் எல்லைகாண முடியாத இருட்குகையாக இருக்கிறது. அதில் ஒரு பக்கம் ஒளி வீசும் ஒன்பது வகைக் கற்கள் கிடக்கின்றன ; இன்னொரு பக்கம், பாம்பும், தேளும், பச்சோந்திகளும் ஊர்ந்து திரிகின்றன.

அற்புதங்களும், அற்பங்களும் ஒரே கூரையின் கீழ் கூட்டுக் குடும்பம் நடத்தும் விந்தை வீடாக மனம் உள்ளது.

அறிவால், மனச்சான்றால் மனதை நெறிப்படுத்த முடிந்தோர் உயர்பண்பாளராக, உறுதிகுன்றா வீரராக விளங்குகிறார்கள். மனம் போன போக்கில் நடப்போர், மானம் போனால் கூட கவலைப்பட மாட்டார்கள்.

“**தற்காமம்**” - ஒரு வகை மனக்குலைவு நோய். மனதை நிலைக்குலையச் செய்து விடும். தன் உடல் அழகு, தன் பேச்சழகு, தன் எழுத்தழகு, தன் ஆற்றலழகு என ஒருவர் அணு அணுவாய்த் தன்னையே மிகையாக ரசித்துக் கொண்டிருப்பது தான் தற்காமம். தன்னம்பிக்கை வேறு; தற்காமம் வேறு.

பொதுவாக, காமத்துக்குக் கண் இல்லை என்பார்கள் ; தற்காமத்துக்கு வெட்கம் இல்லை எனலாம்.

மனிதர்கள் அனைவருக்கும் இந்த மனக்குலைவு வர வாய்ப் புண்டு. ஒரு பொருளின் - ஓர் எண்ணத்தின் எதிர்ப்பக்கத்தையும் பார்க்கத் தெரிந்தவர்கள், தன்னை அறியும் ஆற்றல் பெறுவர். அவர்கள் தங்கள் மனதைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவர்.

தன்னை அறியும் ஆற்றல் பெறாமல், தன்னை ரசிக்கும் சுவை கண்டோர் தடுமாற்றங்களுக்கு உள்ளாவர்.

வெளுக்கப்பட்ட ஆடை அணிந்து, வெளியே சென்று, வீடு திரும்பும்போது, அதில் வெளித் தூசியும், வியர்வை அழுக்கும் சேர்ந்திருக்கும் .அப்படி நம் மனதிலும் எண்ணங்கள் வடிவில் தூசிகளும், அழுக்குகளும் சேர்கின்றன. அறிவும், மனச் சான்றும் கலந்த “அழுக்கு நீக்கி எண்ணங்கள்” மூலம் மனதை நாம் அவ்வப்போது தூய்மைப்படுத்த வேண்டும்.

“*மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற*” - குறள்

நாம் இவ்வளவு சொல்வது, முத்திசை மூவர்களை இடித்துக் காட்டுவதற்காக அல்ல. அவர்களின் மனம் போல் நம் மனமும் அழுக்குப் படாமல், நான் உள்ளிட்ட நாம் அனைவரும் அன்றாடம் நம் மனதைத் தூய்மை செய்துகொள்ளவேண்டும் என்பதை எடுத்துக்காட்டவே.

நெருப்பாக நம் மனதில் தமிழ்த் தேசியப் புரட்சி எரிந்து கொண்டிருந்தால், அத் தீ நம் பகைச் சக்திகளை மட்டுமின்றி, நம் மன அழுக்குகளையும் சுட்டெரித்துவிடும்!

த.தே.பொ.க. தனது தாராளவாதப் போக்கைக்

கைவிட்டு இன்னும் இறுக்கமான கட்டமைப்புடனும், தோழர் களுடன் நெருக்கமான உறவுடனும் செயல்பட உறுதி எடுத்துக் கொள்கிறது.

## தோழமைக் குரல்கள்

**மனம் வருந்தினேன்**

நேற்றைய அஞ்சலில் தமிழர் கண்ணோட்டம் புதியதாய் வந்தது. அதற்கு முந்தைய நாள் தணிகைச் செல்வனை ஆசிரியராகப் பதிவு செய்து கொண்டுவரப்பட்ட தமிழர் கண்ணோட்டம் இதழையும் பார்த்தேன்.

மனம் வருந்தி அந்த நடைமுறையின் தவறு குறித்து தணிகைச் செல்வனுக்கு மடலும் எழுதினேன்.

அதைப்போல அ.பத்மநாபன் அவர்களின் நடைமுறையை ஏற்க முடியவில்லை. அப்படியே அவர் த.தே.பொ.க.விலிருந்து வெளியேறி முன்பு வெளியேறிய தோழர் களையும் இணைத்துக் கொண்டு இதழ் நடத்துவதாயினும் அதிலும் உறுதியாக இல்லாமல் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் போய் முடங்குவானேன்.

கொள்கை, நடைமுறை ஆகியவற்றில் உறுதியற்ற அவரின் போக்கு ஏற்கக் கூடியதாக இல்லை.

***-பொழிலன், புழல்சிறை***

**தங்கமல்ல பித்தளை**

தலைமை மீது கருத்து வேறுபாடு ஏற்பட்டு வெளியேறுவது எல்லாக் கட்சிகளிலும் நிகழக் கூடியதுதான். கட்சியை விட்டு வெளியேறிய பிறகு கட்சியையும் கட்சி சொத்துக்களையும் கைப்பற்ற முயல்வது முதலாளிய ஓட்டுக் கட்சிகளில் மட்டுமே இதுவரை காணப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் ஒரு மார்க்சிய, தமிழ்த் தேசிய அமைப்பில் இப்படி நிகழ்வது அவலமானது; ஆச்சரியமானது.

கட்சியின் பொதுச் சொத்தாகிய தமிழர் கண்ணோட்டம் வெளியீட் டாளராக கட்சி நியமித்த பணியை, கட்சியிலிருந்து வெளியேறிய பின் உரியவர்களிடம் ஒப்படைத்து விடுவதுதானே நியாயம். அதைவிட்டு தமிழர் கண்ணோட்டம் இதழையே கைப்பற்ற நினைப்பது திருட்டுத் தனமென்று கூறுவது கூட தவறானதல்ல. உன் பங்கிற்கு நீ அமுக்கு என் பங்கிற்கு இதோ நாங்கள் வருகிறோம் என்று கட்சியைவிட்டு எப்போதோ விலகிய தணிகைச்செல்வனும் இராசேந்திர சோழனும் ஓடிவருகிறார்கள் என்றால் இது கூட்டுக்களவாணித்தனமல்லவா? இதுவா இவர்கள் அனைவரும் ‘பேசிய’ தமிழர் அறம்.

‘உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்

கள்ளத்தால் கள்வேம் எனல்’

எனக்கூறும் வள்ளுவர் இவர்களை மன்னிப்பாரா?

முற்போக்காகப் பேசிக் கொண்டிருக்கும் அவர்களை இந் நிகழ்வின் மூலம் வரலாறு உரசிப் பார்த்திருக்கிறது. இச்சோதனையில் அவர்கள் தங்கமல்ல, பித்தளைதான் என்று அம்பலப்பட்டுப் போயுள்ளார்கள்.

அ.பத்மநாபன், ராசேந்திரசோழன், தணிகைச் செல்வன் போன்றோரின் கூட்டுக் கொள்ளைக்கு துணைபோகும் எவரும் அவர் எத்தனை உயர்ந்த பீடத்தில் அமர்ந்து உபதேசித்துக் கொண்டிருந்தாலும் அறங்கொன்றவர்களே.

தமிழர் கண்ணோட்டம் எனும் பெயரை மட்டுமானால் இவர்கள் பிடித்துக் கொண்டு தொங்கலாம். ஆனால் தமிழர் அறச் சிந்தனையில் மூழ்கி முத்தெடுக்கும் புரட்சிகரத் தமிழ்த் தேசிய சிந்தனையை இவர்களால் கைப்பற்ற முடியாது. ‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்’ இது இவர்களுக்கும் பொருந்தும்.

வரலாறு வைத்த சோதனையில் தமிழர் கண்ணோட்டம் ‘புதிய தமிழர் கண்ணோட்டமாக’ முன்னோக்கிப் பாய்ந்துள்ளது. இந்த அறிவுக் கதிரவனை பத்மநாபன் வகையறாக்களால் மறைக்க முடியாது.

***-நடவரசன், ஓசூர்***

**போகப்போகத் தெரியும்**

என்ன கொடுமை! தமிழர் கண்ணோட்டம்/ புதிய தமிழர் கண்ணோட்டம்.

‘மண்மொழி’ இதழ் நடத்துபவர் தமிழர் கண்ணோட்டத்தில் கட்டுரை எழுதியுள்ளார். எப்படி? எதிரிக்கு எதிரி நண்பன் என்பதாலா?

போகப் போகத் தெரியும் எல்லாப் பூக்களின் வாசமும் புரியும்.

***-வெ.நாராயணன், காஞ்சிபுரம்***

**ஒன்றும் செய்ய முடியாது**

தமிழர் கண்ணோட்டம் இதழ் தலைப்பை வேண்டுமானால் துரோகிகளால் பறித்துக் கொள்ள முடியும். தமிழர் கண்ணோட்டத்தின் சிந்தனை மரபையோ த.தே.பொ.க.வின் வளர்ச்சியையோ எவராலும் ஒன்றும் செய்யமுடியாது.

***- ஆ.சு. மணியன், திருத்துறைப் பூண்டி***

**புல்லுறுவிகளின் ஊடாகத்தான்...**

புதிய தமிழர் கண்ணோட்டம் கண்டேன். துரோகி ஒருவர் வெளியேறியதையும் அவரின் இழிசெயலையும் அறிந்தேன்.

தமிழனின் நிலை இதுதான். என் செய்வது? இத்தகைய புல்லுருவிகள் ஊடாகத்தான் நாம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. தமிழனின் வரலாற்றில் இத்தகைய களைகள் ஏராளம் உளவே!

மார்க்சியம் இம்மண்ணில் தமிழ்த் தேசிய விடுதலையை ஈட்டித் தருவதற்கு நீங்கள் செய்யும் வினையாற்றலுக்கு என் போன்றோர் துணை என்றும் உண்டு.

***- ச.ந.ச.மார்த்தாண்டன், வழக்குரைஞர், சத்துவாச்சாரி, வேலூர்***


**துணை இருப்போம்**

தமிழர் கண்ணோட்டத்திற்கு நிகழ்ந்துள்ள நிலை அறிந்து வருந்தினேன். மனம் தளராதீர்கள். துணை இருப்போம். இயன்ற நிதி சேகரித்து அனுப்புகிறேன்.

***-காரை மைந்தன், சென்னை-49***

# நவீன இந்திர சபையின் பேரழிவுத் திட்டம்

■ ம.செந்தமிழன்



ஆரியர்கள் தங்கள் கடவுளை நோக்கி இப்படி வேண்டினர்.

*‘நாங்கள் மனிதர்களைக் காண்பவனும், அனைத்தையும் அறிபவனும், இந்திரனுடைய பானமுமாகிய உன்னைப் போற்றி பிரஜைகளையும் உணவையும் பெறுவோமாக’* [1]

குடபுலவியனார் எனும் தமிழறிஞர், பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கிப் பாடும் பாடல் இது,

‘நீர் இன்று அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும், உயிரும் படைத்தி சினோரே
வித்து வான்நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உ தவாதே - அதனால்
அடுபோர்ச் செழிய, இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கில் நீர் நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளா தோரே [2]

*இதன் பொருள் சுருக்கம் - நீர் இன்றி வாழாது உடல். உடலுக்கு உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவராவார். உணவால் அமைந்ததுதான் உடலாகும். நீரையும், நிலத்தையும் ஒருங்கு கட்டி வேளாண்மைக்கு உதவியவரே உலகத்தில் உயிரையும், உடலையும் நிலை நிறுத்தி வாழ்பவராவார். ஆகவே எங்கும் குளத்தை வெட்டி வளத்தைப் பெருக்குவாயாக.*

உணவு உற்பத்தியின் அடிப்படை தெரியாத ஆரியர் கடவுளிடம் பிச்சை வேண்டினர். உணவு உற்பத்தி மட்டுமல்லாது தாவரவியல், உடலியல் மற்றும் புவியியல் உள்ளிட்ட பல்துறைகளிலு ம் நிபுணத்துவம் பெற்றிருந்த தமிழரின் அறிவுசால் புலவர் மன்னனுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்த முரண்பாட்டின் வரலாற்றுத் தொடர்ச்சிதான் இன்றைய உணவுப் பஞ்சமும் அது குறித்த விவாதங்களும்,

ஆரியக் கருத்தியலின் நவீன வடிவமாக உலகமயம் தலை விரித் தாடுகிறது.அது இப்போதும் உணவு உற்பத்தியை வெறுக்கிறது. அதேவேளை, அதற்கு உணவும் தேவை. போர்களாலும், பொருளாதாரத் தடைகளாலும் வேள்விகள் தொடர்கின்றன. உலகெங்குமுள்ள உணவு உற்பத்தியாளர்களின் உதிரத்தால் யாக குண்டங்கள் நிரம்புகின்றன.

இந்திரனுடைய இடத்தில் இப்போது ஜார்ஜ் புஷ். உற்பத்தியில் ஈடுபடாத ஊளைச்சதை வர்க்கத்தினரின் கண்கண்ட தெய்வம் புஷ். வடஅமெரிக்காதான் இந்திரலோகம்.

(ஆரிய மயமாக்கப்பட்ட இந்திரன் வேறு ; தமிழ் இந்திரன் வேறு என்ற கருதுகோள்கள் ஆய்வாளர் களால் வைக்கப்படுகிறது. இங்கு ஆரிய மயப்பட்ட இந்திரனே உவமையாக்கப்பட்டுள்ளான்)

இந்த நவீன இந்திரன் கடந்த மே மாதம் 3-ம் தேதி பின்வருமாறு ஆர்ப்பரித்தான்.

***'இந்தியாவில் 35 கோடி நடுத்தர வர்க்கத்தினர் இருக்கிறார்கள். இது அமெரிக்காவின் ஒட்டுமொத்த மக்கள் தொகையை விட அதிகம். இந்த நடுத்தர வர்க்கத்தினரின் செல்வம் பெருகத் தொடங்கியுள்ளது. ஆகவே இவர்கள் சத்தான உணவு வகைகளை அதிகம் உண்கிறார்கள். இதுவே உணவுப் பொருள் விலையேறக் காரணமாகும்.***[3]

புஷ் பேசியது ஒட்டுமொத்த உலக உணவுப் பஞ்சம் குறித்து அல்ல. அமெரிக்காவில் உணவுப்பொருள் விலை ஏறுவதைப் பற்றி மட்டுமே என்பதை உள்வாங்கிக் கொண்டு இச்செய்தியைப் பார்க்கும்போது, இந்த நவீன இந்திரனின் வஞ்சக வலை நம் காலடியில் கிடப்பதை உணர முடிகிறது.

'அமெரிக்கக் குடிமக்களுக்கான உணவை இந்திய நடுத்தர வர்க்கத்தினர் சாப்பிடுகின்றனர். ஆகவே , 35 கோடி இந்திய நடுத்தர வர்க்கத்தினர் பட்டினிக்கிடக்க வேண்டும். அல்லது சத்துக் குறைந்த உணவை உண்ண வேண்டும். அப்போதுதான் அமெரிக்கர்களின் உணவுத் தேவை நிறைவேறும்' என்பது புஷ் பேசாத ஆனால் மறைபொருளாக உணர்த்திய கருத்து.

அமெரிக்கவெளியுறவு அமைச்சர் கண்டலீசா ரைஸ் ஏப்ரல் இறுதி வாரத்தில் இதே கருத்தைச் சற்று வெளிப்படையாகவே பேசியிருந்தார்.

***'உணவு உற்பத்தியில் ஏற்பட்ட சரிவுதான் விலையேற்றத்தின் காரணம் என்பது சரியல்ல; உணவு உட்கொள்ளுதலில் ஏற்பட்ட வளர்ச்சியே காரணமாகும். உதாரணமாக, சீனாவும் இந்தியாவும் இக் காரணத்தினால் உணவுப் பொருட்களைத் தத்தமது எல்லைக்குள்ளேயே பாதுகாத்துக் கொள்கின்றன ' என்றார் ரைஸ்.***[3]

இந்தியாவும், சீனாவும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வது, அவ்விரு நாட்டு மக்களின் தேவைக்காக அல்ல; அமெரிக்கர்களின் வயிற்றை நிரப்பவே என்ற கருத்தையே ரைஸ், புஷ் ஆகியோரின் பேச்சுகள் உணர்த்துகின்றன.

தமிழர்கள் உற்பத்தித்துறையில் ஈடுபட்டபோது, வேள்வி நடத்துவதையே தொழிலாகக் கொண்டு சேவை த்துறையின் வழியே அதிகார வர்க்கத்தினர் ஆன ஆரியர்களுக்கும், தற்போதைய தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட சேவைத்துறைகளின் வழியே மேட்டுக் குடிகளாகியுள்ள சர்வதேசச் சோம்பேறிகளுக்கும் இடையே பெரிய வேறுபாடுகள் கிடையாது.

வங்கி, காப்பீடு, சுற்றுலா, கேளிக்கை, சூதாட்டம், திரைப்படம், தொலைக்காட்சி, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட சேவைத் துறையினரே, உலகமயப் பொருளா தாரத்தில் உயர் வருவாய் பிரிவினர். விவசாயம், கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட நேரடி உற்பத்தித் துறையினர் அனைவரும் கடன் சுமையில் உழல்கின்றனர்.

உடல் உழைப்பை வெறுக்கும் - உற்பத்தி அறிவியலைக் கற்கவியலாத, சுரண்டல்காரர்களும் சோம்பேறிகளும், முட்டாள்களும் சேர்ந்து தந்திரமாகத் தேர்ந்தெடுத்த சமூகப் பொருளாதாரக் கோட்பாடுதான் உலகமயப் பொருளாதாரம்.

உலக வங்கி கடந்த பிப்ரவரி மாதம் முதல், 'உணவுப் பஞ்சத்தினால் நாடுகளுக்கிடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது' என்று தொடர் பரப்புரை செய்து வருகிறது.

உணவுப் பொருள் பற்றாக்குறை என்பதன் உண்மையான பொருள் என்ன என்று ஆராய்ந்தால் , நவீன இந்திரனின் அவனது பக்த கோடிகளின் தந்திரம் புரியும்.

இந்தியாவின் உணவு உற்பத்தி கடந்த ஆண்டு (2007) 217 லட்சம் டன் இந்த ஆண்டு (2008) 227 லட்சம் டன் ஆக உற்பத்தி கூடியுள்ளது.[4]

இந்த நிலையிலும் உணவுப் பற்றாக்குறை ஏற்படக்காரணம், ரிலையன்ஸ்,வால்மார்ட் உள்ளிட்ட பன்னாட்டு முதலாளிய நிறுவனங் களும், ஆன் - லைன் சூதாடிகளும் உணவுப் பொருட்களை வாங்கிப் பதுக்கி வைப்பதே ஆகும்.

இந்தப் பதுக்கல்காரர்களும், இந்திய அரசும் கைகோத்து, பேரளவு உணவுப் பொருட்களை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. விளைவாக, உள்நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதுவும் போதாது, 35 கோடி மக்களின் உணவையும் இங்கு அனுப்பு, என்றுதான் அமெரிக்க ஓநாய் ஊளையிடுகிறது.

ஒருவேளை இந்திய அரசு இந்தக் குரலுக்குச் செவி சாய்க்க மறுத்தால், அமெரிக்கா உணவுப் பொருட்களுக்காக இந்தியா மீது போர் தொடுக்கும் என்ற மறைமுக எச்சரிக்கையைத்தான் உலகவங்கி வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இது இந்தியாவுக்கு மட்டுமல்ல உலகம் முழுதும் உள்ள உழைக்கும் வர்க்கத்தினருக்கு எதிராக எழுந்துள்ள அறைகூவல்.

பதினேழாம் நூற்றாண்டில் காலனி ஆதிக்க நாடுகளால் உருவாக்கப்பட்ட தொழிற்புரட்சி, தற்போது அதன் கோரத்தாண்டவத்தை ஆடத் தொடங்கி யுள்ளது. உற்பத்தித் துறைகளை எந்தளவிற்கு சாமானியர் களிடமிருந்து பிடுங்க முடியுமோ அந்தளவிற்கு அது பிடுங்கிவிட்டது. பெருவாரி மக்கள் - உழைப்பாளர்கள், உற்பத்தி அறிவியல் வல்லுனர்கள் அனைவரும் இன்று கடைநிலை மாந்தராக்கப்பட்டுள்ளனர்.

மார்க்சியப் பொருளியல் தத்துவம் விளக்கும் நிலம் , நீர் உள்ளிட்ட **உற்பத்திப்பொருட்களும்,** உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் **உற்பத்திக் கருவிகளும்** முற்று முழுதாகப் பண்டமாக்கப்பட்டுள்ளன. இவற்றைக் காட்டிலும் கொடிய முறையில் **"உழைப்பு"** எனும் மனித ஆற்றல் பண்டமாக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் ஓர் உற்பத்தியாளர், தமது நிலம், நீர் மற்றும் உழைப்பு ஆகிய அனைத்தையும் பணமதிப்பில் மட்டுமே கணக்கிட முடியும். பணத்தைக் கட்டுப்படுத்துவதும்

அதன் மதிப்பைத் தீர்மானிப்பதும் நவீன இந்திர சபையின் கைகளில் உள்ளது. ஆகவே, இன்றைய உற்பத்தியாளர், சாரத்தில், தற்சார்பு அற்றவராகியுள்ளார். நேரடிப் பொருளில், இன்றைய உற்பத்தியாளர், நிறுவன அதிகார வர்க்கத்தின் அடிமையாகி விட்டார்.

பசுமைப்புரட்சி, நீலப்புரட்சி, வெண்மைப் புரட்சி என்ற பெயர்களில் நடத்தப்பட்ட மும்முனைத் தாக்குதல்களின் விளைவு இது.

தொழிற்புரட்சியின் வளர்ந்த காலகட்டமான 20 -ஆம் நூற்றாண்டு, சமூகத்தினரை

1. மேட்டுக் குடியினர்
2. நடுத்தர வர்க்கத்தினர்
3. அடித்தட்டு மக்கள்

என்ற மூன்று பிரிவுகளாகப் பிரித்தது. இம்மூவருக்குமான தனித்தனிப் பொருளியல் கடமைகள் நிர்ணயிக்கப்பட்டன.

மேட்டுக்குடியினர் தொழில்துறைப் பெருமுதலாளிகளாகச் செயல்பட்டனர். உணவு, உடை , உறைவிடம் ஆகிய துறைகளின் மீதான **அடிப்படை உற்பத்தி** நடவடிக்கைகளைத் தமது நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது இம் முதலாளிகளின் நோக்கமாக இருந்தது. இந்த அடிப்படை உற்பத்தித் துறைகளில் ஈடுபட்ட மக்களைத் தமது, தொழில்துறை உற்பத்திக் கருவிகள் மற்றும் தொழில் நுட்பங்களின் சார்பாளர்களாகப் பெருமுதலாளிகள் மாற்றினர்.

தொழிற்சாலைப் பணியாளர்களாகவும், சேவைத் துறைப் பணியாளர்களாகவும் பணியாற்ற வேண்டிய கடமை, நடுத்தர வர்க்கத்தினருக்கு விதிக்கப்பட்டது.

நடுத்தர வர்க்கத்தினரின் பெரும்பகுதியினர் அடிப்படை உற்பத்தித் துறைகளில் பல நூற்றாண்டுகளாக ஈடுபட்ட மரபினர் ஆவர். இவர்களை நேரடி/ அடிப்படை உற்பத்தியினின்று பிரித்து எடுப்பதற்கான மாயவலையே 'கிராமம் தாழ்ந்தது, நகரம் உயர்ந்தது' எனும் புனைவு. பொறியியல், மருத்துவம், தொழில் நுட்பம் ஆகிய கல்வித் திட்டங்களும், கவர்ச்சிகர ஊதியங்களும் இம்மாயவலையின் கண்ணிகள்.

கடைசியில் இன்று , நடுத்தர வர்க்கத்தினர், தமது மரபு சார்ந்த அறிவியலை, தொழில் நுட்பத்தை இழந்து, மேட்டுக்குடியினரின் அடிமைகளாகியுள்ளனர்.

அடித்தட்டு மக்களின் கடமை, உணவு உற்பத்தியில் மட்டும் தொடர்ந்து ஈடுபடுவது. உடை, உறைவிடம் ஆகிய பிற அடிப்படை உற்பத்தித் துறைகளைக் கால ஓட்டத்தில் எந்திரமயமாக்கியது முதலாளிய வர்க்கம். உணவு உற்பத்தியின் அனைத்துச் செயல்பாடுகளும் இயற்கை சார்ந்து இருப்பதால், அடித்தட்டு வர்க்கத்தினரின் ஒரே உற்பத்தி நடவடிக்கையாக வேளாண்மை மட்டுமே எஞ்சியது.

மூன்று நூற்றாண்டுகளாக மேட்டுக்குடியினர் ஒட்டுமொத்த மானுட/ இயற்கை ஆற்றலை உறிஞ்சி எடுத்ததன் விளைவாக, உணவு உற்பத்தியின் வளர்ச்சி வேகம் குறைந்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட நிறுவன அதிகாரவர்க்க நாடுகளில் உணவு உற்பத்தித்திறன் குறைந்துள்ளது. இக்குறைபாட்டைச் சரிக்கட்ட அந்நாடுகள் இந்தியா போன்ற வேளாண் உற்பத்தி அதிகம் நடைபெறும் நாடுகளையே நம்ப வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் நவீன இந்திர சபை புதியதொரு தந்திர நடவடிக்கையைத் தேர்ந்தெடுத்துள்ளது.

'நடுத்தர வர்க்கத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பது' என்பதே அந்தத் தந்திரம்.

**நிறுவன அதிகார வர்க்கத்தினரைப் பொறுத்தவரை - நடுத்தர வர்க்கத்தினரின் தேவை - முடியும் காலம் நெருங்கிவிட்டது.**

**நேரடி உற்பத்தியில் ஈடுபடாத, மரபு சார் தொழில் நுட்பங்களை மறந்துபோன, நடுத்தர வர்க்கம் சேவைத்துறையின் வழிமட்டுமே பணம் ஈட்டுகிறது. நடுத்தர வர்க்கத்தினர் கூடுதல் உணவு நுகர்வோராக வளர்ந்து இருப்பது நிறுவன அதிகார வர்க்கத்திற்குப் பெரும் இடையூறாக மாறியுள்ளது.**

இதே நடுத்தர வர்க்கத்தினர்தாம், பெருமுதலாளிகளின் நுகர்வோராக இருந்து வந்துள்ளனர். இப்போது, பெருமுதலாளிய உற்பத்தி முறையில் மாற்றம் ஏற்படஉள்ளது. கார், பைக், தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி உள்ளிட்ட பொருட்களுக்கான சந்தை இன்னும் சில ஆண்டுகளில் வெகுவாகக் குறைந்துவிடும்.

இப்பொருட்களின் தற்போதைய விற்பனை, கடன் திட்டங்களின் வழியே மட்டுமே நடைபெறுகின்றது. ரொக்கப் பணம் கொடுத்து இப்பொருட்களை வாங்குவோர் மேட்டுக்குடியினர் மட்டுமே. நடுத்தர வர்க்கத்தினரில் மிகச் சிறுபான்மையினரே ரொக்கக் கொள்முதல் செய்கின்றனர்.

நடுத்தர வர்க்கத்தினரில் மிகப் பெரும்பான்மையினர் கடனாளிகள் ஆகிவிட்டனர். வணிகமய ஆங்கில மருத்துவமுறையும், வாழ்க்கை முறையும் நடுத்தர வர்க்கத்தினரை நிரந்தர நோயாளிகளாக மாற்றிவிட்டது. இன்றைய நடுத்தர வர்க்கத்தினர் கடனாளிகளாகவும், நோயாளி களாகவும் உள்ளனர்.

நிறுவன அதிகார வர்க்கத்தின் சிறப்புப்பொருளாதார மண்டலங்கள். நகரமயமாக்கல், விளை நிலங்களை வீட்டு மனைகளாக்கல், விளை நிலங்களின் மீது நான்கு வழி, ஆறு வழிச் சாலைகள் அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளால் அனைத்து அடிப்படைப் பொருட்களின் விலைகளும் உயர்கின்றன. சென்னை போன்ற பெரு நகரங்களில் மாதம் 15,000 ரூபாய் ஈட்டினால் மட்டுமே **ஓரளவு** நாகரிக வாழ்க்கை நடத்த முடியும் என்பதே இந்நிலைக்குச் சான்று.

இந்தப்போக்கு மேலும் தீவிரமடையும்போது, நடுத்தர வர்க்கத்தினர் நுகர்வோராக நீடிக்க முடியாது.

நிறுவன அதிகார வர்க்கம் உணவு, உடை,உறைவிடம் ஆகிய அடிப்படை உற்பத்தித் துறைகளிலும், கேளிக்கை தொடர்பான சேவைத்துறைகளிலும்

மட்டுமே தனது மூலதனத்தைக் குவிக்கும். இத்துறைகளிலும் மனித உழைப்பு மிகக் குறைந்த அளவுதான் தேவைப்படும். சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் அமைப்பை உற்று நோக்கினால் இவ்வுண்மை விளங்கும்.

பெட்ரோல் உள்ளிட்ட எரி எண்ணெய் வளமும் அபாயக்கட்டத்தை நெருங்கிக் கொண்டுள்ளது. நடுத்தர வர்க்கத்தினரின் **‘ எண்ணிக்கையைக் கட்டுக்குள்’** கொண்டு வருவதன் வழி, எண்ணெய் வளத்தைத் தாங்கள் மட்டுமே காலகாலத்திற்கும் அனுபவிக்கலாம் என்று நிறுவன அதிகார வர்க்கம் கருதுகிறது.

இன்னொன்று, படித்த நடுத்தர வர்க்கத்தினர் ‘அளவுக்கு மீறி’ எண்ணிக் கையில் பெருகுவதை ஆபத்தின் அறிகுறியாக நிறுவன அதிகார வர்க்கம் பார்க்கிறது.

அதிருப்தியுற்ற மக்களின் கோபங்களைப் பயன்படுத்திக் கொண்டு, ‘உயர் தொழில் நுட்ப பயங்கரவாதிகள்’ உருவாகிவிடுவதாக அது அச்சப்படுகிறது.

பயோ - டீசல் எனப்படும் தொழில் நுட்பத்தின்படி, உணவுக்கான விளை பொருட்களை டீசல் தயாரிக்க அனுப்புகிறது நிறுவன அதிகார வர்க்கம்.

புவிவெப்பம் குறித்த அச்சமும் இந்தப் புதிய தந்திரத்தின் காரணங்களில் ஒன்றாக்கப்படுகிறது.

பூமிப் பந்து எதிர்கொள்ளப் போகும் இயற்கைப் பேரிடர்களால் , உணவுஉற்பத்தி வெகுவாகக் குறையும் அபாயம் நெருங்குகிறது.

புஷ் கடந்த மே 3-ம் நாள் பேசியதன் சில முகாமைக் கருத்துகளைக் காண்போம்.[3]

1. ‘நான் ஒரு எத்தனால் நபர்’ என்று உங்களுக்குத் தெரியும்.

எண்ணெய் மற்றும் எரிவாயுத் தேவைகளுக்கான இடைக்கால

நடவடிக்கையே எத்தனால் மற்றும் பேட்டரி தொழில்நுட்பங்கள்.

2. நம்மை விரும்பாத நாடுகளிடம் எண்ணெய் கேட்பதைக் காட்டிலும்

நமது விவசாயிகளை எத்தனாலுக் காகப் பயிரிடச் சொல்வது சிறந்தது என எண்ணுகிறேன்.

3. காலநிலை மாறுகின்றது. உணவு உற்பத்தி குறைவதற்கு இதுவும் ஒரு காரணம்தான்.

இந்த மூன்று கருத்துகளிலும் உள்ள மர்மங்களை அவிழ்க்க வேண்டும்.

1. எத்தனால் மற்றும் பேட்டரிப் பயன்பாடு, ஒரு **இடைக்கால** நடவடிக்கை என்பதன் வழி,

புஷ் ஏதோ ஒரு **நிரந்தரத் தீர்வை** மனதில் கொண்டுள்ளது தெரிகிறது.

2. அமெரிக்க விவசாயிகள் எத்தனால் தயாரிக்கப் பயிரிட்டால், அமெரிக்கர்களின் உணவுக்காக இந்தியா போன்ற நாடுகள் தான்பயிரிட வேண்டும்.

3. புவிவெப்பம் குறித்து அலட்சியம் காட்டுவதுபோல் பாசாங்குசெய்துவரும் புஷ்,உணவு உற்பத்தியில், புவிவெப்பம் மாற்றம் நிகழ்த்துகிறது என்பதை ஒப்புக்கொள்கிறார்.

இம்மூன்று மர்ம அறிவிப்புகளினின்று மூன்று விளக்கங்களையும் நாம் பெறலாம்.

1. எண்ணெய்த் தேவையை தற்காலிகமாகச் சமாளித்துவிட்டால், உலகெங்கும் உள்ள எண்ணெய்ப் பயன்பாட்டை வெகுவாகக் குறைத்து நிரந்தரத் தீர்வை எட்டலாம்.

2. அமெரிக்கர்களுக்கு உணவு தயாரிக்க மறுக்கும் நாடுகளை மிரட்டியும், ராணுவ/பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொண்டும் பணிய வைக்கலாம்.

3. புவி வெப்பத்தின் அழிவுகளை அமெரிக்கா உணர்ந்தே உள்ளது. உலகில் அனைவருக்கும் தேவையான உணவு உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்படும் என்பதை அமெரிக்கா எதிர்நோக்கியுள்ளது.

நடுத்தர வர்க்கத்தினரின் உணவு குறித்துப் பேசிய நவீன இந்திரனின் மனதில் மறைந்துள்ள திட்டம் நடுத்தர வர்க்கத்தினரைப் பட்டினியால் / சத்துக்குறைபாட்டால் அழிப்பது. எஞ்சியவர்களை மேட்டுக் குடியினருக்குச் சேவகம் செய்யும் முழு நேர அடிமைகளாக மாற்றுவது என்பதே ஆகும்.

வேதி உரங்களைப் பசுமைப் புரட்சியின் பெயரால் அறிமுகப்படுத்திய பன்னாட்டு நிறுவனங்கள் இன்று இயற்கை வேளாண்மையிலும் தமது கவனத்தைத் திருப்பியுள்ளன.

வேதிப்பொருள் வேளாண்மையினால், உணவுப் பொருட்கள் நஞ்சாக மாறியுள்ளதை முற்போக்கு அமைப்புகள் மட்டுமல்ல, பன்னாட்டு நிறுவனங்களின் துணை அமைப்புகளும் பரப்புரை செய்கின்றன.

ரிலையன்ஸ் உள்ளிட்ட பெரு முதலாளிய உணவுப்பொருள் நிறுவனங்கள் இயற்கை வேளாண் உற்பத்திப் பொருட்களை அதிக விலையில் விற்பனை செய்கின்றன.

மேட்டுக்குடியினரின் நல் வாழ்விற்குத் தேவையான இயற்கை விளை பொருட்களை உற்பத்தி செய்யும் உழவர்களை உருவாக்குதலே இந்நடவடிக் கைகளின் நோக்கம்.

இந்திய ஆதிக்க சாதியினரும், வர்க்க மேட்டுக்குடியினரும், நிறுவன அதிகார வர்க்கத்தின் பங்குதாரர்களாகி விட்ட அரசியல் தலைவர்களும் புதிய இந்திர லோகமான வடஅமெரிக்காவை நோக்கி மந்திரங்களை உச்சாடனம் செய்கின்றனர்.

நவீன இந்திரன் தலைமையில் வேள்வித் தீ வளர்கிறது. பலி கொடுக்கப் படவேண்டியவர்களின் பட்டியல் தயாராகிறது.

**சான்றுகள்**


1. ரிக்வேதம் 2004 -13

2. புறநானூறு 18 : 18- 30

3. Zee News இணையதளம்

4. பசுமை விகடன் (10/05/08) - 24/05/2008)


தமிழரின் உற்பத்தி அறிவு குறித்த அணுகுமுறைக்குப் பின்வரும் கட்டுரை பயன்பட்டது, “தீண்டப்படாதவர்களின் தீண்டப்பட்ட அறிவியல் தொழில்நுட்பம் - கோ .ரகுபதி”

( புதுவிசை ஏப் - ஜூன் 2008)

■

## தமிழகம் வெளியாரின் வேட்டைக்காடா? தமிழர்களுக்குப் பிச்சை ஓடா?

# திருவெறும்பூர் மிகுமின் ஆலைமுன் ஆவேச மறியல்



தமிழ்நாடு தொழில், வணிகம், வேலை வாய்ப்பு அனைத்திலும் வெளியாரின் வேட்டைக் காடாகி விட்டது. இனவழிப்பட்ட அரசியல் தலைமை தமிழர்களுக்கு இல்லாது போய்விட்டதால், “புகுந்தவனுக்கெல்லாம் சொந்தம் புறம் போக்கு நிலம்” என்பது போல் ஆகிவிட்டது.

தமிழகத்தில் உள்ள இந்திய அரசுத் துறை நிறுவனங்களான பெல், ஆய்தத்தொழிற்சாலைகள், பெட்ரோலியம், ரயில்வே , நெய்வேலி நிலக்கரி, வருமான வரி , உற்பத்தி வரி அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்திலும் பெரிதும் வேற்று மாநிலங்களின் அயல் இனத்தாருக்கே வேலை தருகிறார்கள். இந்த போக்கின் சிகரமாக திருவெறும்பூர் மிகுமின் ஆலை(பெல்) இருக்கிறது.

இதன் தலைமை நிர்வாகி மிஸ்ரா ஓர் இந்திக்காரர். அடுத்த நிலை நிர்வாகிகளில் பலர் வேற்று இனத்தவர்.

கடந்த 25.02.2008 முதல் 29.03.2008 வரை இந்த மிகுமின் ஆலையில் வேலைக்கு சேர்க்கப்பட்ட 77 நிர்வாகப் பிரிவு பொறியாளர்களில் 17 பேர் மட்டுமே தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள். 60 பேர் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். சற்றொப்ப 78 விழுக்காட்டினர் வெளியார்.

இதே ஆலையில் கடந்த 10.03.2008 முதல் 12.04.2008 வரை வேலைக்குச் சேர்க்கப்பட்ட 66 மேற்பார்வையாளர்களில் 36 பேர் வெளியார். கிட்டத்தட்ட 55 விழுக்காடு அயலார்.

ஏற்கெனவே 2002லிருந்து 2005 வரை சேர்க்கப்பட்ட 138 பொறியாளர்களில் ஒருவர் கூட தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் இல்லை. இப்பொழுது பொருத்துனர், பற்றவைப்புனர் போன்ற வேலைகளுக்கு 450 பேர் தேவை என்று விண்ணப்பம் கோரி பெற்றள்ளது திருவெறும்பூர் மிகுமின் ஆலை.

நாம் போராடாமல் இருந்தால் இந்த 450 வேலைகளும் முழுதாகவோ அல்லது பெருமளவிலோ வெளிமாநிலத்தவருக்கே போய்ச் சேரும். இது மட்டுமல்ல இங்கு தொடர்ந்து ஆலை விரிவாக்கப் பணிகள் நடைபெற உள்ளன. நிறையப்பேர் வேலைக்கு சேர்க்கப்படஉள்ளார்கள்.

“மண்ணின் மக்களுக்கே வேலை” என்ற முழக்கத்தை முன்வைத்து தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி 20.05.2008 செவ்வாய் முற்பகலில் திருவெறும்பூர் மிகுமின் ஆலைமுன் மாபெரும் மறியல் போராட்டம் நடத்தியது.

திருச்சி - தஞ்சை சாலையில் உள்ள கைச்சின்னத்திற்கு எதிரே இருந்து, மறியல் போராட்டத் தலைவர் தோழர் குழ.பால்ராசு (தலைமைச் செயற்குழு , த.தே.பொ.க.) தலைமையில் ஊர்வலம் புறப்பட்டது. சற்றொப்ப 400 பேர் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

கணிசமான எண்ணிக்கையில் மகளிர் பங்கேற்றனர்.

ஒலி பெருக்கியில் முழக்கங்கள் புறப்பட, ஆண்களும், பெண்களும் ஆவேசமாக எதிரொலித்தனர்.

*தமிழகம் வெளியார் வேட்டைக் காடா?*
*தமிழர்களுக்குப் பிச்சை ஓடா?*
*வட்டிக் கடைக்கு மார்வாடி*
*ரொட்டிக் கடைக்கு மலையாளி*
*தட்டு ஏந்தத் தமிழனா?*
*தமிழகத்தில் உள்ள*
*இந்திய அரசு நிறுவனங்களில்*
*எண்பது விழுக்காடு வேலை*
*தமிழர்களுக்கே கொடு*
*தமிழக வேலைவாய்ப்பு அலுவலகங்கள்*
*மூலம் வேலைக்கு ஆள் எடு*
*தமிழக அரசின் இட ஒதுக்கீட்டைக் கடைபிடி*

என்பன போன்ற முழக்கங்கள் வெடியோசையாய் வெளிப்பட்டன.

மறியல் போராட்ட நோக்கத்தை விளக்கிப் பேசி, தோழர் கி.வெங்கட்ராமன் ஊர்வலத்தைத் தொடங்கி வைத்தார். ஊர்வலம் மிகுமின் நிலைய வடக்கு வாயிலை நோக்கிச் சென்றது. இடையில் ஓர் இடத்தில் நிறுத்தி, போராட்ட நோக்கங்களை விளக்கித் தோழர்கள் உரையாற்றினர்.

தோழர் குழ.பால்ராசு, தோழர் பெ.மணியரசன், புலவர் க.முருகேசன் ( ம.தி.மு.க. சொத்துப் பாதுகாப்புக்குழுத் துணைத் தலைவர்) ஆகியோர் பேசினர். பாவலர் பரணன் பங்கு கொண்டார்.

ஆலையின் வடக்கு வாயிலை நோக்கி மறியல் ஊர்வலம் புறப்பட்டது. இடை மறித்த காவல் துறையினர் அனுமதி மறுத்தனர். சாலையெங்கும் தோழர்கள்அமர்ந்து கொண்டு மறித்தனர். காவல் துறையினர் கைது செய்தனர்.

தோழர்கள் குழ.பால்ராசு, பெ.மணியரசன், கி.வெங்கட்ராமன், நா.வைகறை, ஓசூர் கோ.மாரிமுத்து, சத்தி ச.அர.மணிபாரதி, தஞ்சை இராசு.முனியாண்டி, பூதலூர் க.காமராசு, வல்லம் பி.முருகையன், சிதம்பரம் சி.ஆறுமுகம், திருத்துறைப் பூண்டி கா.அரசு, பெண்ணாடம் க.முருகன், மதுரை அருணா (மகளிர் ஆயம்), ஓசூர் அபிராமி, செங்கிப்பட்டி சு.சுதாவணி, சானூரப்பட்டி கக்கன் குடியிருப்பு க.மீனா, தஞ்சை ம.லெட்சுமி, தஞ்சை வடக்கு வாசல் பு. லெட்சுமி, மதுரை மேரி, நெய்வேலி


குழ.பால்ராசு உரையாற்றுகிறார், அருகில் பெ.ம., புலவர் முருகேசன் மற்றும் தோழர்கள்

பாலு, சென்னை பா. தனசேகர், செங்குன்றம் சு.பாலமுரளி, ஈரோடு வெ. இளங்கோவன், சேலம் ச.பிந்துசாரன், மதுரை இராசு உள்ளிட்ட 250 பேர் கைது செய்யப்பட்டனர். கைது எண்ணிக்கையைக் காவல் துறையினர் குறைத்துக் காட்டினர். அனைவரும் மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

மிகுமின் ஆலையில் செயல்படும் திராவிடத் தொழிலாளர் கழகத் தலைவர்களும் ம.தி.மு.க. தொழிற்சங்கத் தலைவர்களும், மறியல் போராட்டத்திற்குப் பேருதவியாய் இருந்தனர். ம.தி.மு.க. தோழர் வீரமணி, ஜி.பி.இன்ஜினியரிங் தொழிற் சங்கச் செயலாளர் தோழர் வே.க. இலட்சுமணன், தோழர் பால்ராசு, திருச்சி தமிழ்க் கலை இலக்கியப் பேரவைச் செயலாளர் கவிஞர் இராசா ரகுநாத, தலைவர் கவிஞர் கவித்துவன், அரியமங்கலம் தோழர் இரெ.சு.மணி ஆகியோர் மறியல் சிறக்கப் பல்லாற்றானும் பணிபுரிந்தனர்.

அமைப்புள்ள இடங்களிலெல்லாம் இப் போராட்டம் குறித்து த.தே.பொ.க. தோழர்கள் விரிவான சுவர் விளம்பரங்கள் செய்திருந்தனர். ஓசூரில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. ராம் நகரில் 15.5.08 அன்று தோழர் முத்தாலு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோழர்கள் நடவரசு, தென் திருமாறன் ஆகியோர் உரையாற்றினர். தோழர் முருகானந்தம் நன்றி நவின்றார்.

இம்மறியல் இத்திசையில் ஒரு தொடக்கமே ; இன்னும் இன்னும் வீச்சோடு போராட்டங்கள் தொடரும்.

**- நம் செய்தியாளர்**

# வர்க்கப் புரட்சியா

■ பெ.மணியரசன்

மார்க்சும், எங்கெல்சும் எழுதிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கைக்கு அகவை 160. அதன் அடிப்படைக் கோட்பாடுகள் இளமையாகவே இருக்கின்றன. எனினும், அது தீட்டிக் காட்டிய அன்றைய உலகத்தோற்றம் இன்று எவ்வளவோ மாறி விட்டது.

அன்று தேசிய இயக்கங்களை, முதலாளிவர்க்கம் முன்மொழிந்தது. உழைக்கும் மக்களுக்கு நாடில்லை என்று கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வேதனைப்பட்டது. அது உழைக்கும் மக்களின் சர்வதேசியத்தை முன் மொழிந்தது. ஆனால் இன்று, தேசத்தின் எல்லைச்சாவடிகளை நொறுக்கித் தூளாக்கி விடச்சொல்கிறது முதலாளியம்; அது உலகமயம் பேசுகிறது.

முதலாளிய உலகமயத்தைத் தடுக்க, பாட்டாளிவர்க்கம் தேசியத்தை முன்மொழிய வேண்டிய வரலாற்றுத் தேவை வந்துவிட்டது.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் கூட, மார்க்சும், எங்கெல்சும் உழைக்கும் மக்களுக்குத் தேசம் வேண்டாம் என்று கூறவில்லை.

*"நிலவுகின்ற நாடுகளையும், தேசங்களையும் கம்யூனிஸ்டுகள் ஒழித்துவிடப்போவதாக எதிரிகள் வசைபாடுகிறார்கள். உழைக்கும் மக்களுக்கு நாடில்லை. அவர்கள் பெற்றிராத ஒன்றை அவர்களிட மிருந்து நாங்கள் எப்படி எடுத்துவிட முடியும்? இப்பொழுதுள்ள நாடுகள் பாட்டாளி வாக்கத்திற் குரியவையாக இல்லை. முதலாளி வர்க்கத்திற்குரியவையாக இருக்கின்றன. பாட்டாளிவர்க்கம் அரசியல் தலைமையைக் கைப்பற்றி, தனது தேசத்தின் தலைமை வர்க்கமாக மாறவேண்டும். அப்போது பாட்டாளி வர்க்கம், தானே ஒரு தேசமாக மாறிவிடும்; அது முதலாளி வர்க்கக் கருத்தில் அமைந்த தேசமாக இருக்காது", என்றார்கள்.*

*- காரல் மார்க்ஸ் - பிரெடரிக் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் - மூன்று தொகுதிகளில், ஆங்கிலம் தொகுப்பு I பக்கம் 124*



*"ஒரு தனி நபருக்கும் இன்னொரு தனிநபருக்கும் இடையில் நிலவும் சுரண்டல் எந்த விகிதத்தில் மறைகிறதோ அதே விகிதத்தில், ஒரு தேசம் இன்னொரு தேசத்தை சுரண்டுவது மறைகிறது. ஒரு தேசத்திற்குள் நிலவும் வர்க்கப்பகைமை எந்த விகிதத்தில் மறைகிறதோ அதே விகிதத்தில் தேசங்களுக் கிடையிலான பகைமையும் முடிவுக்கு வரும்".*

*- அதே நூல் பக் -125*

"உழைக்கும் மக்களுக்கு நாடில்லை" என்று மார்க்சும் எங்கெல்சும் கூறியது மேற்கண்ட தர்க்கப்பொருளில்தான். தேசங்கள் பாட்டாளி வர்க்கத்திற்குரியவையாக மாற வேண்டும் என்ற கருத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்வதற்குத் தான் அவ்வாறு வாதம் செய்தனர்.

தேசிய விடுதலைப் போராட்டம், வர்க்கப் போராட்டத்தின் வடிவங்களுள் ஒன்று. வர்க்கப் போராட்டமும் தேசிய விடுதலைப் போராட்டமும் முற்றிலும் வேறு வேறு அல்ல.

*"தேசிய விடுதலைப் புரட்சிகளின் வரலாற்றுத் தனிச்சிறப்பை முதன் முதலாக வரையறுத்த கருத்தியல் மார்க்சியம் தான். தேசிய மற்றும் காலனியச் சிக்கல், வர்க்க உறவுகளிலிருந்தும், வர்க்கப்போராட்டத்திலிருந்தும் பிரிக்க முடியாதது; தேசிய ஒடுக்குமுறை என்பது முதலாளியச் சமூக அமைப்பின் மரபுக் கூறாகும் என்று மார்க்சியம் எடுத்துக் காட்டியது. இவ்வொடுக்கு முறையின் வேர்கள் தனிச் சொத்துடைமையில் பொதிந் துள்ளன; தனிச் சொத்துடைமையே சுரண்டும் வர்க்கங்களின் நலன்களையும் கொள்கையையும் தீர்மானிக்கிறது."*

*-abc of Social And Political knowledge: what are classes and the class struggle?*

*மாஸ்கோ -அந்தோணினா எர்மகோவா - வாலெண்டின் ரத்னிகோவ் மாஸ்கோ - பக்- 174,175.*

தேசிய விடுதலைப் போராட்டத் திற்குப் பொதுவுடைமையர் தலைமை தாங்கினால், அப்போராட்டத்தின் வெற்றி, நிகரமைச் (சோசலிச) சமூக அமைப்பை நோக்கிப் பயணம் செய்யும். முதலாளியக் கருத்தியல்

# தேசியப் புரட்சியா

கொண்ட சிறிய, நடுத்தர முதலாளியப் பிரிவினர் தலைமை தாங்கினால், அதன்வெற்றி, முதலாளியச் சமூக அமைப்பை நிறுவும்.

சிறிய, நடுத்தர முதலாளியப் பிரிவினர் தலைமையில் நடைபெறும் தேசிய விடுதலைப்புரட்சியும் வர்க்கப் போராட்டத்தின் பகுதியே. அது, சிறிய, நடுத்தர முதலாளியப் பிரிவினர் தங்கள் தேசத்தில் அரசியல் ஆதிக்கமும் பொருளியல் சுரண்டலும் நடத்தும் அயல்தேச ஒடுக்குமுறை யாளர்களையும், சுரண்டலாளர் களையும் எதிர்த்து நடத்தும் போராட்டம் ஆகும். அது வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியே.

தொழிலாளிவர்க்கத்தின் தலைமையில் நடப்பது மட்டுமே வர்க்கப் போராட்டம் என்று கருதினால், தொழிலாளி வர்க்கம் உருவாவதற்கு முன் வர்க்கப் போராட்டமே நடக்கவில்லை என்று ஆகிவிடும். **"ஏடறிந்த வரலாறெல்லாம் வர்க்கப்போராட்டத்தின் வரலாறே"** என்ற புகழ் பெற்ற கூற்றின் பொருளைப் புரிந்து கொள்ளாத தாகிவிடும்.

தமிழ்த் தேசியப் புரட்சியின் வெற்றியானது, நிகரமைச் சமூகத்தை நோக்கிய பயணத்தைத் தொடங்கி வைக்க வேண்டும் என்ற கருத்தில் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி உறுதியாக இருக்கிறது. அதற்காக உலகில் பொதுவுடைமையர் தலைமையில் நடைபெறும் தேசிய விடுதலைப்புரட்சிகளை மட்டுமே த.தே.பொ.க ஆதரிக்க வேண்டும் என்று வரம்பிட்டுக் கொள்ளவில்லை. பொதுவுடைமையர் அல்லாதார் தலைமையில் நடைபெறும் தேசியப் புரட்சிகளையும் த.தே.பொ.க. ஆதரிக்கும்.

இன்று உலக நிலைமை என்ன? பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கூட்டரசு ஒன்றை நிறுவும் அரசியல் போக்கு செயல் முறையில் உள்ளதா? இல்லை.

உலக வல்லரசுகளின், அவற்றின் உள்நாட்டுக் கூட்டாளிகளின் உலகமயக் கொள்ளையைத் தடுத்து நிறுத்தும் போக்கில்தான் இன்றையப் பாட்டாளி வர்க்க அரசியல் செயல்முறை இருக்க முடியும்.

சோவியத் புரட்சி வென்றபின், நிகரமைப் புத்தூழி (சகாப்தம்) தொடங்கி விட்டதாக லெனின் அறிவித்தார். இன்று சோவியத் ஒன்றியம் வீழ்ந்துவிட்ட நிலையிலும், சீனா பன்னாட்டு முதலாளிகளுடன் சமரசம் செய்துகொண்டுவிட்ட சூழலிலும் கூட, லெனின் முன்னறிவிப்பு செய்த நிகரமைப் புத்தூழி செயல்படுவதை மறுக்க முடியாது.

நிகரமைக் கருத்தியல் ஆட்சி செய்யும் கியூபா, வியட்நாம், வடகொரியா போன்ற நாடுகள் இன்றும் இருக்கின்றன. மட்டுமின்றி, தென் அமெரிக்காவில் புதிது, புதிதாக நிகரமைக் கருத்தியல் செல்வாக்கு செலுத்தும் ஆட்சிகள் உருவாகி வருகின்றன. அண்மையில் நேப்பாளத்தில் மாவோயிஸ்ட்டு களின் எழுச்சி, நிகரமைக் கருத்தியலுக்கு மக்கள் வழங்கும் மகத்தான ஆதரவுக்கு மற்றுமொரு சாட்சியம்! பல்வேறு நாடுகளில் உழைக்கும் மக்கள் கட்சிகளை மக்கள் பெருந்திரளாக ஆதரிக்கிறார்கள்.

சோவியத் நிகரமைக் குடியரசு களின் ஒன்றியம் நிறுவப்பட்டதும், இதே பாணியில் உலகக் கூட்டரசு ஒன்று அமையப்போகிறது என்று லெனின் எதிர்பார்த்தார். அவருடைய வாழ்நாளுக்குள் அது அமைந்துவிடும் என்று அவர் கருதியிருக்க மாட்டார். ஆனால், இருபதாம் நூற்றாண்டிற்குள் அல்லது விரைவான எதிர்காலத்தில் உலகக் கூட்டரசு ஒன்று அமைந்துவிடும் என்று எதிர்பார்த்திருப்பார் என்று கருத வாய்ப்புள்ளது.

மூன்றாவது அகிலத்தை (உலகக் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகளின் கூட்டமைப்பை) நிறுவியபின் 1919-ல் ஆற்றிய சொற்பொழி வொன்றில், லெனின் கூறியதைப் பார்க்கலாம்.

***"இன்று, மூலதனத்தின் ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு விசுவாசமாக உள்ளவர்கள் தங்களைக் கம்யூனிஸ்ட்டுகள் என்று அழைத்துக்கொள்கிறார்கள். உலகம் முழுவதிலும் கம்யூனிஸ்ட்டுகளின் சங்கம் வளர்ந்து கொண்டிருக்கிறது. சில நாடுகளில் சோவியத் ஆட்சி யதிகாரம் முன்பே, வெற்றி பெற்றுவிட்டது. உலகம் முழுவதிலும் கம்யூனிசத்தின் வெற்றியை நாம் சீக்கிரத்தில் பார்க்கப் போகிறோம்; சோவியத்துக் குடியரசுகளின் உலகக் கூட்டாட்சி நிறுவப்படப் போவதை நாம் காண்போம்."***

*- பாட்டாளி வர்க்க சர்வ தேசிய வாதம் - லெனின், மாஸ்கோ 1984 - பக்கம் - 372.*

ஸ்டாலின், இன்னும் விரைவாக உலகக் குடியரசு அமையப் போகிறதென்று கருதினார். அப்போக்கை விரைவுபடுத்த சிறு சிறு தேசிய இனங்கள் பெரிய தேசிய இனத்துடன் ஒருமித்து இணைந்து விடவேண்டும் என்று விரும்பினார்.

லெனின் உலகக் குடியரசை எதிர்பார்த்தாலும், எல்லா நிலையிலும் சனநாயக அணுகுமுறையை உயர்த்திப் பிடித்தார். ஆனால் ஸ்டாலின் அணுகுமுறை அவ்வாறில்லை. (இவ்வாறு நாம் கூறுவதால் ஸ்டாலினுக்குரிய வரலாற்றுப் பாத்திரத்தை மறுப்பதாகப்

பொருள் இல்லை. அவருடைய நிறைகளை ஏற்றுக்கொண்டு குறைகளை மதிப்பீடு செய்கிறோம்.)

"மா ருசியர்" என்று ருசிய இனத்தை ஜார் ஆட்சி, அதிகாரப் பூர்வமாகவே பெயர் சூட்டி அழைத்தது. "மா ருசியர்" என்று ருசிய இனத்தை உயர்த்தியும் "சிறு ருசியர் " என்று உக்ரைனியர்களைத் தாழ்த்தியும் ஜார் ஆட்சி அழைத்ததை லெனின் வெறுத்தார்; எதிர்த்தார். ஆனால் ஸ்டாலின், மாருசிய இனத்தோடு மற்ற சிறு சிறு தேசிய இனங்கள் ஒன்று கலந்து விடவேண்டும் என்று விரும்பினார். இத்தனைக்கும் ஸ்டாலின் ஜார்ஜிய தேசிய இனத்தவர். உலக சோவியத்துக் குடியரசுகளின் கூட்டாட்சி அரசு அமைக்கும் வேகம் ஸ்டாலினை அவ்வாறு பெருந்தேசிய இனவாதத்தின் பக்கம் தள்ளி விட்டிருக்கும்.

லெனினுக்குப் பிறகு சோவியத் ஒன்றியத்தின் ஆட்சித் தலைமைக்கு வந்த ஸ்டாலின் ருசிய மொழியை சிறுபான்மை தேசிய இனங்களின் மீது திணித்தார். சிறுபான்மைத் தேசிய இனங்களை ருசிய மயமாக்குவது நிகரமையை முழுமைப்படுத்தி, உலக நிகரமைக் குடியரசு அமைவதை விரைவுப்படுத்தும் என்று அவர் கருதினார்.

ஆனால், ஸ்டாலினது அணுகு முறையைத் தொடக்கத்திலேயே லெனின் எதிர்த்தார். ஜார்ஜியாவில் ருசிய மயத் திணிப்பில் ஈடுபட்ட ஸ்டாலினை லெனின் கண்டித்தார். ஜார்ஜியாவில் என்ன நடந்தது என்று அறிய த்சொர்மீன்ஸ்கி தலைமையில் குழு அனுப்பப்பட்டது. ஆனால் அவர் நடுநிலையாக நடந்து கொள்ளவில்லை என்று லெனின் அவரை விமர்ச்சித்தார். ருசிய மயமாக்கப்பட்ட ருசியரல்லாதோர் மா ருசியர் மனநிலையை மிகையாகப் பெற்று விடுகின்றனர் என்று கூறி ஸ்டாலின் உள்ளிட்டோரை சாடினார்.

*"ஸ்டாலினது அவசரமும் மற்றும் தூய நிர்வாகத்துடனான அவரது மோகமும் பகிரங்கமான சமூக - தேசிய வாதத்தினை எதிர்த்த அவரது வன்மமும் சேர்ந்து இங்கு பேராபத்தான ஒரு பாத்திரத்தை வகித்துள்ளன என்று நான் கருதுகிறேன். அரசியலில் வன்மம் பொதுவாக மிகவும் இழிந்த பாத்திரமே வகிக்கும்".*

...

கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அரசாங்கப் பதவிகள் வகித்து ஜார்ஜியப் பகுதிக்குப் பொறுப்பாயிருந்த, ஒர்த் ஜொனி கீத்சே, ஜார்ஜியர்களை ருசிய மயப்படுத்து வதற்காக அத்துமீறி நடந்து கொண்டார். அதற்காக அவரைத் தண்டிக்க வேண்டும் என்று குறிப்பெழுதி அனுப்பினார் லெனின். இந்த உண்மையான மாருசிய தேசிய வாத நிகழ்வுகள் எல்லாவற்றுக்குமான அரசியல் பொறுப்பு நிச்சயமாய் ஸ்டாலின் மற்றும் த்சொர்மீன்ஸ்கி ஆகியோர் மீது சுமத்தப்படவேண்டும் என்று லெனின் குறிப்பெழுதினார். அப்போது லெனின் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்ததால், உதவியாளரை எழுதச்சொல்லி அன்றாடம் அனுப்பும் வழக்கம் கொண்டிருந்தார்.

*- பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம் - லெனின், மாஸ்கோ, 1984, பக்கம் 467 - 476*

மேற்கண்டவற்றை ஏன் இங்கு சுட்டிக் காட்டுகிறோம்? லெனின் முன்னறிவிப்பு செய்தவாறு, உலக சோவியத் குடியரசுகளின் கூட்டாட்சி அமைவதை விரைவுப்படுத்தும் வகையில், நிகரமைப் புரட்சிகள் அணிவகுத்து அடுத்தடுத்து நிகழவில்லை. லெனின் முன்னறிவிப்பு செய்தது குற்றமல்ல; அவர் நிகரமைப் புத்தூழி பிறந்துவிட்டது என்று சொன்னது சரியே. ஆனால் அடுத்தடுத்து நிகரமைப்புரட்சிகள் நடைபெறா வண்ணமும் நிகரமை அரசுகள் வீழும் வண்ணமும் உலக வல்லரசுகளும், முதலாளியமும் இடையறாது சதி செய்துவருகின்றன.

முதலாளியம் தன்னைத் தக்க வைத்துக்கொள்ள பல்வேறு சாகசங்கள் செய்து மக்களைத் தன்பக்கம் இழுக்கிறது; குழப்பி விடுகிறது. இவற்றையெல்லாம் எதிர்கொள்ளக்கூடிய பொதுவுடைமைத் தலைமைகள் உருவாக வேண்டியது இன்றியமையாத் தேவை.

**எனவே நிகரமை நாடுகள் வீழ்ந்து விட்டதற்காக, லெனினது முன்னறிவிப்பைக் குறை கூற வேண்டியதில்லை. அதே வேளை அவ்வாறான கணிப்பில் தேசிய இனத்தின் பாத்திரம் குறித்து லெனின் செய்த சில வரையறுப்பு களில், இன்றுள்ள சூழ்நிலைக் கேற்ப, தளர்ச்சிகள் மற்றும் ஒருசில மாற்றங்கள் தேவைப்படுகின்றன என்பதே நமது நிலை.**

எடுத்துக்காட்டாக , தேசிய இனங்கள் பிரிந்து போகும் உரிமை உள்ளிட்ட தன்னுரிமை பெற்றுள்ளன என்று கூறும் லெனின், தேசிய இனங்கள் சமத்துவ அடிப்படையில் கூட்டாட்சியில் இணைந்திருப்பதற்குக் கூடுதல் அழுத்தம் கொடுக்கிறார். நிகரமைப் புத்தூழி திறக்கப்பட்டு விட்டது. அடுத்தடுத்து, நிகரமைப் புரட்சிகள் தொடரப் போகின்றன என்ற அக்காலக் கணிப்பிற்கேற்ப அந்த அழுத்தம் தேவைப் பட்டிருக்கலாம். இன்று அந்த "அழுத்தம்" தேவை இல்லை.

சோவியத் ஒன்றியத்தின் தலைமையில் ஒரு நிகரமை முகாம் உருவாகத் தொடங்கிய காலத்தில் லெனின் அவ்வாறு கூறினார். இன்று சோவியத் ஒன்றியமும் இல்லை ; நிகரமை முகாமும் இல்லை. சீனம் சீரழிந்து கிடக்கிறது. ஒரு முனை உலகத்தின் தலைவன் தான் தான் என்று வட அமெரிக்க வல்லரசு கொக்கரித்து, நிலக்கோள மெங்கும் குருதிவடியச் செய்கிறது.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற பல்தேச நாடுகள் ஒற்றை அரசதிகாரத்தின் கீழ் இருப்பது அமெரிக்க வல்லரசுக்கு வசதியாகப்

போய்விட்டது. ஓர் இடத்தில், அதுவும் தனது பிரதிநிதி போல் செயல்படும் ஒருவரிடம் அனுமதி பெற்று, இந்தியாவுக்குள்ளும், பாகிஸ்தானுக் குள்ளும் நுழைந்து, அங்கு உள்ள பல தேசங்களை அமெரிக்கா சூறையாடுகிறது.

இவ்விரு நாடுகளும் பல தேசங்களாகப் பிரிந்து விட்டால், ஒவ்வொரு தேசத்திடமும் அனுமதி பெற வேண்டிய சிக்கல் வல்லரசு களுக்கும், பன்னாட்டு முதலாளி களுக்கும் உண்டாகும். அவ்வாறு பிரிந்த தேசங்களில் சில, வல்லரசுகளை எதிர்ப்பவையாகவும் அமைந்துவிட்டால், அப்போது பன்னாட்டு முதலாளிகளின் உலகமயச் சக்கரம் அத்தேசங்களில் உருள முடியாமல் போய்விடும்.

எனவே இப்போதுள்ள இந்திய, பாகிஸ்தானிய வடிவங்களும், அரசியல் தலைமைகளும் வல்லரசு களின் வேட்டைக்கு வாய்ப்பானவை. தில்லியும், இஸ்லாமாபாத்தும், வல்லரசுகளின் வரவேற்பறை களாகும்! அவ்வரவேற்பறைகளுக்குப் பின்னால் விரிந்து பரந்த நிலப்பரப்புகளும், கணக்கிலடங்கா இயற்கை வளங்களும், உலகின் மிகப்பெரிய மக்கள் கூட்டங்களும் இருக்கின்றன.

**இந்தியாவில் அனைத்திந்தியப் புரட்சி செய்ய, அனைத்திந்தியா தழுவிய புரட்சி அமைப்பொன்று உருவாகவே இல்லை. எனவே, அனைத்திந்தியப் புரட்சிக்கு வாய்ப்பே இல்லை. அனைத் திந்தியப் புரட்சி பற்றி பேசுவோர் தெரிந்தோ தெரியமலோ வல்லரசிற்கு வரவேற்புப் பதாகை கட்டுகிறார்கள் என்றே பொருள்.**

இன்றுள்ள புதிய சூழலில், பாட்டாளி வர்க்கம், உலகமயத்தை முறியடிக்க உயர்த்த வேண்டிய பதாகை முழக்கம், **“தேசிய இறையாண்மையே!”** இன்றைய மார்க்சிய, லெனினியம் இதன் வழியே செயல்படுகிறது. தேசங்களின் இறையாண்மை மீட்கப் படுவதன் வழியாக பலமுனை உலகம் அமைய வேண்டும். பல முனை உலகம் வலுப்பட வலுப்பட வல்லரசியம் பலவீனப்படும். இப்போக்கில் நிகரமை அரசுகளின் பிறப்பு அதிகரிக்கும்.

இதற்குமேல், எந்தக் கனவும் இப்போது வேண்டாம். உலகக் கூட்டரசு என்ற ஒன்றை இப்போதே இலக்காகிக் கொண்டு செயல்பட்டால், கனவுக்கும் நடப்புக்குமான முரண் பாடுகளே மிஞ்சும்.

நிகரமை அரசுகள் உருவாகி விட்டால், உலகக் கூட்டரசுக்கான அகல நெடுஞ்சாலை போடப்பட்டு விட்டதாகப் பொருள் அல்ல. நிகரமை நாடுகளிடையே மோதல்கள் வராதா? சோவியத் ஒன்றியமும், சீனாவும் பகை முரண்பாட்டோடு மோதிக் கொள்ளவில்லையா? சீனாவும் , வியட்நாமும், வியட்நாமும் கம்பூச்சியாவும் எல்லைப் போர்கள் நடத்திக் கொள்ளவில்லையா?

சோவியத் ஒன்றியம், நிகரமை நாடுகளான அங்கேரி மீதும், செக்கஸ் லோவாக்சியா மீதும் படையெடுக்க வில்லையா? நிகரமை நாடுகள், மார்க்சிய அறவியல் கருத்துகளை முழுமையாக ஏற்கும் பக்குவம் பெற, சில தவறுகள் செய்து அதற்கான தண்டனைகள் பெற , அவகாசம் தேவைப்படுகின்றது.

*“பாட்டாளி வர்க்கம் ஒரு சமூகப் புரட்சியை நடத்தி யிருப்பதனாலேயே அது புனிதமாகிவிடாது ;* ***தவறுகள்,*** *பலவீனங்கள் தன்னை அணுக முடியாதபடி காத்துக் கொள்ளும் தகுதியைப் பெற்றுவிடாது. ஆனால் அது செய்யக் கூடிய தவறுகளின் மூலம் (சுயநல ரீதியான அக்கறையினாலும் மற்றவர்கள் மீது குதிரைச் சவாரி செய்ய முயற்சிப்பதனாலும்) இந்த உண்மையைத் தவிர்க்க முடியாத வகையில் புரிந்து கொள்ளும்”*

*- லெனின், பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம் பக். 230.*

ஸ்டாலின் தலைமையில் இருந்த போதே நிகரமை நாடான சோவியத் ஒன்றியம் ருசியப் பெருந்தேசிய இனவாதத்துடன் இணைந்தே செயல்பட்டது. மாவோ தலைமையில் இருந்தபோதே சீனம் ஹன் பெருந்தேசிய இனவாதத்துடன் இணைந்து, திபெத்தின் தன்னுரிமையை மறுத்தது.

தேசியஇனத் தன்னுரிமைக் கோட்பாட்டை துச்சமாகத் தூக்கி எறிந்துவிட்டு, இப்பொழுது திபெத்தியர்கள் நடத்தும் விடுதலைக் கிளர்ச்சியை, கலகம் என்றும், ஏகாதிபத்தியச் சதி என்றும் சி.பி.எம், சி.பி.ஐ. கட்சிகள் எதிர்க்கின்றன. “சீனாவின் பிரிக்க முடியாத பகுதிதான் திபெத்” என்று கூறி சந்தர்ப்பவாதப் பசை கொண்டு ஒட்டுகின்றன. திபெத்தியர் தனித்தேசிய இனம், வரலாற்றில் தனி அரசு கொண்டு நிலைத்து வாழ்ந்த சமூகம், என்ற அளவுகோல் கொண்டு வரையறுத்து அதன் தன்னுரிமையை மார்க்சியர் ஆதரிக்கவேண்டும்.

சீனாவில் கம்யூனிஸ்ட்டுக் கட்சி ஆட்சி நடக்கிறது என்பதற்காக இக்கட்சிகள் இவ்வாறு திபெத் விடுதலையை எதிர்க்கின்றன என்று கருதவேண்டியதில்லை. இந்தியாவில் பெரு முதலாளிகளின் முதலாளிய ஆட்சி நடக்கிறது. இந்தியா காசுமீரை இராணுவ நடவடிக்கையால் இணைத்துக் கொண்டது; எழுபது களில், சிக்கிமை இந்தியா இணைத்துக் கொண்டது. இவற்றையெல்லாம் சி.பி.எம், சி.பி.ஐ. கட்சிகள் ஆதரித்துதான் வருகின்றன.

வருங்காலத்தில் சிக்கிமில் விடுதலை இயக்கம் தோன்றிப் போராடினால், பயங்கரவாதம் , ஏகாதிபத்தியச் சதி என்று கூறி அதையும் இக்கட்சிகள் எதிர்க்கும்.

தங்கள் தேசிய நலன் கருதி சோவியத் ஒன்றியமோ அல்லது சீனாவோ ஏகாதிபத்தியத்துடன் கூட்டணி அல்லது கூட்டுறவு காணவில்லையா? இரண்டாவது

உலகப்போரில், இட்லரின் பாசிசப் படையெடுப்பை முறியடிக்க சோவியத் ஒன்றியம், அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியங்களுடன் கூட்டணி சேர்ந்தது. (இந்த உத்தியை நாம் தவறு என்று கூறவில்லை)

"சோவியத் சமூக ஏகாதி பத்தியத்தை" எதிர்ப்பதன் பெயரில், மாவோ காலத்திலேயே சீனம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டுறவு கண்டது. அப்போது வட அமெரிக்காவைக் கூட்டணிக்கே அழைத்தது சீனம். அதற்கு மூன்றுலகக் கோட்பாடு என்று பெயர் சூட்டப் பட்டது. இப்பொழுதோ, சீனம், வடஅமெரிக்காவுடன் "ஒரு மேசை விருந்தினர் உறவு" கொண்டுள்ளது.

அமெரிக்கா ஆதரிக்கிறது என்பதற்காகவோ, அத்வானி ஆதரிக்கிறார் என்பதற்காகவோ அசலான தேசிய விடுதலை இயக்கத்தை மார்க்சியர்கள் எதிர்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால், இட்லருடன் கூட்டணி கண்டு இந்திய விடுதலைக்கு ஆயுதப் புரட்சி நடத்திய நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ், அமெரிக்காவின் ஏற்பாட்டில் இஸ்ரேலுடன் ஒப்பந்தம் செய்து கொண்டபாலஸ்தீன விடுதலைப் போராளி யாசர் அராபத் போன்றோரை "ஏகாதிபத்தியக் கைக்கூலிகள்" என்று மதிப்பிடலாமா? கூடாது.

தலாய்லாமாவை நாம் நேத்தாஜியுடனும், யாசர் அராபத்துடனும் ஒப்பிடவில்லை. வரலாற்றுப் போக்கின் வளைவு நெளிவுகளை எடுத்துக் காட்டவே இவற்றைக் கூறுகிறோம். இப்பொழுது நடைபெறும் திபெத் விடுதலைக் கிளர்ச்சி,திபெத்திய மார்க்சியர் களாலும் மற்ற சனநாயக சக்திகளாலும் தலைமை தாங்கி நடத்தப்படுகிறது. தலாய் லாமா கட்டுப்பாட்டில் அது இல்லை.

மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டுள்ள தோழர்களில் ஒரு சாரார் வர்க்கப்போராட்டமா, தேசியப்போராட்டமா, எதை ஆதரிப்பது என்பதில் தடுமாற்றம் காணகின்றனர். இக்கட்டுரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டது போல், வர்க்கப் போராட்டத்திற்கும் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் இடையே சீனப் பெருஞ்சுவர் குறுக்கே நிற்கவில்லை. வர்க்கப் போராட்டத்தின் ஒரு வகையினம் தான் தேசிய விடுதலைப்போராட்டம்.

இதுவரை கம்யூனிஸ்ட்டுகள் தலைமையில் நடந்த ரசியப் புரட்சி, சீனப்புரட்சி, வியட்நாம், (வட) கொரியா, கியூபா புரட்சிகள், அனைத்தும் தேசியத் தன்மையை முதன்மைப்படுத்தி நடந்தவையே. இப்பொழுது நடந்து கொண்டுள்ள நேப்பாளப் புரட்சியும் தேசிய சனநாயகத்தை முதன்மைப்படுத்தியே நடக்கிறது.தேசியத் தன்மையை முதன்மைப் படுத்தாமல் நடந்த கம்யூனிஸ்ட் புரட்சி எதுவுமில்லை. தேசியப் புரட்சியின் ஊடாகவே நிகரமை மற்றும் மக்கள் சனநாயகப் பொருளியல் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இட்லரின் படையெடுப்பை எதிர்த்து முறியடித்த போரை, "மாபெரும் தேசபக்தப் போர்" என்றே ஸ்டாலின் வர்ணித்தார்.

வர்க்கப் புரட்சி வேறு, தேசியப் புரட்சி வேறு என்று கருதும் தோழர்களுக்கு ஒன்று சொல்லலாம். உங்கள் கருத்துப்படி இரண்டும் தனித்தனியாகவே இருக்கட்டும் இவ்விரண்டில் எதுவுமே சார்பற்ற முழுமுதலானது அல்ல என்பதை மார்க்சிய இயங்கியல் அடிப்படையிலாவது பாருங்கள்.

நிகரமையை முதன்மைப்படுத்தி நடக்கின்ற வர்க்கப் புரட்சியாக இருந்தாலும், தேசியத்தை முதன்மைப் படுத்தி நடக்கின்ற தேசியப் புரட்சியாக இருந்தாலும் சார்புத் தன்மையில் தான் நடைபெறும். கால, இட, சூழல் சார்பின்றி எந்நேரமும் செயலில் இருக்கக் கூடியதல்ல வர்க்கப்புரட்சி. அவ்வாறே தேசியப்புரட்சியும் நிரந்தர முதன்மை பெறுவதல்ல.

இறையாண்மையுள்ள தேசமொன்றில், நிகரமைப் புரட்சிக்கான தயாரிப்பில் ஒரு பொதுவுடைமைக்கட்சி இருக்கும்போது, வல்லர சொன்று அந்நாட்டின் மீது படையெடுக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அவ்வல்லரசின் ஆக்கிரமிப்புப் போரை, அந்நாட்டு அரசு எதிர்க்கிறது என்றுவைத்துக் கொள்வோம். அந்த நிலையில் முதலில் தாயக இறையாண்மைப் பாதுகாப்புப் போரில், அரசுடன் சேர்ந்து போராட வேண்டிவரும். அப்போது சொந்த நாட்டு அரசை வீழ்த்தும் நிகரமைப் புரட்சியைத் தள்ளி வைக்க வேண்டிவரும். (இந்த இடத்தில் ரசிய ஜார் அரசு உலகப் போரில் ஈடுபட்டபோது, அதைப் பயன்படுத்தி லெனின் உள்நாட்டுப் புரட்சியை சாதித்ததை ஒப்பிட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது. ஜார் நடத்தியது வெளிநாடுகளை ஆக்கிரமிக்கும் போர். அப்போது ரசியாவை ஆக்கிரமிக்க யாரும் படையெடுக்க வில்லை.) அன்று ருசியப் புரட்சியில் நடந்தது போல், தேசிய இனங்களுக்குப் பிரிந்து போகும் தன்னுரிமை வழங்கப்பட்டால், தனித்தேசியப் புரட்சிக்கு மாறாக மற்ற தேசிய இனங்களுடன் இணைந்து தேசியத்திற்கும், நிகரமைக்குமான புரட்சியை சேர்த்து நடத்தலாம்.

நிரந்தர உண்மையென்றும், சார்பற்ற முழு உண்மை என்றும் எதுவும் இல்லை என்கிறது இயங்கியல்.

***"உயர்நிலை விலங்குகள் தமது வயிறுகள், குடல்கள் மூலம் செரிமானம் நடத்துகின்றன. அவற்றின் தலைகளால் அல்ல, என்று கூடத் துணிந்து கூற முடியாது. காரணம் தலையில் மையப்படுத்தியிருக்கும் நரம்பு மண்டலச் செயல்பாடு செரிமானத் திற்கு இன்றியமையாதது."***

*- எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு - மாஸ்கோ.*

தேசியப் போராட்டமா - வர்க்கப் போராட்டமா ? எது சரியானது - எது நிரந்தரமானது என்று எதிர் எதிர் நிலையில் இருந்து விவாதிப்பது மார்க்சிய இயங்கியலுக்கு எதிரானது.

இவை இரண்டும் ஒன்றை யொன்று சார்ந்தவை தாம். தேசம் இல்லாத மக்கள், வர்க்கப் புரட்சி நடத்த முடியாது. வர்க்கப் போராட்டம் இல்லாத தேசப் புரட்சி இல்லை.

மார்க்சியம் மதக் கோட்பாடல்ல. அது வெறும் நம்பிக்கைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மெய்ப்பித்தல்கள் - மாற்றங்கள் - வளர்ச்சி என்ற போக்கில் இயங்குவது மார்க்சியம்.

உழைக்கும் மக்களுக்குரிய தேசத்தை அடையாளம் கண்டு அதற்கான தேசியக் கொள்கையை வகுக்காத மார்க்சியம் தனது புரட்சிகரப் பாத்திரத்தை இழந்து விடுகிறது. அது ஆதிக்க வாதிகளின், சுரண்டல் கொள்ளையர்களின் துணைத் தத்துவமாகத் திரிந்து செயல் களத்தில் சீரழிந்து நிற்கிறது.

மனித குல விடுதலைக்கு - மனிதனை மனிதன் ஒடுக்கும், மனிதனை மனிதன் சுரண்டும் அநீதியை ஒழிப்பதற்குப் போராடும் புரட்சியாளர்களுக்கு மார்க்சியத்தை விட சிறந்தவொரு தத்துவ ஆய்தம் இல்லை. அந்தந்த மண்ணின் சமூக முரண்பாடுகளைத் தீர்க்கப் போராடிய சிந்தனையாளர்களின் கருத்தியல்களும், மரபுவழிப்பட்ட அறவியலும் இணைக்கப்பட்டு, மண்ணுக்கேற்ற மார்க்சியம் வளர்க்கப்பட்டால் அதைவெல்ல உலகில் எந்த எதிர்ப்புரட்சித் தத்துவமும் கிடையாது.

இன்று மார்க்சியம், உயிர்த் துடிப்போடு எங்கே ஒளிவீசிக் கொண்டிருக்கிறது? தேசிய இறையாண்மையைக் காத்திட, ஏகாதி பத்தியங்களை எதிர்த்து நடக்கும் புரட்சிக்களங்களில், தேச விடுதலைப் போர்க்களங்களில் மார்க்சியமே கலங்கரை விளக்கமாகித் திசை காட்டுகிறது.

நாகர்களின் தேசியவிடுதலைப் போராளிகள், அசாமில் உல்பாப் போராளிகள், குர்திஸ்த்தானில் பி.கே.கே. என்ற தொழிலாளர் கட்சியினர் போன்றோர் ஒரு கையில் ஆய்தமும், மறுகையில் மார்க்சியமும் ஏந்தியுள்ளனர். ஈழவிடுதலைப் போர் நடத்தும் விடுதலைப் புலிகளை ஊக்கப்படுத்துவது மார்க்சியமே. ஏகாதிபத்தியத்தையும் அதன் உள்நாட்டுக் கங்காணிகளையும் எதிர்த்துப் புரட்சி செய்யும் நேப்பாள, தென்னமெரிக்கப் புரட்சியாளர்கள் மார்க்சியத்தையே முந்தியுள்ளனர்.

வர்க்கப் போராட்டத்தையும், தேசியப் போராட்டத்தையும் தனித்தனியே பிரிப்பது மார்க்சிய இயங்கியலுக்கு எதிரானது. தேசியப் போராட்டத்தைப் புறக்கணிப்பது உலகமயத்திற்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் செய்யும் சேவை ஆகும்.

தமிழ்த் தேசியப் புரட்சியில் வர்க்கச் சுரண்டல் எதிர்ப்பும், வர்ணசாதி ஒடுக்குமுறை எதிர்ப்பும் பிரிக்க முடியாத கூறுகளாக இயைந்தும் இணைந்தும் இருக்கின்றன.

■

## இறைக்குருவனாருக்குச் சிறப்பு விருது திருக்கழுக்குன்றம் மறைமலையடிகள் மன்றம் வழங்கியது!



*அண்மையில் (14.05.2008) கன்னியாகுமரியில் திருவள்ளுவர் அறக்கட்டளையின் சார்பில் முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற இரண்டாம் திருக்குறள் விழாவில், திருக்குறள் மணி புலவர்* ***இறைக்குருவனார்*** *அவர்களுக்குத் திருக்கழுக்குன்றம் மறைமலையடிகள் மன்றம்* ***திருக்குறள் செந்தொண்டர்*** *என்னும் சிறப்பு விருதும், ஓரிலக்கம் (1,00,000) உருவா பணக்கொடையும் வழங்கிச் சிறப்பித்தது.*

*விழாவின் நிறைவு நிகழ்ச்சியாக அன்று மாலை, கடற்கரையில் திரு.மா.செ.தமிழ்மணி தலைமையில் நடைபெற்ற பொது அரங்கத்தில் பெரியார் பெருந்தொண்டர் வே.ஆனைமுத்து ஐயா, மறைமலையடிகள் மன்றச் சார்பில் திருக்குறள்மணிக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார். மறைமலையடிகள் மன்றத் தலைவர் முத்துப் பெருமாள் ஐயா அவர்கள் விருது வழங்கினார். மன்றச் செயலாளர் திரு.வீ.இறையழகன் ஓர் இலட்சம் உருவாய்க்கான காசோலையை வழங்கிச் சிறப்பித்தார்.*

# துரோகியைப் புறந்தள்ளி முன்னேறும் கூர்கா இன மக்கள்

■ செவ்வேள்

நேற்றைக்குப் போராளியாக இருந்தவர் இன்றும் அவ்வாறே நீடிப்பார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அவர் தான் சார்ந்த அமைப்பின் உதவியோடு போராளியாகத் தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாதவர் துருபிடித்துப் போய்விடுவார். முன்னேறும் வரலாறு இத்தகையவரை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஓடிக் கொண்டே இருக்கும்.

கூர்கா தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் சுபாஷ் கெய்சிங்குக்கு (Subash Geisingh) இதுதான் நிகழ்ந்துள்ளது. கூர்கா தேசிய இனமக்களின் தன்னேரில்லாத தலைவராக விளங்கியவர் சுபாஷ் கெய்சிங். 1980களில் அவரது உரிமை உணர்ச்சியுள்ள பேச்சு மேற்கு வங்கத்தின் டார்ஜிலிங் மலைகளில் ஓங்கி ஒலித்தது. கூர்கா மக்களை எழுச்சிகொள்ள வைத்தது.

அவரது தலைமையில் கூர்கா தேசிய விடுதலை முன்னணி, கூர்கா மக்களுக்குத் தனிமாநிலம் கோரி போராடியது. ஆயினும் இடையில் சமரசம் ஆகி முடிந்தது. 1986இல் 'டார்ஜிலிங் கூர்கா மலையக மன்றம்' (Darjeeling Gurkha Hills Council) என்ற அதிகாரம் கூடுதல் பெற்ற உள்ளாட்சி அமைப்பு நிறுவப்பட்டது. ''தனிமாநிலக் கோரிக்கை தள்ளி வைக்கப்பட்டுள்ளதே தவிர, கைவிடப்படவில்லை'' என்று அப்போது கெய்சிங் சொன்னார்.

மலையக மன்றத்தின் தலைவராக கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக அவர் இருந்தார். முன்னேற்றம் ஏதும் ஏற்படாததால் கூர்கா மக்களிடையே அதிருப்தி தலைதூக்கியது. 1999இல் கூர்கா தேசிய விடுதலை முன்னணியில் வெளிப்படையாக இந்த மனக்குமுறல் வெடித்து, பலர் வெளியேறினர்.

மாற்றுத் தலைமை உருவாகாததால் அது வடிவம் பெறாமலேயே இருந்தது.

இந்நிலையில் 2007இல் **பிமல் குருங்** (Bimal Gurung) கூர்கா தேசிய விடுதலை முன்னணியிலிருந்து வெளியேறினார். குருங் தலைமையில் 2007, அக்டோபர் 7இல் **கூர்கா ஜனமுக்தி மோர்ச்சா** (Gurkha Janamukthi Morcha-GJM) அமைக்கப்பட்டு, கூர்காக்களுக்குத் தனிமாநிலம் கோரி தீவிரமாகப் போராடத் தொடங்கியது.

புதிய தலைமைக்காகவே காத்திருந்ததுபோல் கூர்கா இன இளைஞர்கள் அணி அணியாக கூர்கா ஜனமுக்தி மோர்ச்சாவில் இணைந்தனர். கூ.ஜ.மோ. நடத்தும் போராட்டங்களில் கூர்கா இன மாணவர்களே முன்னணிப் பாத்திரம் வகிக்கின்றனர். டார்ஜிலிங் அரசு கல்லூரி, குர்சியாங் கல்லூரி உள்ளிட்ட பல்வேறு கல்வி நிலைய விடுதிகள் இவ்வமைப்பின் பாசறையாக விளங்குகின்றன.

டார்ஜிலிங், தோர்ஸ், தெராய், சிலிகுரி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கூர்கா தாயகம் தனிமாநிலமாக பிரிக்கப்பட வேண்டும் என பிமல் குருங் வலியுறுத்துகிறார். இப்பகுதிகளில் வாழும் கூர்கா மட்டுமின்றி, வங்காளிகளும் பிற மலையக மக்களும் கூட தனி மாநிலக் கோரிக்கையை ஆதரித்துத் திரண்டு வருகின்றனர்.



பிமல் குருங்

மேற்கு வங்க சி.பி.எம். அரசாங்கமும், சி.பி.எம். கட்சியினரும் கூ.ஜ.மோ. இளைஞர்களைத் தாக்குவது கடந்த ஓராண்டாகத் தொடர் நிகழ்வாகி விட்டது.

இன்னொருபுறம் கூர்கா தனிமாநிலக் கோரிக்கையை சட்ட வழியில் தடுத்த நிறுத்த மேற்கு வங்க ஆட்சியும், சுபாஷ் கெய்சிங்கும் கூட்டுச் சதியில் இறங்கினர். டார்ஜிலிங் கூர்கா மலையக மன்றத்தை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஆறாவது அட்டவணையில் சேர்த்துவிட முனைந்தனர். பட்டியலினப் பழங்குடி மக்களுக்கு கூடுதல் அதிகாரம் உள்ள உள்ளாட்சி அமைப்பையும்,

தனிமாவட்ட அமைப்பையும் நிறுவித் தரும் பிரிவாகும் இது.

இதற்கான சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேறி விட்டால் டார்ஜிலிங் உள்ளாட்சி அமைப்பை நிரந்தமாக்கிவிடலாம் கூர்கா தனிமாநிலக் கோரிக்கைக்கு தடை ஏற்படுத்திவிடலாம்; டார்ஜிலிங் நிர்வாகம் தொடர்பாக இனி எது செய்வதாக இருந்தாலும் நாடாளு மன்றத்தில்தான் செய்யமுடியும் கூர்கா மக்களுக்கு அந்த வலு இருக்காது என்பதே மேற்கு வங்க ஆட்சியின் திட்டம். இதுதான் சுபாஷ் கெய்சிங் பதவி ஆசைக்கும் பொருத்தமானது.

சி.பி.எம். முயற்சியால் 2007 நவம்பர் 3இல் நாடாளுமன்றத்தில் அரசமைப்புச் சட்ட ஆறாவது அட்டவணைக்குத் திருத்தம் முன்மொழிந்தது மன்மோகன் சிங் அரசு. பா.ஜ.க. இத்திருத்தத்தை எதிர்த்ததால் அது வாக்களிப்புக்கு விடப்படவில்லை. உள்துறையின் நாடாளுமன்ற நிலைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது.

நிலைக்குழு இச்சிக்கல் குறித்து தனது அறிக்கையை 2008 பிப்ரவரி 28 அன்று நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்தது. ''கூர்கா மக்களிடையே இத்திருத்தம் பற்றி கடுமையான அதிருப்தி நிலவுகிறது. அம்மக்களிடையே கடுமையான கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இது பற்றி புதிதாக மதிப்பீடு செய்து முடிவெடுக்க வேண்டும்'' என அவ்வறிக்கை பரிந்துரைத்தது.

இதற்கிடையில் சுபாஷ் கெய்சிங் தில்லியில் முகாமிட்டு இச்சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுமாறு பிரதமர் மன்மோகன் சிங்கையும், வேறுசில கட்சித் தலைவர்களையும் வலியுறுத்தினார். தில்லிப் பயணத்தை முடித்துக் கொண்டு பிப்ரவரி 18இல் கொல்கத்தா திரும்பிய அவர், டார்ஜிலிங் திரும்ப முடியவில்லை. ஏனெனில் ''துரோகி கெய்சிங்கை கூர்கா தாயக மண்ணில் காலடி எடுத்து வைக்க விடமாட்டோம்'' என கூர்கா ஜனமுக்தி மோர்ச்சா அறிவித்து விட்டது.

கூர்கா மலையகப் பகுதியில் பத்துநாட்கள் முழு அடைப்பு நடைபெற்றது. கூ.ஜ.மோ.வின் மகளிர் அணியினர் காலவரையற்ற உண்ணாப் போராட்டம் நடத்தினர்.

'ஆறாவது பட்டியல் திருத்தம் நிறைவேற்றப்படாது, சுபாஷ் கெய்சிங் மலையக மன்றத் தலைவர் பதவியிலிருந்து மார்ச் 10 அன்று விலகுவார்' என்று அதிகாரப்பூர்வ அறிவிப்பு வந்தபிறகே போராட்டத்தை கூ.ஜ.மோ. நிறுத்தியது.

பிமல் குருங் தலைமையில் கூர்கா தனிமாநிலப் போராட்டம் வீறுகொண்டு நடைபெற்று வருகிறது. இவ்வகையில் 2008, மே7 அன்று சிலிகுரியில் நடைபெற்றப் பேரணியில் இரண்டரை இலட்சம் மக்கள் பங்கேற்றது தனிமாநிலக் கோரிக்கை கூர்கா பகுதியில் வாழும் ஒட்டுமொத்த மக்களின் கோரிக்கை என்பதை பறைசாற்றியது.

இப்பிரச்சினை குறித்து மேற்குவங்க முதலமைச்சர் புத்ததேவ் பட்டாச்சாரியாவுக்கும், கூ.ஜ.மோ. பிரதிநிதிகளுக்கும் இடையில் 2008 மே 22இல் நடைபெற்ற பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்துள்ளது. தனிமாநிலக் கோரிக்கையை ஏற்க முடியாது மேற்குவங்க மாநிலத் திற்குள் கூடுதல் அதிகாரம் உள்ள உள்ளாட்சி என்பது குறித்துப் பேசலாம் என புத்ததேவ் கூறியதே முறிவிற்குக் காரணம்.

''கூர்கா தனிமாநிலம் தவிர வேறு எதையும் நாங்கள் ஏற்க மாட்டோம்'' என பிமல்குருங் உறுதியாகக் கூறிவிட்டார். போராட்டம் தொடர்கிறது.

ஒரு காலத்தில் போராடினார் என்பதற்காக, 'கல்லானாலும் தலைவர்' என்று சுபாஷ் கெய்சிங் பின்னால் கூர்கா மக்கள் தேங்கிக் கிடக்கவில்லை. ஆயிரம் குறை இருந்தாலும், இருப்பதற்குள் இவர் தேவலாம் என எரிகிற கொள்ளியில் நல்ல கொள்ளியை பிடித்துக் கொள்கிற வேலையில் ஈடுபட்டு கூர்கா மக்கள் செயலற்றுக் கிடக்கவில்லை.

துரோகியாகிவிட்ட கெய்சிங்கை அடையாளம் கண்டு ஒதுக்கினர். போர்க்குணமுள்ள புதிய தலைமையை இனங்கண்டு அணி திரண்டனர். இதில் மாணவர்களும் இளைஞர்களும் முன்னணியில் நின்றனர். போராட்டத்தில் முன்னேறு கின்றனர்.

அசாமிலும், காசுமீரிலும் நாகாலாந்திலும் இதுதான் நடந்தது. அவர்கள்தான் தமது பிரச்சினை பற்றி உலகத்தைப் பேச வைத்திருக் கின்றனர்.

தமிழர்கள் இதிலிருந்து பாடம் பெற வேண்டும். புதிய வரலாறு படைக்க வேண்டும். ■

## மணவாழ்த்து

அரியலூர் மாவட்டம் முனையதிரையன்பட்டியைச் சேர்ந்த திரு மு.இலக்குவன் - அரங்கநாயகி இணையரின் மகன் செல்வன் **இ.சிவமணி** அவர்களுக்கும், கடலூர் மாவட்டம் மேலமூங்கிலடியைச் சேர்ந்த தோழர் வீ.செயராமன் - தேன்மொழி இணையரின் மகள் செல்வி **செ.நிவேதிதா** அவர்களுக்கும் திருமண விழா உடையார்பாளையம் ஏ.கே.ஆர். திருமண மண்டபத்தில் 30-04-2008 அன்று இனிதே நடைபெற்றது.



மணமக்கள் சார்பில் புதிய தமிழர் கண்ணோட்டம் இதழ் வளர்ச்சிக்கு ரூ. 500.- அன்பளிப்பாக வழங்கப்பட்டது. மணமக்கள் நீடு வாழ்க!

# தில்லைப் போராட்டம்

# புதிய ஜனநாயகத்தின் அவதூறு

■ கி.வெங்கட்ராமன்

அடிப்படையற்ற அவதூறு மற்றும் வசையாடல்களோடு வழக்கம்போல் *'புதிய ஜனநாயகம்'* ஏடு (மே,2008) ஒரு விமர்சனக் கட்டுரை வெளியிட்டிருக்கிறது. தில்லைப்போராட்டம் குறித்து 'தமிழர் கண்ணோட்டம்' ஏப்ரல் 2008 இதழில் நாம் எழுதியிருந்த செய்திக் கட்டுரைக்கு எதிர்வினையாக இது வெளியாகியிருக்கிறது.

தில்லைப் போராட்டத்தில் ம.க.இ.க. அணியின் பங்கு பணியைக் குறைத்தோ, மறைத்தோ நான் எதுவும் எழுதவில்லை என்பதை 'தமிழர் கண்ணோட்டம்' கட்டுரையைப் படித்த நடுநிலை வாசகர்கள் அறிவார்கள். எனவே மீண்டும் அதுபற்றி இப்போது விவாதிக்கப்போவதில்லை.

ஆயினும் புதிய ஜனநாயகத்தின் 'தொரட்டி' கூறியுள்ள சிலவற்றுக்கு மட்டும் உண்மைத் தகவல்களைப் பதிலாகத் தரவேண்டியுள்ளது.

1. சிற்றம்பல மேடையேறி பாடி வழிபடச் சென்ற சிவனடியார் ஆறுமுகசாமி தீட்சிதர்களால் தாக்கப்பட்டது தொடர்பாக வழக்கு ஒன்று கடலூர் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்தது. வழக்குரைஞர் நடராசன் என்பவர் அதை நடத்திக் கொண்டிருந்தார். அவருக்கும், நமக்கும் நேரடி அறிமுகம் கிடையாது. ஆயினும் இப்பிரச்சினையில் நாம் அக்கறை கொண்டிருக்கிறோம் என்பதை ஆறுமுகசாமி மூலம் அவர் அறிந்திருக்கிறார்.

வழக்கு தொடர்பாக பேசவேண்டியிருப்பதால் வழக்கு நடக்கும் நாளில் நேரில் கடலூர் வருமாறு ஆறுமுகசாமி மூலம் அழைத்தார். நானும் சென்றேன். அன்று சாட்சிகள் குறுக்கு விசாரணை முடிந்திருந்தது.

வழக்கின் நிலைமைகளை விளக்கிய அவர் ''இதனை மனித உரிமை வழக்காக உயர்நீதிமன்றத்தில் நடத்த வேண்டியது அவசியம்' என்றார். அப்போது அவர் கையில் விருத்தாச்சலத்தில் தோழர் ராஜு தலைமையில் நடக்கவிருந்த பொடா எதிர்ப்புக் கருத்தரங்க அழைப்பு இருந்தது. அதனை என்னிடம் காட்டி, ''வழக்குரைஞர் ராஜு மூலம் இப்பிரச்சினையை எடுத்துச் செல்லலாம் எனக் கருதுகிறேன் அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? அல்லது உங்கள் வழியில் வேறு நல்ல வழக்குரைஞர்களை வைத்தாலும் சரியே. எப்படியிருந்தாலும் வழக்கை உறுதியாக நடத்த வேண்டும்'' என்றார்.

''ராஜு எனக்கு நெருக்கமானவர் தான். அவர் மூலமே நடத்தலாம். பொடா எதிர்ப்புக் கூட்டத்திற்கு பார்வையாளராக நானும் வருவேன். அங்கு பேசி முடித்துவிடலாம்'' என்று நான் கூறினேன். அன்று விருத்தாசலம் வருமாறு ஆறுமுகசாமியிடமும் கூறிவிட்டு வந்தேன்.

விருத்தாச்சலத்தில் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் சார்பில் பொடா எதிர்ப்புக் கருத்தரங்கம் தொடங்குவதற்கு முன்பாக அரங்கத்தில் நாங்கள் சந்தித்தோம். ஆறுமுகசாமியை ராஜுவுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். சுருக்கமாக வழக்கு குறித்துப் பேசினோம்.

ராஜு இளைஞர் என்பதால் ஆறுமுகசாமிக்குத் தொடக்கத்தில் சிறு தயக்கம் இருந்தது. அப்போது இவர்களது அமைப்பு பற்றியெல்லாம் ஆறுமுகசாமிக்கு எதுவும் தெரியாது. ''உங்களுக்கு அரசு வைத்துத் தரும் இலவச வழக்குரைஞர்களை விட இவர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் திறமையானவர்கள்தாம்'' என்று சொல்லி, அவரது தயக்கத்தைப் போக்கினேன்.

2. இதற்கு சில நாள்கள் சென்று ராஜுவும் அவரது சகோதரரும் சிதம்பரத்தில் என்னைச் சந்தித்தார்கள். த.தே.பொ.க. தோழரின் உழுவை பராமரிப்பகத்தில் அந்த சந்திப்பு நடந்தது. ''அமைப்பில் பேசி விட்டேன். வழக்கையும் இதுகுறித்த இயக்கங்களையும் நடத்துவது என முடிவு செய்திருக்கிறோம். நாம் கூட்டாக இதன் மீதான இயக்கங்களை நடத்தலாமா?'' என தோழர் ராஜு கேட்டார்.

''ம.க.இ.க.வுடன் த.தே.பொ.க. கூட்டு இயக்கம் நடத்துவது சாத்தியமில்லை. ஏனெனில் ம.க.இ.க. நடைமுறையில் ஒரு சீர்குலைவு அமைப்பு; மறைமுகமான பார்ப்பனிய அமைப்பு என்பது த.தே.பொ.க.வின் மதிப்பீடு. எனவே கூட்டியக்கமோ, ம.க.இ.க.வுக்கு துணையாக செயல்படுவதோ சாத்தியமில்லை. நீங்களே உங்கள் வழியில் நடத்துங்கள்'' என் நான் தெளிவுபடக் கூறிவிட்டேன்.

ஆயினும் அதற்குப் பிறகு 2004, 2005, 2006ஆம் ஆண்டுகளில்

இப்பிரச்சினை குறித்து நாம் தனியே நடத்திய உண்ணா நிலைப் போராட்டங்கள், தெருமுனைப் பரப்புரை இயக்கங்கள், பொதுக் கூட்டம் ஆகியவற்றை சிதம்பரத்தில் உள்ள தமிழ் உணர்வாளர்களும், செய்திகளை ஊன்றி கவனிக்கிற நோக்கர்களும் அறிவார்கள்.

3. திருச்சிற்றம்பல மேடையில் பக்தர்கள் பாடி வழிபட ம.க.இ.க. போராட்டம் நடத்தியதால் ம.க.இ.க. மறைமுக பார்ப்பனிய அமைப்பு என்ற நமது மதிப்பீடு பொய்யாகி விடாது.

ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் நிதி பெறும் சில 'தன்னார்வ' அமைப்புகள் கூட உலகமயத்தை எதிர்த்து சில போராட்டங்கள் நடத்துவதைப் பார்க்கிறோம்.

ம.க.இ.க.வும் அதனை வழிநடத்துகிற இ.க.க (மா-லெ) மாநில அமைப்புக்குழுவும் தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டை எதிர்க்கின்றன. பார்ப்பனியப் புனைவான இந்திய தேசியத்தை ஆதரிக்கின்றன. மார்வாடி எதிர்ப்பு கூடாது என்கின்றன. சோ-ராம் குரலிலேயே விடுதலைப் புலிகளை எதிர்க்கின்றன.

எனவே இந்த அமைப்புகளை மறைமுகப் பார்ப்பனிய அமைப்புகள்; இந்திய ஆளும் சக்திகளுக்கு மறைமுகமாக சேவை செய்யும் சீர்குலைவு அமைப்புகள் என த.தே.பொ.க. மதிப்பிடுகிறது.

இன்றுவரை ம.க.இ.க. வின் இந்த அடிப்படை நிலைபாடுகளில் மாறுதல் இல்லை. எனவே நமது அதே மதிப்பீடும் தொடர்கிறது.

4. வ.சுப. மாணிக்கனார் தலைமையில் தமிழறிஞர்களும், உணர்வாளர்களும் போராடுவதற்கு முன்னால் சிற்றம்பல மேடையில் தேவாரம், திருவாசகம் பாடுவதை தீட்சிதர்கள் மறுத்தே வந்தனர். அவர்களது போராட்டத்திற்குப் பிறகே, 1987 முதல் தீட்சிதரில் ஒருவர் பாடுவது என்ற வகையில் தேவாரம் ஒலித்தது. இது முதல்கட்ட வெற்றி என்றோம்.

காலை பூசை முடிவில் ஒரே ஒரு பாடல்பாடி அந்த 'சடங்கை' தீட்சிதர்கள் முடிக்கிறார்கள். அதை முனைவர் த.செயராமன் குறிப் பிட்டிருந்தார். இரண்டுமே உண்மைதான்.

இதில் முரண்பாடு இருப்பது போல் 'தொரட்டி' குதிக்கிறார்.

5. மார்ச் 2 (2008) மாலை காவல்துறை தடியடிக்குப் பிறகு ஆறுமுகசாமி 'அனாதையாக' அமர்ந்திருந்தார் என்று பு.ஜ. த.தே.பொ.க. மீது பாய்கிறது. கைதானது 34 பேர். ம.க.இ.க. பொறுப்பாளர்கள் உள்ளிட்ட மீதமுள்ள பலரும் அங்கேதான் இருந்தார்கள். இந்நிலையில் அவரை அனாதையாக விட்டு விட்டதாக நம்மீது தோழர் 'தொரட்டி' பாய்வது வியப்பாக இருக்கிறது.

உண்மையில் நடந்தது என்ன? காவல்துறை ஆறுமுகசாமியைக் கைது செய்யவில்லை. கைதானோர் பட்டியலில் அவரையும் சேர்த்துவிட வேண்டும் என்று ம.க.இ.க.வினர் முயன்று கொண்டிருந்தனர். சிதம்பரம் நகரக் காவல் நிலையத்திற்கு எதிர்ப்புறம் உள்ள நடைமேடையில் அவரை அமர வைத்திருந்தனர். அருகே சென்னையிலிருந்து ம.க.இ.க. சார்பில் வந்திருந்த வழக்குரைஞர் இருந்தார். ஆறுமுகசாமியைக் கைது செய்யுமாறு காவல்துறை அதிகாரிகளை அவர் வலியுறுத்திக் கொண்டிருந்தார்.

த.தே.பொ.க. சிதம்பர நகரச் செயலாளர் தோழர் கு.சிவப் பிரகாசமும் நானும் இரவு நீண்ட நேரம் வரை அவர்கள் அருகிலேயே இருந்து சிறு சிறு உதவிகளைச் செய்து கொண்டிருந்தோம்.

அடுத்த நாள் காலையில் நீதிமன்றத்தில் தொடர்ந்து வலியுறுத் தினார்கள். அதன் பிறகு ஆறுமுகசாமியும் கைது செய்யப் பட்டார்.

5. அதன் பிறகு மார்ச் 12 தொடங்கி நாளதுவரை சிவ நெறியார்கள் தமிழகமெங்கிருந்து த.தே.பொ.க.- தமிழ்க் காப்பணியைத் தொடர்பு கொண்டு கிட்டத்தட்ட நாள்தோறும் வருகிறார்கள். திருச்சிற்றம்பல மேடையில் நின்று தேவாரம், திருவாசகம் பாடி மனமுருகி வழிபடுகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் காலை நேரத்தில் வந்து வழிபடவே விரும்புகிறார்கள்.

## சிதம்பரம் கோவிலைத் தமிழக அரசு ஏற்க வேண்டும் மலேசியத் தமிழர்கள் கோரிக்கை

*தில்லைத் திருக்கோவில் நிலைகுறித்து விவாதிக்க மலேசியா, கிள்ளான் 'செம்பருத்தி' குழுவினர் 13.4.2008 அன்று கூட்டம் நடத்தினர். கிள்ளான் கே.பி.எஸ். பயண நிறுவன மாடியில் நடைபெற்றக் கூட்டத்தில் கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*1. தில்லைக் கோவில் நிலையில் தமிழக அரசு மிகக் கவனமாகச் செயல்பட வேண்டும். இக்கோவிலில் தமிழ் மட்டுமே முழங்க வேண்டும். இறைவனை வழிபடச் செய்யவும் போற்றிடவும் தமிழ் மந்திரங்களை மட்டுமே ஓதிட வேண்டும்.*

*2. இக்கோவில்பால் உரிமை கோரிக் கொண்டிருக்கும் தீட்சிதர்களை உடனடியாக அகற்ற வேண்டும். இது தமிழனால் தமிழர்களுக்காக கட்டப்பட்டிருக்கும் கோவில். இக்கோவில் உலகத் தமிழர்களின் தனிப்பெரும் சொத்து. இது தமிழனின் தன்மானச் சின்னம் என்பதை தீட்சிதர்களுக்கு உணர்த்த வேண்டும்.*

*3 இக்கோவில் தமிழக அரசின் கட்டுப்பாட்டிற்குள் இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், தமிழக அரசின் அதிகாரத்துக்குட்பட்டதாக இக்கோவில் இருக்க வேண்டும்.*

இவர்களை வரவேற்று தங்கவைப்பது, ஒரே நேரத்தில் இரண்டு ஊர்களிலிருந்து வந்து மனநிறைவாக வழிபட முடியாமல் திரும்புவதைத் தவிர்க்க நேரத்தை ஒழுங்கு செய்வது, தீட்சிதர்களோடு அவ்வப்போது எழும் உரசல்களை எதிர்கொண்டு நெறிப்படுத்துவது.... போன்ற பணிகளில் த.தே.பொ.க., தமிழ்க் காப்பணி தோழர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

இப்பணிக்கென்று தமிழ்க் காப்பணி சார்பில் 'தமிழ் வழிபாட்டுரிமை பாதுகாப்புக்குழு' அமைக்கப்பட்டுள்ளது. இதன் நெறியாளராக தோழர் சிவப்பிரகாசம் இருந்தாலும், வழமையாகக் கோயிலுக்குச் சென்று வழிபடும் இளைஞர்களைக் கொண்டே இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழர் தேசிய இயக்கத்தின் வை.இரா.பாலசுப்பிரமணியன் இக்குழுவின் அமைப்பாளராக உள்ளார்.

தமிழகமெங்குமிருந்து பல சிவனடியார் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் இக்குழுவினரைத் தொடர்புகொண்டு பாடி வழிபடுவது தொடர்கிறது.

பெரும்பாலோர் காலையில் வழிபட்டுச் சென்று விடுகிறார்கள். ஆம்பூர், திருநெல்வேலி, வடலூர் பகுதிகளிலிருந்து வந்தவர்கள் காலை8, காலை 10 மணி, மாலை என வெவ்வேறு நேரங்களில் பாடி வழிபட்டதும் உண்டு.

தொடக்கத்தில் பதட்டம் இருந்த சூழலில் மேடையில் பாட விரும்புகிறவர்கள் காவல்துறையை அணுக வேண்டும் என மாவட்டக் கண்காணிப்பாளர் அறிவித்திருந்தார். அந்த அடிப்படையில் அமைதிக் கூட்டம் (Peace Meeting) நடந்து எழுத்துப்பூர்வமாக செய்து கொள்ளப் பட்டதுதான் நான் குறிப்பிட்ட உடன்பாடு.

காலை வேளையைத் தவிர பிற காலங்களில் பாடமாட்டோம் என்பது அதன் பொருளல்ல என எல்லோருக்கும் புரியும். 'தொரட்டி'க்கு மட்டும் அது புரியவில்லை. அரசாணைக்கு மாறாக உள்ளூர் காவல்நிலையத்தில் எழுதிக் கொள்ள முடியாது. நாம் அவ்வாறு செய்யவுமில்லை.

உண்மை இவ்வாறிருக்க, ஏதோ ம.க.இ.க. பெற்றுத்தந்த ஆறுகால வழிபாட்டு உரிமையை ஒரு காலமாக வெட்டிக் குறுக்கிவிட்டதாக த.தே.பொ.க. மீது 'புதிய ஜனநாயகம்' அவதூறு அள்ளி வீசுகிறது.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி மீதும், வ.சுப.மாணிக்கனார் போன்ற தமிழறிஞர்கள் மீதும் ம.க.இ.க. வசைமாரி பொழிந்தாலும் தில்லைப் பிரச்சினையில் ம.க.இ.க.வின் பணியை நாம் குறைத்துக் கூறியதே இல்லை.

அதேநேரம் ''ம.க.இ.க.வின் அரசியலானது சாரத்தில் இந்திய ஆளும் வர்க்கத்திற்குச் சேவை செய்கிறது. இந்துமதம், இடஒதுக்கீடு குறித்த அதன் பார்வை பார்ப்பனியத்திற்குச் சேவை செய்கிறது'' என்ற நமது திறனாய்விலும் மாற்றமில்லை. ■

## ''ஆளுமை வளர்ச்சி'' நூல் வெளியீடு




மனிதவளத்துறை வல்லுநர் பாவலர் காரை மைந்தன் அவர்கள் எழுதிய 'ஆளுமை வளர்ச்சி' நூல் வெளியீட்டு விழா 04.5.2008 அன்று சென்னை தேவநேயப் பாவாணர் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. பொன்னவைக்கோ அவர்கள் நூலை வெளியிட திரு. பாண்டியராசன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கவிஞர் ஈரோடை தமிழன்பன் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் நூலின் சிறப்புகளை எடுத்துரைத்தனர்.

நேர்முகத் தேர்வுகளைத் தமிழில் நடத்துவதால் உள்ள நலன்களை எடுத்துச் சொல்லி தமிழ்வழி நிர்வாகம் நடத்துவது தான் ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் எனக் கூறிய பல்துறை வல்லுநர்கள் அதற்கு இந்த நூல் சிறந்த வழிகாட்டியாய் உள்ளது என்றும் பரிந்துரைத்தனர்

## திருமண வாழ்த்து



*காஞ்சிபுரம் கீழம்பி தோழர் முத்து- திருவாட்டி பவானி ஆகியோர் மகன் செல்வன் **பழனிக்கும்**, காஞ்சிபுரம் புரிசை திரு.க.இராசேந்திரன்-திருவாட்டி சரசுவதி ஆகியோர் மகள் **பூங்கொடிக்கும்** காஞ்சிபுரத்தில் 2039 சித்திரை 4ஆம் நாள் (16.4.2008) தோழர் பெ.மணியரசன் (பொதுச்செயலர், த.தே.பொ.க.) தலைமையில் மணவிழா சிறப்பாக நடந்தது. திருவாளர்கள் பா.அன்புமணி, கு.அருளானந்தம், சி.நடராசன் (மா.பெ.பொ.க.), காஞ்சி அமுதன் (பாலாறு பாதுகாப்பு இயக்கம்), கி.நடராசன் (தலைமை ஆசிரியர்), டி.ஏ.சுப்பிரமணியம் (ஊராட்சித் தலைவர், ஈஞ்சம்பாக்கம்), புகழேந்தி உமாராணி, நாகு முனியம்மாள், சி.நீலகண்டன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். தோழர் முத்து அனைவர்க்கும் நன்றி கூறினார்.*

*மணமக்கள் சார்பில் புதிய தமிழர் கண்ணோட்டத்திற்கு ரூ.1000 அன்பளிப்பு வழங்கப்பட்டது. மணமக்கள் நீடு வாழ்க!*

# கருநாகம்

## ■ மு.நியாஸ் அகமது

நான்கு வழிச் சாலை பற்றி ஆவணப் படம் எடுப்பதற்காக நான் களப் பணியில் ஈடுபட்டிருந்தபோது சேகரித்தத் தகவல்கள் அதிர்ச்சியில் ஆழ்த்தின. சாலை போடுவதற்காக ஏக்கர் கணக்கில் விளைநிலங்கள் கையகப்படுத்தப் பட்டுள்ளன. ஆனால் எதற்கும் ஈட்டு தொகை தரப்படவில்லை. தஞ்சாவூர் வல்லம்புதூரைச் சேர்ந்த விவசாயி சவரிமுத்து காலை புல்டோசரின் உறுமல் சத்தத்தில் எழுந்து பார்க்கும் பொழுது தான் புதிதாகக் கட்டிய கட்டிடம் இடிக்கப்படுவதைக் கண்டு அதிர்ச்சியில் ஆழ்ந்தார். அவரிடம் எந்த அனுமதியும் பெறாமல் அவருடைய கட்டிடம் இடிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை – திருச்சி நான்கு வழிச் சாலைபோடும் ஒப்பந்தத்தைப் பெற்றுள்ள மதுக்கான் நிறுவனத்தில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் பெரும்பாலோர் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். மூன்றாம் நிலை ஊழியர்கள் மட்டும்தான் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். திருச்சி பாரத் மிகுமின் நிலையத்திலும் துப்பாக்கித் தொழிற்சாலையிலும் தமிழர்களுக்கான வேலை வாய்ப்புக்காகப் போராடிக் கொண்டிருக்கும் வேளையில், சாலை போடும் பணியில் கூட மண்ணின் மக்களுக்கான வேலை பறிக்கப்பட்டுள்ளது.

இயல்பாக ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு தன்மையிருக்கும். அந்தத் தன்மையைச் சார்ந்தே மக்களின் பழக்க வழக்கங்கள் இருக்கும். இவர்கள் இதில் எதையும் கருத்தில் கொள்ளாமல் நான்கு வழிச் சாலைகளைப் போட்டுக் கொண்டிருக்கின்றனர். கிராமங்களில் சாலை போடலாம். கிராமங்களை அழித்து சாலை போடலாமா?

இந்த ராட்சச சாலைகளில் கண்டிப்பாக மிதிவண்டியிலோ இரு சக்கர வாகனத்திலோ செல்ல முடியாது. (நம்ப இயலாதோர் பயணித்துப் பார்க்கவும்.) அதற்கான எந்த இடமும் இந்தச் சாலையில் ஒதுக்கப் படவில்லை. மாருதி 800, இன்டிகா போன்ற சிறு கார்கள் கூட இந்த சாலையில் செல்வது கடினம். அப்படியானால் இந்தச் சாலைகள் யாருக்காக? இத்தனை நாள் நாம் நம் வீட்டைப் போலப் பயன்படுத்திய சாலைகள் நமக்கு அந்நியப்பட்டு சில நிறுவனங்களின் சாலைகளாக மாறியதன் குறியீடுதான் இது. இந்தச் சாலைகள் நமக்காகப் போடப் படவில்லை. பெரு நிறுவனங்களின் கனரக வாகனங்கள் செல்வதற்காகப் போடப்படுபவை.

இந்த சாலைகள் நமக்கு அரசாங்கம் போட்டுத் தரவில்லை. எல் அண்ட் டி, மதுக்கான் போன்ற பெரு நிறுவனங்கள்தாம் போடுகின்றன. இந்தச் சாலைகள் போடுவதற்காக செலவிடப்படும் தொகையை இலாபத்தோடு சேர்த்து அவர்கள் சுங்கச் சாவடி வைத்து வசூலித்து விடுவார்கள். இனி நாம் தஞ்சையிலிருந்து திருச்சி செல்ல வேண்டுமானால் அந்த சுங்கச் சாவடியில் பணம் செலுத்திவிட்டுத்தான் செல்ல முடியும். அப்படியானால் இது அரசாங்கச் சாலைகள் கிடையாது. தனியார் சாலைகள்தாம்.

மூவாயிரம் கிலோ மீட்டர் சாலைக்காக இவர்கள் வெட்டிய மரங்களின் எண்ணிக்கை மூன்று லட்சம். தஞ்சை திருச்சி சாலையில் மட்டும் சாலை போடுவதற்காக இவர்கள் கையகப்படுத்திய விளை நிலங்கள் 100–லிருந்து 150 ஏக்கர் இருக்கும். சாலை போடுவதுதான் வளர்ச்சியென்றால் அந்த 100 ஏக்கர் நிலத்தில் விளையும் அரிசியோ கரும்போ காய்கறிகளோ வளர்ச்சி கிடையாதா?

நாற்கர சாலைகளின் நன்மைகளைப் பதிவுசெய்ய கேமராவைத் தூக்கினேன். ஆனால் அந்த அகண்ட சாலையின் அடியில் நசுங்கியவரின் அலறலும் விரிந்த பாதைகளில் விழுங்கப்பட்டவரின் வேதனைகளும் பதிவாகிவிட்டன. தவளையை விழுங்கும் பாம்புபோல வயல்களையும் வளங்களையும் விழுங்கியும் அடங்காப் பசியோடு நீள்கிறது இந்தக் கருநாகம். ■

## தமிழக உழவர் முன்னணியின் சிறப்புத் தகவல் நேரம்



சிதம்பரம் வட்டம் சாக்காங்குடியில் தமிழக உழவர் முன்னணி நடத்திய சிறப்புத் தகவல் நேரம் 20.4.2008 அன்று சிறப்பாக நடைபெற்றது.

தோழர் தி.செல்வராசு வரவேற்றுப் பேசினார். த.உ.மு.வின் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் என்.செயபாலன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலர் சி.ஆறுமுகம் முன்னிலை வகித்தார். த.தே.பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினரும், த.உ.மு.வின் ஆலோசகருமான தோழர் கி.வெங்கட்ராமன் வாழ்த்துரை வழங்கினார்.

முனைவர் த.செயராமன் “இந்திய அரசமைப்புச் சட்டமும் தேசிய இன உரிமையும்” என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார்.

முடிவில் தோழர் தி.அருணகிரி நன்றி நவின்றார். கூட்டத்தில் உழவர்களும், மாணவர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

# பிரசண்டா பாதையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் உண்டா?



■ தமிழ்த்தேசியன்

நேப்பாளப் புரட்சியைத் தலைமை தாங்கி நடத்திக்கொண்டிருக்கும் நேப்பாள பொதுவுடைமைக் கட்சி (மாவோயிஸ்ட்) கடந்த நூற்றாண்டில் கடைபிடிக்கப்பட்ட மார்க்சிய - லெனினியக் கோட்பாடுகள் சிலவற்றில் பலமாற்றங்கள் கொண்டு வந்துள்ளது. இதனால் இக்கட்சி தனது வழிகாட்டும் தத்துவத்திற்கு, ***மார்க்சிய - லெனினிய - மாவோயிய- பிரசண்டாபாதை*** என்று கூறுகிறது. பிரசண்டா அக்கட்சியின் தலைவர் ஆவார். 2001-ம் ஆண்டு பிரசண்டாபாதை என்பது மார்க்சிய - லெனினிய - மாவோயியத்துடன் இணைக்கப்பட்டது.

மண்ணுக்கேற்ப மார்க்சியத்தை வளர்த்துச்செல்லும் கட்சிகள், மரபுவழிப்பட்ட மார்க்சியத்தில் தாங்கள் செய்துள்ள சில மாற்றங்களைக் குறிப்பதற்காகத் தங்கள் கட்சித் தலைவரின் பெயரை வழிகாட்டும் தத்துவத்துடன் இணைத்துக்கொள்வது இப்பொழுது வழக்கமாக உள்ளது. எடுத்துக்காட்டாக பெருநாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சி தனது வழிகாட்டும் தத்துவம் “மார்க்சிய - லெனினிய - மாவோயிய - கொன்சாலோ சிந்தனைகள்” என்று கூறுகிறது.

பிரசண்டா பாதையின் முகாமைக் கூறுகள் யாவை?

‘புரட்சிக்குப் பின் அமைக்கப்படும் அரசு பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றை வர்க்கத் தலைமையில் மட்டும் இருக்காது. மக்கள் தலைமையில் இருக்கும்’. இதுபற்றி பிரசண்டா கூறுகிறார்.

**“வரலாறு வழங்கிய படிப்பினைகளை எங்கள் கட்சி தீவிரமாக ஆய்வு செய்தது. குறிப்பாக, 20-ம் நூற்றாண்டில் நடந்த மகத்தான புரட்சிகள் மற்றும் எதிர்ப்புரட்சிகள் ஆகியவற்றை ஆய்வு செய்தது. முழுமையாக விவாதித்த பின், நாங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க புதிய முன்மொழிவொன்றை வைத்தோம். “21-ஆம் நூற்றாண்டு சனநாயக வளர்ச்சி ” என்பது அதன் பெயர். அக்கோட்பாட்டின்படி புதிய அரசு பொதுவான மக்கள் திரளின் (General Masses) ஆதிக்கத்திலும், கட்டுப்பாட்டிலும், கண்காணிப்பிலும் இருக்கும்.**

**“அரசியல் கட்சிகளிடையே சுதந்திரமான போட்டி இருக்கும். ஆனால் அக்கட்சிகள் நிலக்கிழமை, ஏகாதிபத்தியம் ஆகியவற்றை எதிர்த்து மக்களுக்காகப் பாடுபட வேண்டும் என்ற நிபந்தனை இருக்கும்.”**

*- பிரசண்டா நேர்காணல் டைம் இணைய இதழ் 23.04.2005.*

2008- இன் தொடக்கத்தில் பிரசண்டா கொடுத்த நேர்காணல் ஒன்றில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தங்கள் கட்சி கைவிட்டதைக் கீழ்வருமாறு கூறுகிறார்.

*வினா: பலகட்சி முறையில் நம்பிக்கை கொண்டுள்ளீர்களா அல்லது உங்கள் ஒரு கட்சி ஆட்சி மட்டும்தான் குறிப்பிட்ட எதிர்காலத்திற்கு நடக்கவேண்டும் என்று விரும்புகிறீர்களா?*

இவ்வினாவிற்கு அழுத்தமாக விடை தர விரும்புகிறேன். மூன்றாண்டுகளுக்கு முன், எங்கள் நடுவண் குழு, 20-ஆம் ஆண்டு நூற்றாண்டு கம்யூனிஸ்ட் அரசுகளின் அனுபவங்களைப் பற்றி ஆராய்ந்தது. நாங்கள் சனநாயக வளர்ச்சிக்கான ஒரு முன்மொழிவை வைத்தோம்.

21-ஆம் நூற்றாண்டில் , 20-ஆம் நூற்றாண்டு அரசுகளைப் போன்ற ஓர் அரசை நாம் அமைக்கக் கூடாது.

அந்த ஆய்வுத்தாளின் உணர்வு என்னவெனில், நிலக்கிழமை மற்றும் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் எல்லாக் கட்சிகளும் அமைதியான வழியில் போட்டியிடட்டும் என்பதே,

பல கட்சி முறை இருக்க வேண்டும். நிலக்கிழமை மற்றும் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கின்ற நிபந்தனையுடன் அரசமைப்புச் சட்டப்படி பலகட்சிப் போட்டி இருக்க வேண்டும்.

இந்த ஆவணம் மூன்று ஆண்டுகளுக்கு முன் தெளிவான சொற்களுடன் ஒரு மனதாக நிறைவேற்றப் பட்டது.

அண்மையில் அரசியல் கட்சிகளுடன் நாங்கள் ஹீசெய்து கொண்ட உடன்படிக்கையில் கூட, நாங்கள் பல கட்சி முறையை ஏற்றுக்கொள்வதாக உறுதி கூறியுள்ளோம்.

நாங்கள் 20-ஆம் நூற்றாண்டிலிருந்து என்ன பார்த்தோம், அதிலிருந்து நாங்கள் என்ன கற்றுக் கொண்டோம் என்பது முகாமையானது. சனநாயகம் - சர்வாதிகாரம் என்பவற்றை எப்படிப் புரிந்துகொண்டோம் என்பதும் , அது குறித்த உணர்வு மட்டத்தை உயர்த்த வேண்டும் என்பதும் முகாமையானவை.

நாங்கள் அத்தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

எங்கள் எதிரிகள் எங்களை வறட்டுச் சூத்திரவாதப் பார்வையில் புரிந்து கொள்கிறார்கள். நாங்கள் வறட்டுச் சூத்திரவாதிகள் அல்லர்; எங்கள் எதிரிகள்தாம் அப்படி இருக்கிறார்கள். அவர்கள் எங்களை 20-ஆம் நூற்றாண்டுக் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்க்கிறார்கள். ஆனால் நாங்கள் ஏற்கெனவே 21-ஆம் நூற்றாண்டை நோக்கிச் சென்றுவிட்டோம்.

.. ..

சுருக்கமாக, சனநாயகம் மற்றும் சர்வாதிகாரம் ... இவ்விரண்டுக்கும் இடையே உள்ள முரண்பாட்டை எப்படிப் பயன்படுத்துவது என்பதில், முன்னேற்றம் கண்டுள்ளோம்.

சி.என்.என்.-ஐ.பி.என். தொலைக்காட்சிக்கு 18.5.08 அன்று பிரசண்டா அணித்த நேர்காணலில் ''ஞானேந்திரா தமது அரண்மனையை விட்டு மே 27ஆம் நாளுக்குள் வெளியேறிவிட வேண்டும். அவ்வாறு வெளியேறி சாதாரணக் குடிமகனைப்போல ஒரு அரசியல் கட்சி தொடங்கி, தேர்தலில் போட்டியிட விரும்பினாலும் அந்த உரிமையை நாங்கள் அங்கீகரிக்கிறோம்'' என்றார்.

(தி இந்து-19.5.08)

*வினா:- **20-ஆம் நூற்றாண்டின் எதிர்மறை அனுபவம் என்ன? அப்போது அதிக அதிகாரம் பெற்றவர்களாகவும் அதிக உரிமை பெற்றவர்களாகவும் இருந்திருக்க வேண்டிய மக்கள் அவற்றை ஏன் பெறமுடியவில்லை?***

நாங்கள் அவற்றை ஆய்வு செய்து வருகிறோம்.

அது (மக்கள் அதிக அதிகாரமும் உரிமையும் பெறுவது) ஏன் ஸ்டாலின் காலத்தில் நடைபெறவில்லை? இது எந்த அளவுக்கு மாவோ காலத்தில் நடந்தது? இவற்றையெல்லாம் ஆய்வு செய்து வருகிறோம்.... அதன்வழி புதிய சிந்தனை முறையை வளர்த்து வளர்கிறோம்.

மார்க்சியம் - லெனினியம் - மாவோயியம் பற்றிப் பேசும் போது அவற்றை மேம்படுத்த வேண்டும் என்று நம்புகிறோம்.

வெறுமனே அதைச் செயல்படுத்துவது மட்டும் போதாது. அதைப் பாதுகாக்க வேண்டும்; செயல்படுத்த வேண்டும்; மேம்படுத்த வேண்டும்.

- இணையதளம்:

ஆய்தப்புரட்சி நடத்திய நேப்பாள மாவோயியக் கட்சி ஆய்வு செய்து எடுத்துள்ள முடிவுகள், தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி ஏற்கெனவே எடுத்துள்ள நிலைபாடுகள் சரியானவை என்று உறுதிபடுத்துவனவாக உள்ளன. மண்ணுக்கேற்ற மார்க்சியம், தமிழ்த்தேசியப் புரட்சிக்குத் தமிழ்த்தேசிய சக்திகளின் கூட்டுத்தலைமை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிடுவது, பலகட்சி போட்டியிடும் முறையை உறுதிபடுத்துவது என்பவை ஏற்கெனவே, விவாதித்து , த.தே.பொ.க. எடுத்த முடிவுகளாகும்.

வழிகாட்டும் நெறிகளைச் சரியாக வடித்தெடுத்தால் மட்டும் போதாது. அவை மக்கள் திரளின் நெறிகளாக மாற்றப்பட வேண்டும் என்ற தன் திறனாய்வுடன் த.தே.பொ.க. தனது செயல்களை வேகப்படுத்துகிறது. ■

## தோழர் கி.நடராசன் தந்தையார் காலமானார்



*காஞ்சிபுரம் திரு.கி.நடராசன் (தலைமையாசிரியர்) அவர்களின் தந்தையார் திரு.**வெ.கிருட்டிணன்** அவர்கள் 13.4.08 அன்று காலமானார்.*


*15.7.1923இல் பிறந்த திரு.கிருட்டிணன் சிறந்த நாடகக் கலைஞர் ஆவார். அவர் இவ்வாண்டு தமிழக அரசு வழங்கவுள்ள 'கலைமாமணி' விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டிருந்தார்.*

*1.ஜலேந்திர மோட்சம்,2. கண்ணன் காண்டீபன், 3. இரணியவிலாசம், 4. கட்டாயக் கல்யாணம், 5. அரிச்சந்திரா 6.பத்மாவதி கல்யாணம், 7. சிறு தொண்ட பக்தன் உள்ளிட்ட நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்றவர்.*

*திரு. கிருட்டிணன் அவர்கள் மறைவுக்குத் புதிய தமிழர் கண்ணோட்டம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

# பஞ்சாயத்து ராஜ்: யானை விழுங்கிய விளாம்பழங்களாய் மாநிலங்கள்

■ முனைவர் த.செயராமன்



முன்பு எப்போதையும் விட தேசிய இன அடையாளங்கள் மீது கடும் தாக்குதல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மாநில உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. தேசிய இன உரிமைகளை இந்திய ஒற்றையாட்சி அரசியல் சட்டத்தின் மூலம் முன்னமே பறித்துவிட்ட நிலையில், மாநில அரசுகளின் எஞ்சியிருக்கக் கூடிய உரிமை களையும் ஒட்டு மொத்தமாக ஒழித்துக் கட்ட புதிய உத்திகளை வகுக்கிறது டில்லி வல்லாதிக்க அரசு.

கடந்த ஏப்ரல் மாதம் 22-24 ஆகிய தேதிகளில் புதுடில்லியில் உள்ளாட்சித் தலைவர்கள் மாநாட்டை மைய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் நடத்தியது. இம்மாநாட்டிற்கு, தமிழகத்திலிருந்து மாவட்ட மற்றும் ஒன்றிய உள்ளாட்சித் தலைவர்களை அனுப்பிவைக்க மறுத்து, அம்மாநாட்டில் பேசப்பட இருக்கும் வரைவு அறிக்கையிலுள்ள சிக்கலான பகுதிகள் நீக்கப்பட வேண்டுமென்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதியிருநதார். அதன்படி சிக்கலுக்குரிய பகுதிகள் நீக்கப்பட்டு விட்டதாக மன்மோகன்சிங் பதில் அனுப்பியிருந்தார்; ஆனாலும் பேராளர்களை அனுப்பி வைப்பதற்கான கால அவகாசம் இல்லாமற் போனமையால் தமிழ் நாட்டிலிருந்து ஊராட்சித் தலைவர்கள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ள முடியவில்லை என்பதை தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப் பேரவையில் அறிவித்தார்.

ஏப்ரல் மாதம் புதுடில்லியில் நடைபெற்ற இந்த அனைத்திந்திய மாநாட்டில் இந்தியா முழுவதிலிருந்தும் மாவட்ட உள்ளாட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கூடி உள்ளாட்சியை வலுப் படுத்துவது என்பது பற்றிய முன்னமே தயாரிக்கப்பட்டிருந்த வரைவு அறிக்கையை விவாதித்து, எடுக்கப்பபட்ட முடிவுகளுடன் சேர்த்து அந்த அறிக்கையை பிரதமரிடம் ஒப்படைப்பது என்பது திட்டம்.

இதை உள்ளாட்சியை வலுப்படுத்தும் நோக்கம்தானே என்று எளிதில் ஒதுக்கிவிட முடியாது. படிப்படியாக மாநில அரசுகளை அலங்கார அமைப்பாக ஆக்கிவிட்டு மாவட்ட உள்ளாட்சிகள் வரை டில்லியின் நேரடி ஆட்சியைக் கொண்டுவரும் நாசகார அரசியல் திட்டம் ஒரு வரைவு அறிக்கையாகத் தயாராகி இருந்தது.

**15 ஆண்டு நிறைவு விழா என்ற பெயரில் புதிய உத்தி**

புதிய பஞ்சாயத்து ராஜ் முறையைக் கொண்டுவந்த 73ஆவது அரசியல் சட்டத் திருத்தம் செய்யப் பட்டு 15 ஆண்டுகள் ஆவதை யொட்டிய நிகழ்ச்சியாக ஊரக, உள்ளாட்சி, மாவட்ட, ஒன்றியத் தலைவர்கள் மாநாடு புதுடில்லியில் நடைபெற்றது. சோனியாகாந்தி, பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்ற இம்மாநாட்டில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது.

'உள்ளாட்சித் துறையை வலப்படுத்துவதற்கான நடைமுறைகள் குறித்து ஓர் அறிக்கையைத் தயாரித்து, அதை புதுடில்லியில் மீண்டும் ஒரு மாநாட்டில் விவாதித்து, அவ்வறிக் கையையும், முடிவுகளையும் பிரதமரிடம் அளிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. அதன்படியே ஒரு குழு அமைக்கப்பட்டு, மார்ச் 14-15 ஆகிய தேதிகளில் புதுடில்லியில் மீண்டும் விவாதித்து ஓர் அறிக்கையைத் தயாரித்திருந்தார்கள். இந்த அறிக்கையுடன் உள்ளாட்சித் துறைக்கான மைய அமைச்சர் மணிசங்கர் அய்யர், ஒரு கடிதத்தை இணைத்திருந்தார். அந்த அறிக்கையை சிற்றூர் பஞ்சாயத்து முதல் மாவட்ட பஞ்சாயத்து வரை வைத்து விவாதித்து பரிந்துரை களுடன் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் அளிக்கலாம் என்று கூறியிருந்தார்.

இந்திய அரசியலமைப்பு வலிமையான மைய அரசு, அதிகாரங்கள் இல்லாத மாநில அரசுகள் என்ற ஓர் ஒற்றையாட்சி முறையையே இந்தியாவுக்கு வழங்கியிருக்கிறது. தொன்றுதொட்டு செயல்பட்டு வரும் உள்ளாட்சி டில்லி அரசுக்கு அன்னியமான ஒன்று.

இந்திய அரசியல் சட்டம் மாநிலங்களுக்கு அளித்திருக்கும் அதிகாரங்களுள் ஒன்றான உள்ளாட்சியை ஓசைப்படாமல் மத்திய அரசின் அதிகாரப் பட்டியலுக்கு மாற்றிவிடும் நோக்கில் உள்ளாட்சித் தலைவர்களின் கோரிக்கை என்ற பெயரில் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் தயாரித்திருந்தது. இந்த வரைவு அறிக்கையில் 'உள்ளாட்சி அரசாங்கம்' என்ற பொருள் மாநில அரசின் பட்டியலிலிருந்து மையப் பட்டியலுக்கோ (Union List) அல்லது பொதுப்பட்டியலுக்கோ (Concurrent List) மாற்றப்பட வேண்டும்' என்பது அதாவது மாநிலத்திடமிருந்து இந்த அதிகாரம் பிடுங்கப்பட வேண்டும் என்பது இந்த வரைவு அறிக்கையின் முக்கியக் கூறு.

இந்தக் கோளாறான கோரிக்கையை, அதாவது மைய அரசின் கீழ் மாவட்டம் வரையிலான உள்ளாட்சி நிர்வாகத்தை மாற்றக் கோரும் கோரிக்கையை பஞ்சாயத்து தலைவர்கள் பெயரிலேயே அளித்திருக்கிறார்கள்.

இந்தப் பகுதியைத்தான் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி 'சிக்கலுக்குரிய பகுதி' என்று குறிப்பிட்டு நீக்கப்பட வேண்டும் என்று கடிதம் எழுதியிருந்தார். இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 68 பேராளர்கள் அடங்கிய பட்டியல் தமிழக அரசால் தயாரிக்கப்பட்டு மார்ச் மாதமே புதுடில்லிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இந்த வரைவு அறிக்கை, உள்ளாட்சியை மேம்படுத்தும் சிறந்த வழிகளாக அதை மாநிலத்திடமிருந்து பிடுங்கிக் கொள்ளுவதும், ஊராட்சி அமைப்புகள் தொடர்பான மாநில அரசின் பொறுப்புகளைக் குறைப்பதும்தான் என ஒரு கண்டு பிடிப்பை நிகழ்த்தியிருந்தது.

கலைஞர் கருணாநிதியின் 'நிராகரிப்பு உத்தி' பலனைத் தந்திருக்கிறது. 'மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்ட ஊராட்சிகள்' என்ற பொருளை மைய அரசுப்பட்டிலுக்கோ பொதுப் பட்டியலுக்கோ மாற்றவேண்டும் என்ற பரிந்துரையை வரைவு அறிக்கையில் சேர்க்க வேண்டாம் என்று பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்துக்கு அறிவுரை வழங்கப் பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். (தமிழ்ஓசை, 23 ஏப்ரல் 2008)

மேலும், எதிர்ப்புக்குரிய பிற பரிந்துரைகளைப் பொறுத்தவரையில், அவை மாநாட்டில் பரிந்துரைக்கப் பட்டாலும் அவைகளை ஏற்றுக் கொள்வது என்பது தேசிய வளர்ச்சி மன்றம் (National Development Council) போன்ற 'தகுந்த அமைப்பில்' மாநில அரசுகளுடன் கலந்துபேசி இறுதி செய்வதன் அடிப் படையிலேயே முடிவு செய்யப்படும் என்று பிரதமர் குறிப்பிட்டிருந்தார்.

'உள்ளாட்சி' என்ற பொருளை பட்டியல் மாற்றவேண்டும் என்ற பரிந்துரையை 'வரைவு அறிக்கையில்' சேர்க்கவேண்டாம் என்று பஞ்சாயத்துராஜ் அமைச்சகத்துக்கு பிரதமர் அறிவுறுத்தியதிலிருந்து, உண்மையில் அதை உள்ளாட்சித் தலைவர்கள் தயாரித்தார்களா அல்லது அவர்களுடைய பெயரில் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் தயாரித்ததா என்பதை எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

இந்தச் சதிகார வரைவு அறிக்கையை உருவாக்கிய டில்லி அரசு தனது சர்வாதிகார முகத்தை சனநாயக முகமூடியில் மறைத்துக் கொண்டு வருகின்றது. அதாவது, இதுவரை மாநில உரிமைகளை மைய அரசே பறித்துக் கொண்டது போலன்றி, உள்ளாட்சியை பஞ்சாயத்துத் தலைவர்களே விரும்பி தட்டில் வைத்து டில்லியை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுவதாகக் காட்டப்பட்டது. மேலிருந்து டில்லி பிரித்தெடுப்பது என்ற நடைமுறைக்கு மாறாக, உள்ளாட்சி நிர்வாகத்தை மையப்பட்டியலில் சேர்த்துக் கொள்ள கோரிக்கை கீழிருந்து வருவதாகக் காட்டப்பட்டது.

**முழுமையான ஒற்றையாட்சி நோக்கி**

1950இல் செயல்பாட்டுக்கு வந்த இந்திய அரசியலமைப்பு முன்னமே ஓர் ஒற்றையாட்சி அமைப்புதான். கூட்டாட்சி (Federation) என்ற

சொல்கூட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இல்லை. மாநிலங்கள் இருந்தாலும் கூட்டாட்சிக்குரிய இலக்கணப் படி அதிகாரங்கள் பங்கிட்டு அளிக்கப்படவில்லை. அதனால்தான் அரசியல் அறிவியலாளர் K.C.வியர், ''**இந்திய ஒன்றியம் குறைவான ஒற்றை யாட்சிப் பண்புகளுடைய கூட்டாட்சி நாடு என்று கூறுவதை விட குறைவானக் கூட்டாட்சிப் பண்புகளுடைய ஓர் ஒற்றையாட்சி நாடு என்று கூறலாம்.**'' (Indian Union is a Unitary state with subsidiary federal feature rather than a federal state with subsidiary unitary features) என்றார்.

அதிகாரப் பங்கீட்டில் மைய அரசுப் பட்டியலில் 97 அதிகாரங்கள், மாநிலப் பட்டியலில் 66 (உண்மையில் 14) பொதுப் பட்டியலில் 47 (உண்மையில் 52) எஞ்சிய அதிகாரங்கள் (Residuary powers) அனைத்தும் மைய அரசுக்கே சொந்தம்.

நடைமுறையில் மாநில உரிமைகள் மேலும் மொட்டை யடிக்கப்பட்டிருக்கின்றன. மாநிலப் பட்டியலில் உள்ள அதிகாரங்களில் கூட மாநில அரசுக்ளுக்கு முழுஅதிகாரம் இல்லை. 'நாட்டு நலன் கருதி' மாநிலப் பட்டியலை மத்திய அரசு தானே எடுத்துக் கொள்ள முடியும். அரசியல் சட்டப்பிரிவு 249இன்படி மாநிலங்கள் அவையில், மொத்த உறுப்பினர்கள், மூன்றில் இரண்டு பகுதியினர் வாக்களித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால், நாட்டின் நலன் கருதி, மாநிலப் பட்டியலில் உள்ள எந்த பொருளைப் பற்றியும் நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம். இதனால்தான் அசோக் சந்தா

''மாநில அதிகாரத்துக்கு இத்தகைய அவமதிப்பு வேறு எந்த கூட்டாட்சியிலும் கிடையாது. 1935ஆம் ஆண்டு சட்டத்திலும் கூட இல்லை'' என்றார். (There is no such federal constitution. Not even in 1935 Act...." - Ashok Chanda, Federation in India. A study of Union-State Relations, London, 1965, p 90)

'கல்வி' என்ற அதிகாரம் மாநிலங்கள் பட்டியலிருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது. மாநிலங்கள் விற்பனை வரியைத் தாங்களே நிர்ணயிக்க முடியாதபடி 'வாட்' வரிவிதிப்பு தடுத்துவிட்டது.

மாநில உரிமைகளை மொட்டை அடிப்பதற்கென்றே 2007இல் பூஞ்சி ஆணையம் அமைக்கப்பட்டது. 2007 ஏப்ரல் 27ஆம் தேதி, முன்னாள் தலைமை நீதிபதி எம்.எம்.பூஞ்சி (M.M.Punchi) தலைமையில் மத்திய-மாநில உறவு குறித்து ஆராய டில்லி அரசு அமைத்த இந்த ஆணையம், இரண்டு ஆண்டுகளில் தனது அறிக்கையை அளிக்கும்.

பூஞ்சி அணையத்தின் ஆய்வுப் பொருளில் (Terms of Reference), 'குறிப்பிட்ட காலத்திற்குள் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு தன்னாட்சி அதிகாரங்களைப் பங்கிட்டு அளிப்பது தொடர்பாக மத்திய-மாநில அரசுகளின் பங்களிப்பு, பொறுப்பு, எல்லை வரம்பு; மாவட்ட அளவில் சுதந்திரமாகத் திட்டமிடல் மற்றும் வரவு-செலவு திட்டமிடல் ஆகியவற்றில் மத்திய-மாநில அரசுகளின் பங்களிப்பு, பொறுப்பு, அதிகார எல்லை ஆகியவற்றை வரையறுப்பது-' என்பவை உள்ளடங்கியுள்ளன. இந்த ஆய்வுப் பொருள்களாகச் சேர்க்கப்பட்டவை மாநில அதிகாரத்திற்கு உட்பட்டவை என்பதை நினைவு கொள்ள வேண்டும்.

பூஞ்சி ஆணைய ஆய்வுப் பொருளில் உள்ள பஞ்சாயத்து ராஜ் பற்றித்தான் புதுடில்லி மாநாட்டில் வரைவு அறிக்கை மூலமாகவும் சிந்திக்கப்பட்டது என்பதை நினைவுகொள்ள வேண்டும்.

பட்டிதொட்டிகளிலெல்லாம் உள்ள ஊராட்சி நிர்வாகத்தை மைய அரசின் பட்டியலுக்குக் கொண்டு வருவது பலத்த எதிர்ப்பை உருவாக்க வல்லது. அதை சாமார்த்தியமாக நிறைவேற்றிக் கொள்வதற்காகவே, உள்ளாட்சித் தலைவர்கள் தாங்களே விரும்பி தங்கள் நிர்வாகத் தளங்களை மாநிலங்களிடமிருந்து விடுவித்து, மையப்பட்டியலிலோ அல்லது பொதுப்பட்டியலிலோ சேர்க்கும்படி கோரிக்கை விடுவதாக ஓர் ஏற்பாடு செய்தார்கள்.

**வரைவு அறிக்கையின் நோக்கம்**

மைய அரசு-மாநில அரசு என்ற இரண்டைத் தவிர, மூன்றாவது அதிகார மையமாக உள்ளாட்சி அமைப்பை உருவாக்குவது; மாநில அரசுகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பது. நிதி ஆதாரங்களைப் பொறுத்தவரை மாநில அரசை எதிர்பார்க்காத நிலையை உருவாக்குவதன் மூலம், மாநில அரசின்பால் உள்ள கடப்பாட்டு உணர்வைக் கட்டுப்படுத்துவது. மைய அரசுக்கு 'விசுவாசமான'- உள்ளாட்சியில் பதவி வகிக்கும் மக்களோடு தொடர்புடைய ஒரு புதிய வகுப்பை உருவாக்குவது என்பதே நோக்கம்.

மொழிவழி மாநிலங்களில் ஒவ்வொரு தேசிய இனமும் டில்லி வல்லாதிக்கத்தை எதிர்த்து கச்சை கட்டிக் கொண்டிருக்கும் நிலையில், தேசிய இனஉரிமைக்குரலைப் பலவீனப்படுத்தும் நோக்கில், டில்லி அரசுக்கு நன்றி பாராட்டும் ஒரு புதிய பிரிவினரை உருவாக்குவது.

இத்தகைய உத்திகளைக் கைக்கொள்ளக் காரணங்கள் இருக்கின்றன. 1967இல் காங்கிரஸ் கட்சி ஆட்சி பீடத்திலிருந்து பல மாநிலங்களில் தூக்கியெறிப்பட்டது. அதன் பிறகு அம்மாநிலங்களில் ஆட்சிக் கட்டிலைக் காங்கிரஸ் நெருங்கவே முடியவில்லை. தமிழகம் போன்று சில மாநிலங்களில் 1967இல் வெளியேற்றப்பட்ட காங்கிரஸ் 'வட்டாரக்' கட்சிகளுக்குத் தொங்கு சதையாக வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இதற்கிடையில் விரிந்து பரந்து கிடந்த காங்கிரஸ், பா.ஜ.க. (முன்பு ஜனசங்கம்) போன்ற தேசியக்

கட்சிகள் இன்று நடைமுறையில் வட்டாரக் கட்சிகளாக சுருங்கியிருக்கின்றன. அந்தந்த மாநிலங்களில் அந்தந்த தேசிய இனமொழி- இன உரிமைபேசும் கட்சிகளே வேரூன்றி வருகின்றன. மாநிலங்களில் ஆட்சியுரிமையை இழந்த காங்கிரஸ், டில்லியிலும் வட்டாரக் கட்சிகள் ஆதரவின்றி ஆட்சி அமைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. 1967இல் தொடங்கிய காங்கிரசின் சோகம் இன்றுவரை தொடர்கிறது.

ஊராட்சிகளை மையப் பட்டியலுக்குக் கொண்டு வந்து, டில்லியின் நேரடி ஆட்சியில், வெள்ளமென நிதியைப் பாய்ச்சி பணப்புழக்கத்தில் உள்ளாட்சித் தலைவர்களைத் திக்குமுக்காடச் செய்து, இந்திய தேசியக் கட்சியில் இருப்பதன் செழிப்பையும், வாரிச் சுருட்ட வந்து குவியும் வாய்ப்புகளையும் புரிய வைத்து, மீண்டும் தன்னை வளர்த்துக் கொள்ள காங்கிரஸ் திட்டமிடுகிறது.

**வல்லாதிக்க ஆதரவு நோக்கி உள்ளாட்சித் தலைவர்களை ஈர்ப்பது**

உள்ளாட்சித் தலைவர்கள் தமிழகப் பஞ்சாயத்துகளுக்குக் கிடைக்கும் நிதியையும், காரைக்கால் போன்ற மைய அரசின் நேரடி நிர்வாகத்திற்குக் கிடைக்கும் நிதியையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். உள்ளாட்சிக்கு அதிக நிதி என்பது பொதுவசதிகளைப் பெருக்க பெருவாய்ப்பு என்ற நோக்கிலும், தாங்கள் பணத்தில் புரள அரிய வாய்ப்பு என்னும் கோணத்திலும் உள்ளாட்சித் தலைவர்கள் ஈர்ப்புக்கு உள்ளாகிறார்கள்.

இந்திய தேசிய கட்சிகள் மட்டுமின்றி திராவிடக் கட்சிகளைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர்களும் கூட மைய அரசுக்குச் சார்பான உளநிலையைப் பெற்றிருக்கிறார்கள். இந்தியத் துணைக்கண்டத்தில் 'மாநிலம்' என்பது தங்கள் தாயகம் என்பதும், மாநில அரசு என்பது மொழியின மக்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட தங்கள் அரசு என்பதும், பொன்னுலகுக் கனவில் மிதக்கும் உள்ளாட்சித் தலைவர்களுக்கு மறந்து போகிறது.

இதற்குக் காரணம், தமிழகத்தில் திராவிடக் கட்சிகள் தங்கள் உள்ளூர்த் தலைவர்களை இனஅடையாள அரசியலில் பயிற்றுவிக்காமையே ஆகும். ஊராட்சிகளுக்கு அதிக நிதி என்ற ஒற்றைச் சொல் எலிப் பொறியில் வைக்கப்பட்ட தேங்காய்க் கீற்றைப் போல அரசியல் அறிவியல் அறியாத தலைவர்களை ஈர்க்கிறது.

**அறிவாளர்களின் தடுமாற்றம்**

தடுமாற்றம் உள்ளாட்சித் தலைவர்களுக்கு மட்டும்தான் என்று கருதக்கூடாது. மக்களுக்கு உண்மையை உடைத்துக்கூறி, மைய அரசின் வல்லாதிக்க நோக்கை உரித்துக் காட்டவேண்டிய அறிவாளர்களிடமும் தடுமாற்றம் காணப் படுகிறது.

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம், ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் ஆராய்ச்சி இருக்கை மற்றும் முன்னேற்ற நிர்வாகவியல் துறைத் தலைவர் க.பழனித்துரையின் கருத்துகளில் இந்த தடுமாற்றத்தைக் காண முடிகிறது. அவரது கட்டுரை (க.பழனித்துரை, 'உள்ளாட்சிக்கு எப்போது தன்னாட்சி', தமிழோசை, 4 மே 2008இ பக்.6) உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, வகிக்கும் பதவிக்கு அவரது கடப்பாட்டையே காட்டுகிறது.

மார்ச் 2008-இல் புதுடில்லியில் உள்ளாட்சித் தலைவர்கள் கூடி உருவாக்கியதாகக் கூறப்பட்ட வரைவு அறிக்கை அமைச்சகம் தயாரித்தது அல்ல, அது உள்ளாட்சித் தலைவர்களின் வேண்டுகோள் என்று அக்கட்டுரை குறிப்பிடுகிறது. மேலும் பல கோளாறான கருத்துகள் அக்கட்டுரையில் காணப்படுகின்றன.

''பஞ்சாயத்தை இந்த அரசியல் சட்டத்தில் எந்தப் பட்டியலில் வைக்க வேண்டும் என்பதைப் பத்தாண்டு காலமாக வல்லுநர்கள் கருத்துக்கூறி வருகிறார்கள்''

என்று கூறுவதன் மூலம், மாநிலப் பட்டியலிலிருந்து உள்ளாட்சியை நீக்கி மைய அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கட்டுரையாளரின் நிலைப்பாடு அதில் தெளிவாகிறது.

''உள்ளாட்சி எந்தப் பட்டியலில் வைக்கப்பட வேண்டும் என்பது பற்றிய விவாதம் நீண்ட நாட்களாகவே நடந்து வருகிறது. பல ஊராட்சி வல்லுநர்கள், ஒருசில ஆண்டுகளாகப் பதினொன்றாவது மற்றும் பன்னிரண்டாவது அட்டவணையையும் இணைத்து நடுவண் பட்டியல், மாநிலப்பட்டியல் பொதுப்பட்டியல் போல் உள்ளாட்சிப் பட்டியல் ஒன்றைக் கொண்டுவர

## திருமண வாழ்த்து

*தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் செங்குன்றம் தோழர் சு.சம்பத்ராசு அவர்களின் புதல்வி **ச.மாரியம்மாள்**, செல்வன் **வீ.விமல்** ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி செங்குன்றம் முசாபர் பங்களாவில் 14-03-2008 அன்று நடைபெற்றது. செங்குன்றம் நகரச் செயலாளர் தோழர் சு.பாலமுரளி அனைவரையும் வரவேற்றார். தோழர் பெ.மணியரசன் தலைமையில் எம்.கே.கணேசன், எம்.ஆர்.தாராசிங் (அ.தி.மு.க), தோழர் இரா.பாலசுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். இறுதியாக தோழர் சு.சம்பத்ராசு நன்றி கூறினார்.*

*மணமக்கள் சார்பில் இதழ் வளர்ச்சிக்கு ரூ.300 வழங்கப்பட்டது. மணமக்கள் நீடு வாழ்க!*

வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்திப் பேசி வருகின்றனர்''

(க.பழனிதுரை, 'உள்ளாட்சிக்கு எப்போது தன்னாட்சி' தமிழோசை, 4 மே 2008. பக்.6)

உள்ளாட்சி மைய அரசுப் பட்டியலில் (Union List) ஏன் வைக்கப்பட வேண்டும்? அது இந்தியா போன்ற பல்தேசிய இன கூட்டாட்சி நாட்டில் எப்படிப் பொருந்திவரும் எனக் கேள்வி எழுப்ப வேண்டிய அறிவாளர்கள் மாநிலப்பட்டியலிலிருந்து களவாடப் படுவதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். கிராம பஞ்சாயத்துக்கான அதிகாரம் 243ஜி (11ஆம்அட்டவணை), நகர உள்ளாட்சி நிர்வாகத்துக்கான அதிகாரம் 243 எச் (12ஆம் அட்டவணை) இந்திய அரசியல் சட்டத்தில் தனியே தரப்பட்டுள்ளன. இவற்றைப் பின்பற்றி உள்ளாட்சி அமைப்புகள் செயல்படலாம். ஆனால், இந்த அட்டவணைகளை இணைத்து மூன்றாவது அதிகார மையமாக உள்ளாட்சியை உருவாக்க வேண்டிய தேவை என்ன?

கூட்டாட்சியில் **மைய-மாநில அரசுகள் மட்டுமின்றி மூன்றாவது அதிகார மையமாகப் பஞ்சாயத்துகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்து கூட்டாட்சி முறைமைக்கே விரோதமானது.**

''கூட்டாட்சி என்றால் நடுவண்-மாநில அரசகளின் உறவு முறைகள் மட்டும்தான் என்று எண்ணுவது பழைமை வாதம். மூன்றாவது அரசாங்கமாக உள்ளாட்சி உருவானபின் நடுவண்- மாநில உறவுகள் போல் மாநில- உள்ளாட்சி உறவும் மிக முக்கியமான ஒன்றாகும். எப்படி அரசியல் சட்டத்தில் 356 பிரிவு நீக்கப்பட வேண்டும் என்று மாநிலத்தின் சார்பாகக் கோருகிறோமோ அதேபோல் தமிழக உள்ளாட்சிச் சட்டத்தில் உள்ள 205ஆவது பிரிவை நீக்க உள்ளாட்சித் தலைவர்கள் கோருவதை தவறு என்று நாம் கூற முடியாது'' (மேலது)

இந்தியத் துணைக்கண்டம் இன்று ஒரு நாடாக மாறியிருக்கிறது. இதில் பலதேசிய இனங்களின் தாயகங்கள் சுதந்திர நாடாக மலராமல், மாநிலங்களாக முடக்கப்பட்டுக் கிடக்கின்றன. இதில் டில்லி வல்லாதிக்க மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் ஏற்படும் முரண்பாடுகள், வெறும் நிர்வாக எந்திரக் கோளாறுகள் அல்ல. ஒரு தேசிய இனத்தின் உரிமை பற்றி மாநில அரசு பேசும்போது அது மைய-மாநில முரண்பாடுகளாக வெளிப்படுகிறது.

ஒரு மொழியினத்துக்கான மாநில அரசு வகிக்கும் பாத்திரமும், உள்ளாட்சி நிர்வாகம் வகிக்கும் பாத்திரமும் இணையானவை அல்ல. மாநில அரசகளை நேர்மையற்ற முறையில் காவு வாங்க டில்லி அரசு பயன்படுத்தும் இந்திய அரசியல் சட்டக்கூறு 356; ஊராட்சித் தலைவர் மீது ஒழுங்குமுறை நடவடிக்கை எடுத்து மக்களாட்சி முறைப்படி வாக்கெடுப்பு நடத்தி நீக்க உதவும் தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994 இன் 205ஆம் பிரிவும் அரசியல் சட்டக்கூறு 356இம் சமமானவை அல்ல.

**தொன்றுதொட்டு வரும் ஊராட்சியை டில்லியிடம் ஏன் ஒப்படைக்க வேண்டும்?**

தமிழகம் மட்டுமின்றி, இந்தியா முழுமையுமே ஊராட்சி முறை பழங்காலம் முதலே சிறப்பாகச் செயல்பட்டு வந்திருக்கிறது. ''எட்டுவகை நுதலிய அவையத்தாலும்'' என்று தொல்காப்பியம் கூறுகிறது. அதன்பின், பல்லவர் காலத்திலேயே, கிராம சபைகள் நீதி வழங்குதல், ஏரி குளம் முதலியவற்றையும் தோட்டங்களையும் பெருவழி களையும், அறநிலையங்களையும் கண்காணித்தல், அரசிறை வசூல் ஆகியவற்றைக் கவனித்தன.

சோழர்கள் ஆட்சிக்காலத்தில் கி.பி.919 மற்றும் 921 ஆகிய ஆண்டுகளில் வரையப்பெற்ற செங்கற்பட்டு மாவட்டத்தில் உத்தரமேரூரில் வெட்டி வைக்கப்பட்ட இரு கல்வெட்டுகள் (Archacological Survey of India, 1904-05, p.131) கிராம சபையாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் (வாரியங்கள்), உறுப்பினர் தகுதி, அவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை, அக்குழுக்களின் அமைப்பு ஆகியவற்றைத் தெரிவிக்கின்றன.

தற்காலத்திலும் கூட உள்ளாட்சி தன்னாட்சி அமைப்பாக மாறினாலும் அது மாநில அதிகார எல்லைக்குள் இயங்க முடியும். தொன்றுதொட்டு நடந்து வரும் உள்ளாட்சி ஓரின மக்கள் தாயக அதிகார எல்லைக்குள் செயல்படுவதே பொருத்தமானது.

**மைய-மாநில உறவுகள் மட்டுமே கூட்டாட்சியில் பேசப்படுவது பழமை வாதமா?**

மைய அரசு- மாநிலங்கள்- உள்ளாட்சி இவற்றில் உள்ளாட்சிக்கும் கூட்டாட்சி கோட் பாட்டுக்கும் தொடர்பில்லை. ஒற்றையாட்சியிலும் உள்ளாட்சி அமைப்புகள் உண்டு. கூட்டாட்சி என்பது மைய-மாநில ஒப்பந்தத்தால் விளைவது.

பல நாடுகள் ஒன்று சேர்ந்து புது நாட்டினை அமைக்கும் முறையே கூட்டாட்சியாகும். கூட்டாட்சி என்ற பொருளுடைய ஆங்கிலச் சொல் 'Federation'. இது இலத்தீன் மொழியில் ஃபோடஸ் (Foedus) என்ற சொல்லிலிருந்து பிறந்தது. இதற்கு 'உடன்பாடு' என்று பொருள். அதுவரைத் தனித்தனியாக இருந்த அரசுகள் தாம் தனியாக இருந்தால் அந்நியப் படையெடுப்பைத் தடுக்கும் வலிமையற்று இருப்பதாக நினைத்தாலோ, அல்லது வேறு பொருளாதார நலன் கருதியோ விரும்பி ஒருங்கிணைந்து ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்துகின்றன. இந்த இணைவு இணைய விரும்புகிற நாடுகளுக்கும், அந்த இணைப்பினால் உருவாக்கப்படும் மைய அரசுக்கும் இடையே ஏற்படும் ஓர் உடன்பாடு ஆகும். இதுவரைத் தனித்தனியே இயங்கிவந்த இறைமையுள்ள

நாடுகள் இந்த கூட்டாட்சியை உருவாக்குகின்றன.

ஒரு கூட்டாட்சி என்றாலே அதில் பங்காளிகள் மைய அரசும், மாநில அரசும்தான். கூட்டாட்சிக் கோட்பாட்டுக்கும் உள்ளாட்சிக்கும் தொடர்பே இல்லை. கூட்டாட்சி இறைமையைப் பங்கிட்டுக் கொள்வது. உள்ளாட்சி என்பதோ வாழ்விடச் சாதனங்களைக் காப்பது, பெருக்குவது, வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவது என்பன போன்றவற்றை மட்டுமே நிறைவு செய்யும். உள்ளாட்சி நிர்வாகம் முக்கியமானதாக இருக்கலாம். ஆனால் அது மூன்றாவது அரசாங்கம் அல்ல. ஓர் 'அரசு' என்பதற்கான இலக்கணம் எந்த அறிவியல் அளவுகோல் படியும் உள்ளாட்சிக்குப் பொருந்தி வராது.

ஆகவே, ''கூட்டாட்சி என்பது நடுவண்- மாநில அரசுகளின் உறவு முறைகள் மட்டும்தான் என்று எண்ணுவது பழைமைவாதம்'' என்று கருதுவது பிழையானது. கூட்டாட்சிக்குப் புதுமை இலக்கணம் ஏதும் இல்லை. கூட்டாட்சிக் கோட்பாட்டுடன் உள்ளாட்சியைத் தொடர்புபடுத்துவது மாநிலங்களின் அதிகாரங்களைப் பிடுங்கி உள்ளாட்சி யிடம் ஒப்படைத்துவிட்டு, மாநில அரசுகளை அலங்கார இருப்புகளாக மாற்றி இந்தியாவை முழுமையான ஒற்றாட்சியாக மாற்றுவதற்காகத்தான். மாநிலங்களை மேலும் பலவீனப் படுத்த முயற்சிக்கும் மைய அரசுக்கு அறிவாளர்கள் கடந்த பத்து ஆண்டு களாகவே உடன்பட்டு வருகிறார்கள்.

**அரசியல் சட்டம் 356ஆவது பிரிவும், தமிழ்நாடு உள்ளாட்சிச் சட்டம்-205ஆவது பிரிவும் சமமா?**

க.பழனித்துரை தம் கட்டுரையில் இப்படிக் கூறுகிறார்:

''எப்படி அரசியல் சட்டத்தில் 356ஆவது பிரிவு நீக்கப்பட வேண்டும் என்று மாநிலத்தின் சார்பாகக் கோருகிறோமோ அதேபோல் தமிழக உள்ளாட்சிச் சட்டத்தில் உள்ள 205ஆவது பிரிவை நீக்க உள்ளாட்சித் தலைவர்கள் தங்கள் அதிகாரங்களைப் பெற்றிட வரைவு அறிக்கையில் கருத்து சொன்னால் அதனைத் தவறு என்று நாம் சொல்லக் கூடாது''

இந்த ஒப்புமை சரியான பார்வையா? இந்திய அரசியல் சட்டக் கூறு 356 தமிழ்நாடு உள்ளாட்சி சட்டம் -1994 இன் 205ஆவது கூறு ஆகிய இரண்டும் சமமாகுமா?

தமிழ்நாடு உள்ளாட்சிச் சட்டம்-1994இல் 205ஆவது பிரிவு தவறுசெய்யும் உள்ளாட்சித் தலைவர்களை விதிமுறைகளின்படி நீக்கம் செய்யும் முறை பற்றிக் கூறுகிறது. மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு இருந்தால் அவ்வாறு பதவிநீக்கம் செய்யலாம். ஊராட்சித் தலைவர் மீதான குற்றச்சாட்டு இரண்டு உறுப்பினர் களால் ஆய்வாளரிடம் (The inspector) அளிக்கப்பட வேண்டும். உள்ளாட்சிச் சட்டத்தின் விதிமுறைகள் மீறப்பட்டிருந்தால், உள்ளாட்சித் தலைவர் தமது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியிருந்தால், செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல் இருந்தாலோ அல்லது செய்யக் கூடாதவற்றைச் செய்திருந்தாலோ குறிப்பிட்ட தேதிக்குள் விளக்கம் அளிக்குமாறு அவரிடம் ஆய்வாளர் கேட்பார். விளக்கம் மனநிறைவளித்தால் மேல்நடவடிக்கை இராது. இல்லா விடில், குற்றச்சாட்டு வட்டாட்சியர் வசம் அளிக்கப்படும்.

வட்டாட்சியர் கூட்டும் கூட்டத்திற்கு ஏழு நாட்கள் முன்னதாக, உள்ளாட்சித் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் அறிக்கையின் நகல் அளிக்கப்படும். இதன்பிறகு கூட்டப்படும் கூட்டத்தில் விவாதம் இன்றி வாக்கெடுப்பு நடத்தப்படும், இது ஆவணமாக குறிப்பேட்டில் எழுதப்படும். வாக்கொடுப்பின்படி, ஆய்வாளர் ஊராட்சித் தலைவரை நீக்குவார் அல்லது நடவடிக்கையைக் கைவிடுவார். இந்த 205ஆவது பிரிவு உள்ளாட்சித் தலைவர்களை ஒழுங்கு படுத்துகிறது, நடவடிக்கைக்கு உட்படுத்துகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மாநில அரசுகளை முறையான காரணம் இல்லாமலேயே சகட்டுமேனிக்கு ஆட்சிக்கலைப்பு செய்ய அதிகாரமளிக்கும் டில்லி வல்லாதிக்க அரசின் கொடுவாளான அரசியல் சட்டத்தின் 356ஆவது பிரிவுடன் ஊராட்சி சட்டப்பிரிவு 205ஐ ஒப்பிடுவது பொருந்துமா?

வேறு கட்சிகளின் அரசு என்ற ஒரே காரணத்திற்காக இந்தியாவில் பலமுறை ஆட்சிக் கலைப்பு நடந்துள்ளது. அரசியல் சட்டம் -356ஆவது பிரிவை நீக்குவது மாநில உரிமைகளுக்கும் பல்வேறு தேசிய இனமக்களின் உரிமைகளுக்கும் பாதுகாப்பு. ஊராட்சிச் சட்டப்பிரிவு -205ஐ நீக்குவது ஊழலுக்குப் பாதுகாப்பு. ஒருவேளை 205இல் திருத்தம் வேண்டுமென்றாலும் அது மாநில அதிகாரத்தைப் பறிப்பதாக அமையக் கூடாது. மேலும் உள்ளாட்சிகளை ஜனநாயகப்படுத்தும் திசையில் இருக்க வேண்டும். அறிவாளர்கள் அறிந்தே முறையற்ற கருத்துகளை முன்வைக்கிறார்கள். ஆட்சியாளர்களும் ஆதிக்க வாதிகளும் தங்கள் தேவைகளை அறிவாளர்கள் மூலம் நிறைவேற்றிக் கொள்வதை, அறிவாளர்கள் அனுமதிக்கக் கூடாது.

**மாநிலங்கள் பெற்றிருக்கும் உள்ளாட்சி அதிகாரம்**

இந்திய அரசியல் சட்டக்கூறு-40 ஊராட்சிகளை உருவாக்கி, அவற்றுக்கு அதிகாரமளிக்கும் பொறுப்பை மாநிலங்களுக்கு வழங்குகிறது.

புதிய பஞ்சாயத்து ராஜ் முறையைப் புகுத்திய 73ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தின்படி (1992) உள்ளாட்சிகள் என்பவை மாநில சட்டமன்றங்கள் அளிக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி அளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்ற உருவாக்கப்படுகின்றன.

இவ்வாறு அரசியல் சட்டமும், அரசியல் சட்டத் திருத்தமும் உள்ளாட்சி என்பது மாநில அரசின்

உருவாக்கம்தான் எனத் தெளிவாகக் கூறும்போது, அதை மாநில அரசுக்குச் சமமாக நிறுத்துவானேன்? அல்லது உள்ளூர் பஞ்சாயத்தை டில்லியில் நேரடிப் பார்வையில் கொண்டு வைக்க வேண்டியதன் தேவைதான் என்ன?

உள்ளூர் தலைவர்களுக்குப் பொன்னுலகு ஆசை காட்டுகிறார்கள். உள்ளாட்சித் தலைவர்களும் மாநில அரசுகளை உதறிவிட்டு டில்லி நாட்டாமையோடு மணமுடிக்க சுயம்வரத்துக்கு மனுப் போடுகிறார்கள். கையில் காசு கிடைக்குமென்றால் யாருக்கும் அடிமையாக இருப்பதில் ஆட்சேபமில்லை நம்மவர்களுக்கு.

உள்ளாட்சிகளை டில்லியின் நேரடிப் பார்வையில் கொண்டுவர விரும்புவதற்கு மற்றுமொரு உள்நோக்கம் உண்டு. அப்படி உள்ளூர் பஞ்சாயத்துகள் டில்லியின் கீழ்வரும் போது, உள்ளூர் குளம் குட்டைகளும் ரிலையன்ஸ் நிறுவனப் பராமரிப்பின் கீழ் வர வாய்ப்பு ஏற்படும். உள்ளூர் குட்டையில் இறங்க டில்லிகாரனுக்குக் காசு அழுவதில் உள்ள சுகமே அலாதி.

**பிரச்சினையும் தமிழக மக்களும்**

மைய அரசின் பஞ்சாயத்து ராஜ் வரைவு அறிக்கையில் 'சிக்கலான' பகுதிகளை நீக்கும்படி பிரதமர் கூறிவிட்டார். இது தமிழக முதல்வரின் புறக்கணிப்பு உத்திக்குக் கிடைத்த வெற்றி. ஆனால் பிரச்சினை தீரவில்லை; ஒத்திப்போடப் பட்டிருக்கிறது. பிற மாநிலத்து உள்ளாட்சித் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்றுப் பேசியிருக்கிறார்கள்.

மாநில அரசுகளின் பொறுப்புகளைக் குறைப்பது, அதை தேசிய வளர்ச்சி மன்றத்தில் (National Development Council) வைத்துப் பேசுவது போன்ற திட்டங்கள் நீடிக்கின்றன. மைய-மாநில உறவு குறித்து ஆய்வு செய்யும் பூஞ்சி ஆணையம் மாநில உரிமைகளை மொட்டையடிப்பதற்கு ஆதரவாக 2009இல் தனது ஆய்வறிக்கையை வழங்கும். அதன் பிறகு மாநில உரிமைகளைப் பறித்தெடுக்கும் வேகம் அதிகரிக்கும்.

அலைகடல் ஓயலாம், மொழி-இன உரிமைகளையும் அடையாளங்களையும் ஒழிக்க டில்லி பார்ப்பன-பனியா வல்லாதிக்க அரசின் முயற்சிகள் ஓயவே ஓயாது. இதுவரை டில்லி மேற்கொண்ட முயற்சிகளைவிட இப்போது தயாரிக்கப்பட்ட வரைவு அறிக்கை மிக நுட்பமானதும் கூர்மையானதும், ஜனநாயக முகமூடி அணிந்து கொண்டதுமான துணிச்சலான தாக்குதல் ஆகும்.

அதன் பேரழிவுப் பரிமாணத்தை உள்ளாட்சித் தலைவர்கள் உணரவே இல்லை. தமிழக மக்களும் தலைவர்களும் உண்மையை உணர வேண்டும். தமிழக முதல்வர் கலைஞர், புதுடில்லியில் நடைபெற்ற உள்ளாட்சித் தலைவர்கள் மாநாட்டிற்குப் பேராளர்களை அனுப்பாமல் இருந்ததே பிரச்சினைக்குத் தீர்வாகிவிடாது. அது பிரச்சினையை ஒத்திவைத்திருக்கிறது.

இன்று நிலவும் அரை அடிமைத்தனத்துடன் தமிழினம் நீண்டநாள் வாழ முடியாது. 1950இல் பெற்றிருந்த பல உரிமைகள் இன்று காணாமல் போயிருக்கின்றன.

இன்றைய இந்தியச் சூழலில், இந்த அரசியலமைப்பின் கீழ் நிம்மதியாக வாழ முடியுமா என்ற தேடுதலை தமிழினமும் தமிழகத் தலைவர்களும் செய்து பார்த்தார்கள். அது வெறும் தோல்விப் பயணமாக முடிந்தது. தமிழக அரசு உண்மையான கூட்டாட்சியை உருவாக்க முன் முயற்சி எடுத்தது. இராசமன்னார் குழு அறிக்கை (1971), அதன் அடிப் படையில் தமிழக சட்டமன்ற மாநில சுயாட்சித் தீர்மானம் (1974), தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களின் வற்புறுத்தலின் பேரில் டில்லி அரசு அமைத்த மைய-மாநில உறவுகள் குறித்த சர்க்காரியா கமிஷன் அறிக்கை (1983-88), தமிழகம் போன்றே பஞ்சாப், பின்னர் காஷ்மீர் ஆகிய மாநிலங்கள் இயற்றிய மாநில சுயாட்சித் தீர்மானங்கள் - இவற்றை யெல்லாம் டில்லி குப்பைக் கூடைக்குள் கடாசிவிட்டது. மாநிலங்களை மொட்டையடிக்க புதிய உத்திகளை வகுக்கிறது. இந்தியாவில் ஓர் உண்மையான கூட்டாட்சியைப் படைத்துக் கொள்ள முடியாது.

தமிழக முதல்வரும், ஆட்சியாளர்களும் தமிழின உணர் வாளர்களும், அரசியல் தலைவர் களும் வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால், தாங்கள் அடைந்துள்ள தோல்விகளின் தடங்கள் தெரியும். கடந்த கால அனுபவங்களின் வெளிச்சத்தில், தான் புதிய பாடங்களை எழுத இந்திய துணைக்கண்டத்தில் ஏனைய தேசிய இனங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றன.

உலகில் எத்தனையோ குடியரசுகளின் கூட்டமைப்புகள் இருக்கின்றன. அல்லது தனித்துச் சென்ற குடியரசுகளும் இருக்கின்றன. இந்தியா முழுமையுமே தேசிய இனங்களின் குடியரசுகளாக மாறுவது ஒன்றுதான் டில்லி வல்லாதிக்கத்தின் பல்லைப் பிடுங்கும் வழி. தமிழகம் தன் இழந்த உரிமைகள் அனைத்தையும் மீட்டெடுக்க வேண்டும். ஒரு தன்னுரிமை பெற்ற தமிழ்த் தேசக் குடியரசாக மாற வேண்டும்.

**உண்மை உணர்ந்து தமிழினம் போராடாமல் போனால், இந்திய ஒற்றையாட்சி உருவாக்கம் முழுமைபெறும். மாநிலங்கள் இருக்கும்; அரசுகளாக அல்ல; வெறும் நிர்வாகப் பிரிவுகளாக மாநிலங்கள் இருக்கும். அதன் உள்ளீடான மாநில உரிமைகளை மட்டும் டில்லி உண்டு செரித்து விடும்.**

**எதிர்கால இந்திய வல்லாதிக் கத்தில் மாநிலங்கள் யானை உண்ட விளாம்பழங்கள் போல உருவம் உடையாமல் இருக்கும். உள்ளீடு மட்டும் உறிஞ்சப் பட்டிருக்கும்.** ■

# மே நாள் விழா



சென்னை

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக்கட்சி சார்பில் இந்த ஆண்டு மே நாள் நிகழ்ச்சிகள் அமைப்புள்ள இடங்களில் எல்லாம் கொடியேற்றத்தோடு சிறப்பாக நடைப்பெற்றன.

**சென்னையில்**

சென்னை, தியாகராயநகர் , முத்துரங்கம் சாலையில் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் மே நாள் விழா 01.05.2008 காலை 10.00 மணிக்கு கொடியேற்றி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கட்சியின் கொடியை தமிழக இளைஞர் முன்னணி பொதுச்செயலாளர் த.தே.பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் நா.வைகறை ஏற்றிவைத்து எழுச்சி உரையாற்றினார். நிகழ்ச்சிக்கு பொதுக்குழு உறுப்பினர் தோழர் இரா. பாலசுப்பிரமணியன் தலைமை ஏற்க, பொதுக்குழு உறுப்பினர் தோழர் பழ.நல். ஆறுமுகம் வரவேற்புரை நிகழ்த்தினார். பொதுக்குழு உறுப்பினர் தோழர் ப.தனசேகரன், தோழர் அருண பாரதி ஆகியோர் உரையாற்றினர். கவிஞர்கள் கவி பாஸ்கர் , முழு நிலவன், பரணி பாவலன் ஆகியோர் கவி வீச்சு வழங்கினர். திரளான தோழர்கள் கலந்து கொண்டனர்.

**செங்குன்றத்தில் பொதுக்கூட்டம்**

செங்குன்றம் பேருந்து நிலையம் அருகில் மே நாள் பொதுக்கூட்டம் 01.05.2008 மாலை நடைபெற்றது. தமிழக இளைஞர் முன்னணி கிளைத்தலைவர் தோழர் திலீபன் தலைமையேற்றார். த.தே.பொ.க. கொடியை ஏற்றிவைத்து தோழர் நா.வைகறை மே நாள் உரையாற்றினார். கட்சியின் செங்குன்றம் கிளைச்செயலாளர் தோழர் பாலமுரளி விளக்க உரையாற்றினார்.

**பூதலூர் ஒன்றியத்தில்**

வழக்கமான உற்சாகத்தோடு மே நாள் விழா தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியத்தில் 01.05.2008 அன்று சிறப்பாக நடைபெற்றது. காலையில் விஷ்ணம் பேட்டையில் தொடங்கிய கொடியேற்ற நிகழ்ச்சி பல்வேறு கிராமங்களைத் தொடர்ந்து மாலையில் சானூரப்பட்டியில் முடிவுற்றது.

பொதுச்செயலாளர் தோழர் பெ.மணியரசன் மற்றும் மாவட்டத் துணைச்செயலாளர் தோழர் குழ.பால்ராசு ஒன்றியச்செயலாளர் தோழர் க.காமராசு, மாவட்டச்செயற்குழு உறுப்பினர்கள் கு.சுப்பிரமணியன், இரெ. கருணாநிதி, த.இ.மு. ஒன்றியச்செயலாளர் அ.தேவதாசு, செந்தில்குமார் ஆகியோர் ஒரு சிற்றுந்தில் சென்று அங்கங்கே கொடியேற்றி உரைநிகழ்த்தினர்.

விஷ்ணம்பேட்டை , ஆர்க்காடு , பூதலூர் , வில்வராயன்பட்டி, முத்துவீரக்கண்டியன்பட்டி, நந்தவனப்பட்டி, அயோத்திப்பட்டி, வன்னியம்பட்டி, செங்கிப்பட்டி, ஆச்சாம்பட்டி, பாலையப்பட்டி, நண்டம்பட்டி, துருசுப்பட்டி, காதாட்டிப்பட்டி, வளம்பக்குடி, வெண்டயம்பட்டி, புதுக்குடி, புதுக்குடி சாலை, கீழத்திருவிழாப்பட்டி, காமாட்சிபுரம், கக்கன் நகர், ஆகிய கிராமங்களில் த.தே.பொ.க. மற்றும் த.இ.மு. கொடி ஏற்றப்பட்டது. அந்தந்த ஊர்களிலும் உள்ள கட்சித்தோழர்கள் மட்டுமின்றி திரளான பொதுமக்களும் கொடியேற்று விழாவில் கலந்து கொண்டனர்.

நிறைவில் மாலை சானூரப்பட்டி தஞ்சை - திருச்சி நெடுஞ்சாலையில் கட்சி, த.இ.மு., தமிழக தொழிற் சங்க முன்னணி கொடிகளை தோழர்கள் ஏற்றிவைத்தனர். பலநூற்றுக்கணக்கில் கூடியிருந்த பொதுமக்களிடையே தோழர் பெ.மணியரசன் எழுச்சிமிகு மே நாள் உரையாற்றினர்.

**தஞ்சை நகரில்**

தஞ்சை நகரில் 01.05.2008 அன்று காலை முதல் மாலை வரை பல்வேறு பகுதிகளில் மே நாள் கொடியேற்று நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. காலை 10.00 மணிக்கு கட்சியின் மாவட்ட அலுவலகம் அருகில் த.தே.பொ.க. கொடியை கட்சியின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் கி.வெங்கட்ராமன் ஏற்றிவைத்தார். த.இ.மு. கொடியை கட்சியின் மாவட்டச்செயலாளர் தோழர் பழ.இராசேந்திரன் ஏற்றிவைத்தார்.

அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு உணவு கிடங்கு கழக சுமை தூக்குவோர் சங்கத்தின் சார்பில் கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழக தொழிற்சங்க முன்னணியின் கொடியை தோழர் கி.வெ. ஏற்றிவைத்து மே நாள் உரை நிகழ்த்தினார்.

இதனை அடுத்து ரெங்கநாதன் நகர், அண்ணா நகர், 7ம் தெரு, முனியாண்டவர் காலனி, அண்ணா நகர் முதல் தெரு, இலாயம், கோரிக்குளம், கலைஞர் நகர், பழைய பேருந்து நிலையம் , பழக்கடை, ஏ.வி.பதி நகர்,

வடக்கு வாசல் ஆகிய பகுதிகளில் த.தே.பொ.க.மற்றும் த.இ.மு. கொடிகள் ஏற்றப்பட்டன.

தோழர் கி.வெ. , கட்சியின் நகரச்செயலாளர் தோழர் இராசு.முனியாண்டி மற்றும் தோழர்கள் சிவராசு, தெ.காசிநாதன்,சந்திரசேகரன், வெங்கடேசன், ராமு, அண்ணாதுரை, தமிழ்ச்செல்வன், கலியபெருமாள் ஆகியோர் அங்கங்கே கொடியேற்றினர்.

நிறைவில் வடக்குவாசல் பகுதியில் மே நாள் பொதுக்கூட்டம் த.இ.மு. கிளைத்தலைவர் தோழர் தமிழ்ச் செல்வன் தலைமையில் நடைபெற்றது. தோழர் கி.வெங்கட்ராமன் மே நாள் சிறப்புரையாற்றினார். மற்றும் தோழர்கள் சிவராசு, இராசு.முனியாண்டி, கலியபெருமாள், தெ.காசிநாதன் நிலவன் ஆகியோர் உரையாற்றினர். திரளான பெண்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தோழர் முத்துகுமார் நன்றி கூறினார்.

**பெண்ணாடத்தில்**

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பகுதியில் த.தே.பொ.க. சார்பில் மே நாள் விழா சிறப்பாக நடைபெற்றது. 01.05.2008 மாலை 4.00 மணிக்கு முருகன் குடியில் கிளைச்செயலாளர் தோழர் க. முருகன் தலைமையில் கொடியேற்று விழா நடைபெற்றது. கட்சியின் பொதுக்குழு உறுப்பினரும், தஞ்சை மாவட்டச் செயலாளருமான தோழர் பழ.இராசேந்திரன், த.தே.பொ.க. கொடியை ஏற்றிவைத்து சிறப்புரையாற்றினார். அன்று மாலை 6.00 மணி அளவில் பெண்ணாடம் பேருந்து நிலையம் அருகில் மே நாள் கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர் கு.மாசிலாமணி தலைமையேற்க தோழர் இரா.கலியராசு முன்னிலை வகித்தார். தோழர் பழ.இராசேந்திரன் கொடியை ஏற்றிவைத்து கொள்கை விளக்க உரையாற்றினார். தோழர்கள் மு.பழனிவேல், இராமகிருஷ்ணன் ஆகியோர் மே நாள் உரையாற்றினர்.

**சிதம்பரத்தில்**

சிதம்பரம், காசுக்கடைத்தெருவில் 01.05.2008 அன்று மே நாள்கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. நகரச்செயலாளர் தோழர் கு.சிவப்பிரகாசம் தலைமையில் தோழர் மு.முருகவேல் த.தே.பொ.க. கொடியை ஏற்றிவைத்தார். திரளான தோழர்கள் கலந்துகொண்டு எழுச்சிமுழக்கம் எழுப்பினர்.

**தஞ்சை ஒன்றியத்தில்**

தஞ்சை ஒன்றியத்தில் 01.05.2008 காலை தொடங்கி மாலை வரை மே நாள் கொடியேற்று நிகழ்ச்சி பல கிராமங்களில் நடைபெற்றது. வல்லம் அண்ணா சிலை, வாகரக்கோட்டை, குருங்குளம், வல்லம் புதூர் ஆகிய இடங்களில் த.தே.பொ.க, த.இ.மு. கொடிகள் ஏற்றப்பட்டன. மாவட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் பி.முருகையன் மற்றும் தோழர்கள் வே.தனசேகர், கு.முனியமுத்து ஆகியோர் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். நிறைவில் அன்று மாலை 6.00 மணிக்கு முன்னையம்பட்டியில் மே நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் மா.ஆறுமுகம் தலைமை தாங்கினார். தோழர் பி.முருகையன் கொடியேற்றி வைத்து மே நாள் உரை நிகழ்த்தினார். ச.மரியபிரான்சிஸ் நன்றி நவின்றார்.

**திருத்துறைப்பூண்டியில்**

திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் 01.05.2008 அன்று திருத்துறைப்பூண்டி நகரம், மணலி, வங்கநகர், பாமணி, ஆலத்தம்பாடி ஆகிய பகுதிகளில் த.தே.பொ.க., த.இ.மு. கொடிகள் ஏற்றப்பட்டு மே நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஒன்றியச்செயலாளர் தோழர் கா.அரசு உள்ளிட்ட ஒன்றியச் செயற்குழுத் தோழர்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

**ஈரோடு - சத்திய மங்கலம்**

ஈரோடு நகரில் புதிதாக தொடங்கப்பட்ட தமிழக இளைஞர் முன்னணியின் சார்பில் மே நாள் கொடியேற்ற நிகழ்ச்சி கருங்கல் பாளையம் பகுதியில் 01.05.2008 அன்று நடைபெற்றது. த.தே.பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் ஓசூர் கோ.மாரிமுத்து த.இ.மு. கொடியை ஏற்றிவைத்து மே நாள் உரை நிகழ்த்தினர். தோழர் இளங்கோவன், ஜெயக்குமார் உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

சத்திய மங்கலத்தில் பேருந்து நிலையம், கடைத்தெரு, காய்கறிச்சந்தை ஆகிய பகுதிகளில் மே நாள் கொடியேற்ற நிகழ்ச்சி நடைபெற்றது. கட்சியின் பொதுக்குழு உறுப்பினர் தோழர் ச.அர.மணிபாரதி, செந்தமிழ் ஸ்டாலின், பிரகாசு உள்ளிட்ட தோழர்கள் பலர் கலந்து கொண்டு த.தே.பொ.க., த.இ.மு. கொடிகளை ஏற்றி வைத்து உரைநிகழ்த்தினர்.

**அரியமங்கலம்**

திருச்சி, அரியமங்கலத்தில் 2.5.2008 மாலை த.க.இ.பே., த.இ.மு. சார்பாக மே நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. காந்தி- லெனின் குழுவினரின் இசை நிகழ்ச்சி, கவிஞர்கள் குழ.பா.ஸ்டாலின், கவித்துவன், இராஜாரகுநாதன், புலவர் நாகேந்திரன் ஆகியோரின் கவிவீச்சு நடைபெற்றது. தோழர் இரெ. சு.மணி தலைமை தாங்க தோழர்கள் பெ.மணியரசன், கி.வெங்கட்ராமன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். திரளானோர் கலந்து கொண்ட அறிவார்ந்த அவையாக கூட்டம் அமைந்தது.



# பிரிகேடியர் பால்ராஜ் அவர்களுக்கு வீர வணக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான பிரிகேடியர் பால்ராஜ் திடீர் மாரடைப்பால் 20.05.2008 அன்று காலமானார்.

பிரிகேடியர் பால்ராஜ், தமிழீழ விடுதலைப் புலிகளால் 1991 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட முதலாவது மரபுவழிப் படையணியான சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் முதலாவது கட்டளைத் தளபதி ஆவார். 1993 ஆம் ஆண்டு வரையும் 1995-1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளிலும் அவர் அப்பொறுப்பை வகித்தார். தமிழர்களின் போரியல் திறமையை உலகுக்கு அறிவித்த வரலாற்றுச் சிறப்புமிக்க 2000 ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரில் முக்கிய பங்காற்றியவர்.

அமைதிப் பேச்சுக்களின் போது 2003 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் பிரிகேடியர் பால்ராஜுக்கு இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தனது உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் மன்னார் மற்றும் மணலாறு களமுனைகளில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிவிப்புப்படி 21, 22, 23.05.2008 ஆகிய 3 நாட்களும் தேசியத் துயர நாட்களாக கடைப்பிடிக்கப்பட்டன.



“அபாரமான துணிவும், அசுர வேகமும், சிறந்த தாக்குதல் உத்திகளும், நேர்த்தியாக படை நகர்த்தும் ஆற்றலும், கட்டுக்குலையாத குறி தவறாத செயற்பாடுகளுமாக பால்ராஜ் வெளிப்படுத்திய போர்ப்பண்புகள் எமது எதிரிக்கு அச்சத்தைக் கொடுத்தன. அதே நேரம் எமது போராளிகளின் மனோதிடத்தையும் இலட்சிய உறுதியையும் மேலும் உரமாக்கின. எமது மக்களுக்கு பெரும் வெற்றிகளைத் தேடித் தந்தன. பிரிகேடியர் பால்ராஜ் எம்மை விட்டு எங்கும் போய்விடவில்லை. எமது தேசத்தின் சுதந்திர மூச்சாக, எம்மையெல்லாம் உள்ளிருந்து இயக்குகின்ற இலட்சிய நெருப்பாக அவன் என்றும் எரிந்து கொண்டிருப்பான்” என 21-05-2008 அன்று தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடுகிறார்.

பிரிகேடியர் பால்ராஜ் அவர்களுக்கு ‘புதிய தமிழர் கண்ணோட்டம்’ வீரவணக்கம் செலுத்துகிறது.

# அன்புக்கு பொருள் சொன்ன அருள் நங்கை மறைவு

*தமிழ்ச் சிற்றிதழ்களைத் திரட்டித் தொகுத்து ஆவணப்படுத்துவதில் சாதனை புரிந்தவர்களில் திருச்சி தோழர் தி.மா.சரவணன் முதன்மையானவர். அச்சாதனையில் சரிபாதிப் பெருமை அவர் துணைவியார் கோமதிக்குரியது. நூல் சேகரிப்பு, நூல்களை ஒழுங்குபடுத்திப் பராமரிப்பது, நூல் விற்பனைக்குச் செல்வது போன்ற பணிகளைச் கோமதி பகிர்ந்து கொண்டார்.*

*சரவணன்-கோமதி இருவரும் காதலித்து, சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டார்கள். இந்தக் காதல், மனதை மையப்படுத்திய காதல். கோமதிக்கு சிறுவயதிலேயே இதயத்தில் ஓட்டை விழுந்துவிட்டது. வசித்த பகுதியில் ஒருவர்க் கொருவர் அறிமுகமாயினர். அன்பு பாராட்டினர். அப்போது கோமதியின் இதயநோய் சரவணனுக்குத் தெரியவந்தது.*



*சென்னை, வேலூர் என சிறந்த இதயநோய் மருத்துமனைகளுக்கு சரவணன் அழைத்துச் சென்றார். குணப்படுத்த முடியாது; குறுகிய ஆயுள்தான் என்று இதய நோய் வல்லுர் மருத்துவர் செரியன் கூறிவிட்டார்.*

*அதன் பிறகு அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். தோழனும் தோழியுமாய் 20 ஆண்டுகள் குடும்பம் நடத்தினர். குழந்தை இல்லை.*

*தமிழ்க் கலை இலக்கியப் பேரவையின் திருச்சிப் பொறுப்பாளர்களில் ஒருவர் தோழர் தி.மா.சரவணன். தோழர் கோமதி தமிழ்த் தேசியம், மகளிர் விடுதலை ஆகியவற்றில் ஆழ்ந்த பற்றுடையவர்.*

*கடந்த 26.4.2008 அன்று மாலை திடீர் மாரடைப்பால் தோழர் கோமதியின் இதயம் துடிப்பதை நிரந்தரமாக நிறுத்திக் கொண்டது. அன்புக்குப் பொருள் சொன்ன அருள் நங்கை கோமதி;*

*கோமதியின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கல்!*

# மோசடி நிறுவனங்களும் உலகமய நுகர்வியமும்

■ க.அருணபாரதி



### நுகர்வுப் பண்பாடு

உலகமயம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள, தானே வளர்த்து வரும் செல்லப்பிராணியான 'நுகர்வியம்' (Consumerism), உலகெங்கும் உள்ள உழைக்கும் மக்களின் உழைப்பையும் உடைமைகளையும் சுரண்டுவதற்கு துணைநிற்பதோடு அவர்களின் வாழ்வையும் பண்பாட்டையும் ஏகாதிபத்திய நாடுகளின் சீரழிந்த கலாச்சாரமாக மாற்றிக் கட்டமைத்து நாசமாக்குகிறது.

கிராமப்புறங்களை காலி செய்து விட்டு உழைக்கும் மக்களை நகரத்தை நோக்கி படையெடுக்கச் செய்த உலகமயம், "நகரங்களை" முக்கிய சந்தைக் களங்களாகவே பார்க்கின்றன. இந்தியாவின் சென்னை, மும்பை, பெங்களூர், கொல்கத்தா உள்ளிட்ட முக்கிய நகரங்களில் நுகர்வுக் கலாச்சாரம் ஏற்படுத்தும் பாதிப்புகளால் மக்கள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு அடிமைகளாக வாழ்வதையே விரும்புமாறு மாற்றப்பட்டுள்ளனர். மக்களை ஒருவகை மனநோயில் ஆழ்த்தி அவர்களின் உழைப்பை உடைமைகளை சுரண்டி கொழுத்திட இந்நுகர்வுக் கலாச்சாரமே பன்னாட்டு நிறுவனங்களுக்கு பெரிதும் பயன்படுகிறது.

### நுகர்வுப் பண்பாட்டின் ஊதுகுழலாய் ஊடகங்கள்

கடந்த ஆண்டு சென்னை வடபழனி பகுதியில் ஒரு சிறுவன் செல்பேசி வாங்குவதற்காகவும் இருசக்கர வாகனத்திற்காகவும் தன் சக நண்பனையேக் கொலை செய்தது நினைவிருக்கலாம். அதனை ஒரு குற்றவியல் சம்பவமாக மட்டும் கருதி விட முடியாது. ஒரு சிறுவனின் மனதில் நுகர்வுப் பண்பாடு ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் தான் அச்சிறுவனை அவ்வாறு செய்ய தூண்டியிருக்கிறது. திரைப்படங்கள், செய்தித்தாள்கள் உள்ளிட்ட ஊடகங்கள், விளம்பரப்படங்கள், விளம்பர வெட்டுருக்கள், செல்லிடத்துப் பேசிகள், இணையதளங்கள் என அனைத்து ஊடக சாதனங்களும் உலகமயத்தின் ஊதுகுழலாக மாறி நுகர்வு வெறியை திட்டமிட்டு மக்களிடம் பரப்புகின்றன.

### அதிகரித்து வரும் மோசடிகள்

பன்னாட்டு நிறுவனங்கள் மீதும் அவை விற்கும் பொருட்கள் மீதும் நுகர்வு பண்பாடு "புனித"ச் சாயத்தை பூசி, அவற்றை வாங்குவது "மேட்டுக்குடிமைத்தனம்" என்றும் "கௌரவம்" என்றும் நடுத்தர மக்களுக்கு கூறுகிறது. இது போன்ற பிரச்சாரங்களால் மயங்கிக் கிடக்கும் மக்களை பன்னாட்டு நிறுவனத்தின் பொருள் என்று கூறி போலிப் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றும் மோசடிச் செயல்கள் அதிகரித்துவிட்டன. இது போன்ற மோசடிச் சம்பவங்கள் தகவல் தொழில்நுட்பத்துறை ஊழியர்களைக் குறிவைத்தும் நடுத்தர உழைக்கும் மக்களைக் குறிவைத்தும் தான் பெரும்பாலும் நடக்கின்றன. ஏற்கெனவே கடன் அட்டை மோசடிகள்(கிரெடிட் கார்டு மோசடி) போன்ற மோசடிகளைத் தொடர்ந்து மேலும் புதிது புதிதாக மோசடிகள் பெருகிவருகின்றன.

### தங்கக் காசு மோசடி

மேலே குறிப்பிட்ட மோசடி வகையைச் சார்ந்த மோசடி தான் சென்னையில் தற்பொழுது நடந்துள்ள "தங்கக் காசு மோசடி"

நிகழ்வு. 'கோல்ட் க்வெஸ்ட்' என்கிற இந்நிறுவனம் தன்னை பன்னாட்டு நிறுவனம் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு சென்னையில் ஐந்து நட்சத்திர விடுதிகளில் தகவல் தொழில்நுட்பத்துறை ஊழியர்கள், மேட்டுக்குடி குடும்பப் பெண்கள் என குறி வைத்து அழைத்து கூட்டங்கள் நடத்தி உறுப்பினர்களை சேர்த்து வந்தது. இந்நிறுவனம் மோசடி செய்ய பயன்படுத்திய வித்தை தான் "மல்டி லெவல் மார்க்கெடிங்" எனப்படும் 'சங்கிலித் தொடர் வணிகம்'.

அமெரிக்க அரசின் தன்னாட்சி அமைப்பான 'கூட்டாட்சித் தொழில் ஆணையம்' (Federal Trade Commission) என்ற அமைப்பு வணிக நிறுவனங்கள் பணம் சம்பாதிப்பதைப் பற்றியும், அவை கடைபிடிக்கும் வணிக முறைகள் பற்றியும் ஆய்வு செய்து பட்டியல் தயாரித்து அளிக்கும். அவ்வாறான பட்டியலில் சங்கிலித் தொடர் நிறுவனங்களை இந்த ஆணையம் சேர்க்க மறுத்துவிட்டது.

தொழில் வாய்ப்பு விதிகளின் கீழ் (Bussiness Oppurtunity Rules) சங்கிலித் தொடர் வணிகத்தை அங்கீகரிக்க முடியாது என மேற்கண்ட ஆணையம் கூறிவிட்டது. மார்ச் 2008-இல் இந்த ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் சங்கிலித் தொடர் வணிகம் வாடிக்கையாளர்களை வணிகம் செய்யத் தூண்டுவதை விட மூளைச் சலவை செய்கிறது. மத நம்பிக்கையை போல விசுவாசத்தை பரப்புகிறது. இந்த வழிமுறையைத் தொழில் வழிமுறையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று ஆணையம் கூறியது. புகழ் பெற்ற அமெரிக்க சங்கிலித் தொடர் வணிக நிறுவனமான ஆம்வே(Amway) நிறுவனத்தை இந்த "மூளைச்சலவை" வழிமுறைக்கு எடுத்துக்காட்டாக ஆணையம் கூறியது. (பார்க்க: http://www.ftc.gov/opa/2008/03/busrule.shtm)

அமெரிக்காவின் வணிக ஆணையத்தின் கண்டனத்திற்குள்ளான ஆம்வே சங்கிலித் தொடர் வணிக நிறுவனம் தமிழகத்தில் எந்த தடையும் இன்றி கொடிகட்டி பறக்கிறது. சங்கிலித் தொடர் வணிக நிறுவனங்கள் வாங்குவோரிடம் பொருள் பற்றிய முழுத் தகவல்களை சொல்லாமல் திரித்துக் கூறி வணிகம் செய்வதை வழக்கமாக கொண்டிருப்பதால் அதனை ஞாயமான வணிகமாக அங்கீகரிக்க முடியவில்லை என்று அமெரிக்க ஆணையம் கூறுவது கவனிக்கத்தக்கது.

திறந்தப் பொருளாதாரமும் தனியார்மயமும் கோலோச்சுகிற அமெரிக்காவிலேயே சங்கிலித் தொடர் வணிகம் ஐயத்தோடு பார்க்கப்படும் போது இந்தியாவில் இந்த மோசடி வணிகத்திற்கு எந்தக் கண்காணிப்பும் இல்லை என்பது வெட்கக் கேடானது.

'கோல்ட் க்வெஸ்ட்' நிறுவனத்தில் ஒருவர் ரூ 30,000 கொடுத்து உறுப்பினராவார். அந்நிறுவனம் அவருக்கு தங்கக் காசு ஒன்றைக் கொடுக்கும். அவ்வாறு சேர்ந்த பின்பு அவர் 3 பேரை உறுப்பினர்களாக இதே போல் சேர்க்க வேண்டும். சேர்த்து விடப்பட்ட மூவரும் அவரவர்கள் 3 பேரை உறுப்பினர்களை சேர்த்து விட்டுக் கொண்டே போவர். எத்தனை பேரை சேர்க்கின்றனரோ அதற்கு ஏற்றாற் போல் முதல் முதலில் சேர்ந்தவர் முதல் அவருக்கு பின் சேர்பவர்கள் அனைவருக்கும் தரகு பணம் கொடுக்கப்படும். இதன் மூலம் எளிதில் பணம் பார்த்துவிடலாம் என்று கவர்ச்சிகரமாக விளம்பரப் படுத்திய பல 'பிரபல'ங்களை யெல்லாம் பேசவிட்டு மூளைச்சலவை செய்து உறுப்பினர்களை சேர்த்து வந்தது இந்நிறுவனம். இப்படி இந்நிறுவனத்தில் சேர்பவர்கள் அனைவரும் 3 பேரை சேர்த்து விட முடியாது. ஒரு சிலர் தான் சேர்ப்பர். எவரையும் சேர்க்க முடியாதவர்கள் அவர்கள் கொடுத்த பணத்தை இழந்திட வேண்டியது தான். அவர் கட்டிய பணத்தை நிறுவனம் அப்படியே எடுத்துக் கொள்கிறது. இவ்வாறு இந்நிறுவனம் சுமார் ரூ.100 கோடி அளவில் மோசடி செய்திருப்பதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இந்நிறுவனத்தின் 300 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களும் காவல் துறையினரால் முடக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனத்தில் ஏமாந்த பலரும் இந்நிறுவனம் பன்னாட்டு நிறுவனம் என சொன்னதால் தான் இதில் இணைந்தோம் என்று செய்தி ஊடகங்களுக்கு பேட்டியும் கூட அளித்தனர். பன்னாட்டு நிறுவனம் என்றால் அவ்வளர் கவர்ச்சி.

### 'விஸ்ப்ரோஸ் டெக்னாலஜிஸ்' வேலை வாய்ப்பு மோசடி

'தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலை பார்த்தால் நிறைய பணம் சம்பாதிக்க முடியும். அப்பொழுது தான்

### செங்குன்றத்தில் அம்பேத்கர் பிறந்தநாள் விழா

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 115-வது பிறந்தநாள் விழா தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் கொண்டாடப்பட்டது. செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள அண்ணலின் திருவுருவச்சிலைக்கு கட்சியின் செங்குன்றம் நகரக் கிளைச் செயலாளர் தோழர் சு.பாலமுரளி மாலை அணிவித்தார். கட்சித் தோழர்கள் திரளாகக் கலந்துக் கொண்டனர்.

சுகமான வாழ்க்கை அனுபவிக்க முடியும்' என்று உருவாக்கப்பட்ட மாயையில் வீழ்ந்துள்ள மக்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட மோசடிச் சம்பவம் இது. ஏற்கெனவே தகவல் தொழில்நுட்பத் துறையில் பல்வேறு வேலை மோசடிகள் நடப்பது குறித்து நாம் தெரிவித்திருக்கிறோம். இதுவும் அவ்வகை மோசடியே.

'விஸ்ப்ரோஸ் டெக்னாலஜிஸ்' என பெயரிடப்பட்டு சென்னை அண்ணா நகரில் செயல்பட்டு வந்து கொண்டிருந்த இந்நிறுவனம் 'பணம் கொடுத்தால் வேலை' என்று தகவல் தொழில்நுட்பத் துறையில் எப்படியும் வேலை பார்க்க வேண்டும் என்ற துடிப்பில் இருந்த எண்ணற்ற வேலையில்லாத இளைஞர்களை அழைத்து பணம் வாங்கிக் கொண்டு பணி அளித்தது. ஒவ்வொருவரிடமும் வசதிகளை பார்த்து ரூ. 30,000 முதல் 2 லட்சம் வரை பணம் வாங்கிக் கொண்டு இந்நிறுவனம் அவர்களை வேலைக்கு எடுத்துள்ளது. வேலையில் சேர்ந்தவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 10,000 சம்பளம் தரப்படும் என்றும் உறுதியளித்தது. இளைஞர்கள் பலர் இந்நிறுவனத்தில் சேர்ந்து விட்டு பிறகு இந்நிறுவனத்தில் கிடைக்கும் பணி அனுபவத்தை வைத்து பெரிய நிறுவனங்களுக்கு வேலையில் அமர்ந்து விடலாம் என்ற கனவில் தொகையைக் கட்டி சேர்ந்துள்ளனர். அதற்காக பலர் சொத்துக்களை விற்றும், கடன் வாங்கியும் கூட சேர்ந்துள்ளனர். இப்படி சுமார் 3000 பேர் வரை சேர்த்த இந்நிறுவனம் வேலைக்கு சேர்ந்தவர்களுக்கு பல மாதங்கள் சம்பளம் கொடுக்காமல் இருந்து வந்தது. இப்பிரச்சினை எழுந்தவுடன் நுனி நாக்கு ஆங்கிலத்தை மட்டுமே மூலதனமாகக் கொண்டு செயல்பட்டு வந்த ஆந்திராவைச் சார்ந்த இந்நிறுவனத்தின் தலைமை அதிகாரிகள் நிறுவனத்தை திடீரென மூடிவிட்டு தலைமறைவாகினர். அவர்களை காவல்துறை தொடர்ந்து தேடி வருகின்றது. இது போன்ற நிறுவனங்கள் சென்னையில் இன்னும் அதிகம் உள்ளன. தகவல் தொழில்நுட்பத் துறையில் கிடைக்கும் அதிக ஊதியத்திற்காக இது போன்ற சிறு நிறுவனங்களில் சேர்ந்து வேலை செய்யாமலேயே பணம் கொடுத்து போலி பணி அனுபவச் சான்றிதழ்களை (Fake Experience Certificates) பெற்றிடத் துடிக்கும் இளைஞர்களைக் குறி வைத்தும் பல மோசடி நிறுவனங்கள் செயல்படுகின்றன. பல பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் இது போன்ற போலி சிறு நிறுவனங்களைக் கண்டறிந்து அந்நிறுவனங்களின் பட்டியலைக் கூட தயார் செய்து வைத்திருக் கின்றன. 'விப்ரோ' போன்ற பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அப்பட்டியலைக் கையில் வைத்துக் கொண்டு தான் நேர்முகத் தேர்வே நடத்துகின்றன.

**தீர்வு தான் என்ன?**

இந்திய அரசு அமெரிக்காவிற்கும் உலகமயத்திற்கும் நிரந்தர அடிமையாகவே சேவை செய்யும் என்பது காலம் நமக்கு உணர்த்தி வரும் பாடம். தமிழ்த் தேசியமே உலகமயத்தை எதிர்க்கும் சரியான அடித்தளமாகும்.

ஏனெனில் நுகர்வுப் பண்பாட்டிலிருந்து மீள்வதற்கான மாற்றுப் பண்பாட்டு வழியாக மண்ணின் பண்பாடே விளங்கு கிறது. உலகமய நுகர்வியத்திற்கு எளிதில் இரையாகிறவர்கள் பண்பாட்டு வேரறுந்தவர்களே ஆவர். தமது மண்ணையும், மண்ணின் வரலாற்றையும், மண்ணின் அறிவியல் சார்ந்த - அறவியல் சார்ந்த விழுமியங் களையும் நிராகரிக்க வைப்பதின் மூலமே நுகர்வியம் நிலை பெறுகிறது. இந்த நுகர்வியம் உருவாக்குகின்ற தணியாத ஆசையே மோசடி நிறுவனங்களின் வாய்ப்பான முதலீடாகும்.

கண்மண் தெரியாத நுகர்வுவெறியிலிருந்து மீள்வது தான் இந்த மோசடி நிறுவனங்களிடம் சிக்காமல் இருக்க ஒரே வழியாகும். இந்த வழியை உருவாக்குவது அறிவியல் வழிப்பட்ட அந்தந்த மண்ணின் மரபுகளாகும். தமிழர்கள் நம்முடைய மரபிலுள்ள முற்போக்கான, அறிவியல் சார்ந்த விழுமியங்களில் தோய்ந்தால் நூலறுந்த பட்டமெனத் திசையற்றுத் திரியும் நுகர்வியத்திலிருந்து மீளமுடியும். உலகமய மோசடிகளிலிருந்து தற்காத்துக் கொள்ள முடியும். ■

## புதுக்கோட்டை நாத்திக மையக் கூட்டம்

*திருவள்ளுவர் ஆண்டு 08.4.2039 (20.4.2008) ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00 மணிக்கு திருவப்பூர் எய்ம் (AIM) மழலையர் பள்ளியில், புதுக்கோட்டை நாத்திக மையம் கலந்துரையாடல் கூட்டம் அமைப்பாளர் திரு.இரா.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது.*

*சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட சென்னை திருவான்மியூர் திரு. க.இராசேந்திரன், பட்டுக்கோட்டை பாபு இராசேந்திரன் ஆகியோர் நாத்திகக் கொள்கைகளைப் பற்றி விளக்கிச் சிறப்புரையாற்றினார்கள்.*

*திரு.ஞானாலயா கிருட்டிணமூர்த்தி உள்ளிட்டப்பலர் கலந்துரையாடலில் தங்கள் கருத்துகளை வழங்கினர்.*

# பெண்களே நடத்திய இறுதிச் சடங்கு



காடு வரை பாடை தூக்கிச் சென்று நீத்தார்க்கு பெண்களே இறுதிச் சடங்கு நடத்திய புதுமை நிகழ்வு திருச்சியில் நடந்தது.

தமிழ்க் கலை இலக்கியப் பேரவை திருச்சி மாவட்டத் தலைவர் தோழர் கவித்துவன். இவரது தாயார் திருமதி மூக்காயி அம்மாள் கடந்த 16-05-2008 பிற்பகல் திருச்சியில் காலமானார். அவரது இறுதிச்சடங்குகள் மே 17-இல் நடைபெற்றன.

மூக்காயி அம்மாளின் உடலை எடுத்துச்செல்ல பாடைக் கட்டுவதிலிருந்து பாடைத் தூக்குவதிலிருந்து சுடுகாட்டில் இறுதி நிகழ்ச்சிகளை நடத்துவது வரை அனைத்தையும் பெண்களே செய்து முடித்தனர்.

நீத்தார் உடலோடு பெண்கள் வீதித்தாண்டி வரக்கூடாது என்ற பிற்போக்கு சம்பிரதாயத்தை அப்பெண்கள் உடைத்தெறிந்தனர். தோழர் கவித்துவன் மனைவியும் மகளிர் ஆயத்தின் செயல் வீராங்கனையுமான தோழர் சுகுணக்குமாரி, பெரியார் மகளிர் இயல் மையத்தைச் சார்ந்த தோழர்கள் புவனா, பெரிசியா மற்றும் தோழர் அனுராதா ஆகிய நான்கு பெண்களும் சேர்ந்து எல்லாப் பணிகளையும் செய்து முடித்தனர்.

“தொடக்கத்தில் உறவினர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தாலும் நிகழ்ச்சி நடந்து முடிந்ததற்கு பிறகு அவர்களே தமது கருத்தை மாற்றிக் கொண்டு தொடர்ந்து இது போல செய்யுங்கள்” என்று கூறியதாக தோழர் கவித்துவன் தெரிவித்தார்.

### மராட்டிய பான்ஸ்லே மூத்த இளவரசரா

## அரண்மனை தேவஸ்தான அதிகாரி மீது நடவடிக்கை கோரி ஆர்ப்பாட்டம்

மராட்டிய பான்ஸ்லேயை தஞ்சையின் மூத்த இளவரசர் என அழைக்க ஆவணச் சான்று ஏதுமில்லை; இனி அது தவிர்க்கப்படும் என அரசு சார்பில் மாவட்ட ஆட்சியர் அறிவித்த பின்னும் அரண்மனை தேவஸ்தானம் தொடர்ந்து மூத்த இளவரசர் என்றே அழைத்தது.

**மூத்த இளவரசர் என்று போலிப்பட்டத்தை சூட்டிக்கொண்டு மோசடிசெய்யும் மராத்திய பான்ஸ்லேக்கு உடந்தையாகச் செயல்படும் உதவி ஆணையர் கோவிந்தராம் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்**

**தஞ்சை பெரிய கோயில் உள்ளிட்ட அனைத்து அரண்மனை தேவஸ்தான கோயில்களையும் இந்து அறநிலையத் துறை ஏற்கவேண்டும். பரம்பரை அறங்காவலர் பதவியை நீக்க வேண்டும் எனவும்**

தமிழக அரசை வலியுறுத்தி பெருந்திரள் ஆர்ப்பாட்டம் 09.05.2008 வெள்ளி காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. தஞ்சைப் பெரிய கோயில் உரிமை மீட்புக்குழு சார்பில் தஞ்சை, அரண்மனை தேவஸ்தான உதவி ஆணையர் அலுவலகம் எதிரில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மீட்புக்குழுவின் செயலாளர் திரு.வெண்.வீர.முருகு. வீரசிங்கம் தலைமை தாங்கினார். ஒருங்கிணைப்பாளர் திரு பெ.மணியரசன், செயல் தலைவர் திரு.அய்யனாபுரம் சி.முருகேசன் , பொருளாளர் திரு. பழ.இராசேந்திரன், துணைத்தலைவர் திருமதி க.பத்மா ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

த.தே.பொ.க தோழர்கள் உள்ளிட்டு திரளானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

# உத்தப்புரம் தீண்டாமைச் சுவர்

உத்தப்புரம் தீண்டாமைச் சுவர் பெர்லின் சுவர் போல் அண்மையில் தமிழகத்தின் கவனத்தை ஈர்த்த ஒன்றாகும். சமூகப் பதட்டத்தை ஏற்படுத்திய இப்பிரச்சினை குறித்து மகளிர் ஆயம் மையக்குழு உறுப்பினர் தோழர் மேரி, த.தே.பொ.க. மதுரை செயலாளர் தோழர் இராசு ஆகியோர் நேரில் சென்று களஆய்வு செய்தனர். அவர்கள் அளிக்கும் சுருக்கமான அறிக்கை இது.

மதுரை மாவட்டம் -பேரையூர் வட்டம் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது உத்தப்புரம் ஊராட்சி. இந்த உத்தப்புரம் ஊராட்சியில் ஆறு கிராமங்கள் அடக்கம்.

உத்தப்புரம் ஊராட்சியில் பிள்ளைமார் சமூகம் 700 குடும்பங்கள், பள்ளர் சமூகம் 580 குடும்பங்கள், மூப்பர் சமூகம் 150 குடும்பங்கள் நாவிதர் சமூகம் 5 குடும்பங்கள், வண்ணார் சமூகம் 3 குடும்பங்கள், பிரமலைக்கள்ளர் சமூகம் 10 குடும்பங்கள், ஆசாரி குடும்பம் 2 மற்றும் பொட்டல்பட்டி கிராமத்தில் பறையர் சமூகம் 170 குடும்பங்கள், கீழப்பட்டி கிராமத்தில் சக்கிலியர் சமூகம் 50 குடும்பங்கள், கவுண்டன்பட்டி கிராமத்தில் கவுண்டர் சமூகம் 180 குடும்பங்கள், தச்சம்பட்டி கிராமத்தில் நாயக்கர் சமூகம் 50 குடும்பங்கள் உள்ளன. இந்த உத்தப்புரம் ஊராட்சியில் மக்கள் தொகை ஏறக்குறைய 11,240 ஆகும்.

கடந்த 1989ஆம் ஆண்டில் கோயில் திருவிழாவில் ஏற்பட்ட மோதலில் பள்ளர் சமூகத்தில் ஐவரும் பிள்ளைமார் சமூகத்தில் ஒருவரும் ஆக ஆறுபேர் கொல்லப்பட்டனர். அப்போதைய அரசு இறந்த குடும்பங்களுக்கு ரூ.10,000 வீதம் வழங்கி தனது கடமையை முடித்துக் கொண்டது.

இந்த சாதிய மோதலுக்குப் பின் தாழ்த்தப்பட்டோருக்கென அவர்கள் குடியிருப்பில் தனியாக தொடக்கப்பள்ளி ஒன்று அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இரு பிரிவினருக்கும் தனித்தனியாக மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி பயன்பாட்டில் உள்ளது.

அதன் பிறகு இரு சமூகத்தினரிடையே நடந்த தொடர் பிரச்சினைகளின் காரணமாக பிள்ளைமார் சமூகத்தின் சார்பில் நிதி திரட்டப்பட்டு 21.84மீட்டர் நீளத்திற்கு இரு பிரிவினரின் குடியிருப்புகளை பிரிக்கும் வகையில் சுவர் எழுப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பள்ளர் சமூகத்தினர் சாமி கும்பிடுவதில் வந்த மோதலைத் தொடர்ந்து பிள்ளைமார் அந்த சுவரில் மின்கம்பிகளை பொருத்தி மின்சாரமும் பாய்ச்சி உள்ளனர். அதில் ஒரு மாடு, பல கோழிகள் இறந்து விட்டதாக சொல்லப்படுகிறது. இதற்கிடையில் பிரச்சினை சட்டப்பேரவையில் பேசப்பட்டு மேற்கண்ட சுவரில் 6 மீட்டர் நீளத்திற்கு சுவர் இடிக்கப் பட்டுள்ளது.

பின்பு நடந்த உண்ணாவிரதம் அரசியல் கட்சிகளின் தலையீடு, தகவல் தொடர்பு சாதனங்களின் பிரச்சாரம் இவைகள் நாம் அறிந்ததே. இந்த நிலமையில் இருசாராரும் அரசிடம் தங்கள் கோரிக்கைகளை வைத்துள்ளனர்.

பிள்ளைமார் சமூகத்தினரின் முத்தாலம்மன் கோவிலைச் சுற்றியுள்ள இடத்திற்கு பட்டா வேண்டும் என்ற கோரிக்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆவன செய்து தருவதாக உத்திரவாதம் கொடுக்கப்பட்டுள்ளது. சுவரை பொறுத்தவரை இரு பிரிவினருக்கும் பாதகம் இல்லாமல் முடிவு எடுக்கப்படும் என்றும் முதல்வர் கூறியுள்ளார்.



இடிக்கப்படும் தீண்டாமைச் சுவர்

பள்ளர் சமூகத்தினர் தங்கள் தரப்பு கோரிக்கைகள் கண்டுகொள்ளப்படவில்லை என ஆதங்கப்பட்டனர். அவர்களின் கோரிக்கைகள் பின்வருமாறுஃ

- தீண்டாமை சுவர் முழுவதும் அகற்றப்பட வேண்டும்.
- பேருந்து நிறுத்தத்தில் நிழற்கொடை அமைத்துக் கொடுக்க வேண்டும்.
- ஊருக்குள் இருக்கும் புறம்போக்கு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும்.
- பிற்படுத்தப்பட்டோரின் குடியிருப்பு களிலிருந்து தாழ்த்தப்பட்டோரின் பகுதிக்குள் வரும் சாக்கடையை மாற்றி அமைக்க வேண்டும்.
- 1989க்கு முன் சாமி குடும்பிடுவதற்கு எங்களுக்கு இருந்த உரிமை மீண்டும் வேண்டும்.

இக்கோரிக்கைகள் குறித்து பிள்ளைமார் சமூகத் தலைவர்- முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் சேதுப்பிள்ளை என்பவரிடம் கருத்துக்கேட்டோம்.

நிழற்குடை தாழ்த்தப்பட்டவர்களுக்கு அமைக்கக் கூடாது என்றும் சாலை இருப்பதே 15 அடி அகலம்தான் என்பதால் பேருந்து அவரவர் வீட்டருகேயே நிற்கும். நிழற்குடை தேவையில்லை என்றும் கூறினார்.

தாழ்த்தப்பட்டவர்கள் நிழற்குடையில் அமர்ந்து விடுவார்கள் என்ற சாதிய மேலாதிக்க எண்ணமே இந்த எதிர்ப்புக்குக் காரணமென்று புரிந்து கொள்ள முடிந்தது.

பிள்ளைமார் பகுதியின் கழிப்பிடத்திலிருந்து மனித மலங்கள் குளத்திற்குச் சென்று அதில் ஏற்படும் கசிவு தாழ்த்தப்பட்டோர் பயன்படுத்தும் கிணற்றைப் பாழாக்குகிறது என்பதுதான் சாக்கடை குறித்த தாழ்த்தப்பட்டோர் கோரிக்கைக்கு அடிப்படை. இது குறித்து சேதுப்பிள்ளை மவுனத்தையே பதிலாக அளித்தார்.

தாழ்த்தப்பட்டோரின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றி உரிய அளவுக்கு அப்பகுதியில் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தி அங்கு பதட்டம் தலைதூக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அரசின் பொறுப்பு.

குறிப்புஃ

தோழர் இராசுவின் அம்மா இறந்த செய்தி களத்தில் கிடைத்ததால் இந்த ஆய்வை சரியாகச் செய்ய முடியாமல் இருவரும் திரும்பினர்.




### சிறிய அளவில் இருந்தால் சிறப்பு

தமிழர் கண்ணோட்டமும், 'நமது ஊடகமும்' கிடைத்தன.

ஊடகம் இதழின் வடிவமைப்பும் சிறப்பாக இருக்கிறது. ஊடகத்தில் பெரிய அளவிலான கட்டுரையாக அல்லாமல் சிறிய அளவில் இருந்தால்தான் சிறப்பாக இருக்கும் என எண்ணுகிறேன்.

தடை கடந்து சென்னை உண்ணாப் போராட்டம் குறித்து மகிழ்ச்சி. சிறப்புற நடந்திருக்கும் என எண்ணுகிறேன்.

கடும் நெருக்கடிகளுக் கிடையேயும் தாங்கள் தொடர்ந்து போராட்ட ஏற்பாடுகளோடு செயல்படுவது குறித்து மிக நிறைவாக இருக்கிறது.

நாங்கள் இருக்கும் சிறைக்குள் பகல் நேரங்களில் திருக்குறள் வகுப்பும் பிற பாட வகுப்புகளும் நடத்துகிறோம். அவையன்றி மாதம் ஒரு கலை நிகழ்ச்சி நடத்தப் பெறுகிறது. பாவேந்தர் பண்பாட்டு மன்றம் எனும் பெயரிட்டு அந் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு முறையீட்டைத் தள்ளுபடி செய்த செய்தி அறிந்திருப்பீர்கள். மேற்கொண்டு என்ன செய்வது என்பது குறித்து எண்ணி வருகிறோம்.

***-பொழிலன், புழல் சிறை***

### ஆழமான ஆய்வுதேவை

பெ.மணியரசனின் நேப்பாளப் புரட்சியும் நெருக்கடிகளும் மிகவும் பயனுள்ள கட்டுரை. இதுபற்றிய தொடர் கட்டுரை எழுத வேண்டும்.

நேப்பாள புரட்சியிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்ள வேண்டும்? எதை காப்பியடிக்கக் கூடாது? ஓர் ஆழமான வரலாற்று ஆய்வும் தெளிவான முடிவுகளும் தேவை.

கி.வெ.யின் 'விலை உயர்வு: தாராளமயத்தின் பரிசு' கட்டுரை நன்று. அதன் செய்தி படித்த இளைஞர்களை எட்ட வேண்டும்.

மலைக்கும் மடுவிற்கும் இடையே என்ற கட்டுரை இன்று மிகமிகத் தேவை. ஏனெனில் உலகமயத் தொற்று நோயைத் தடுக்க மக்களின் ஒன்றுபட்ட போராட்டம் தேவை.

***-தி.க.சி., நெல்லை***

### தொல்காப்பியம் வர்க்கநிலையைக் காட்டுவதே

தொல்காப்பியம் குறித்த ம.செந்தமிழன் எதிர்வினை குறித்து ஒரு கருத்து.

தொல்காப்பியம் தமிழரது பண்பாட்டை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு எழுதப் பட்டதல்ல. தமிழில் செய்யுள் எப்படி அமைய வேண்டும் என்பதை விளக்கவே எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றதிகாரமும் எழுதப்பட்டன.

அரசனைப் பாடும்போது 'ஈ' எனக் கேட்டான் எனப் பாடக் கூடாது. கீழ் வர்க்கத்தைச் சேர்ந்தவன் கொடு எனக் கேட்பதாக பாடக்கூடாது. இதை எண்ணி நோக்கினால் தொல்காப்பியம் வர்க்க நிலையைக் காட்டும் கண்ணாடி மட்டுமே என்பது புரியும்.

***- முனைவர் ச.இரமேஷ்,***
***கீழ்க்கடம்பூர்***

### முதல்நெறி என்பதே சரி

கன்னடர் வெறியாட்டமும் கங்காணி அரசியலும் என்ற பெ.ம.கட்டுரை கலைஞர் கருணாநிதியின் தன்னல அரசியலையும் அவரது ஆற்றல் இன்மையையும் படம் பிடித்துக் காட்டுகிறது. அச்சுப் பிழை அதிகம்.

விலை உயர்வு தாராளமயத்தின் பரிசு என்ற கி.வெங்கட்ராமன் கட்டுரை முதல்நெறி (Capitalism) வீழ்ச்சியை கட்டியம் கூறுகிறது.

முதல்நெறியில் முதலாளிகளே முன்னோடிகள். எனினும் அது அவர்களால் மட்டும் நின்று நிலைக்கவில்லை. செல்வக்குவிப்பு வேட்கை பரவலான மக்களிடத்தே இருப்பதே இந்நிலைக்குக் காரணம். எனவே இதை முதலாளியம் என்பதை விட 'முதல்நெறி' என்று அழைப்பதே பொருத்தமாகும்.

எல்லோரிடமும் இருக்கிற பொருள் சேர்க்கும் கனவு தகர்ந்து விழும் நாள் வெகு தொலைவில் இல்லை. மக்களிடம் நிலவும் முதல் நெறிக்கு எதிர்ப்பான சமநெறியை வளர்ப்பதே உடனடித் தேவை.

பண்டமாற்று முறை இருந்த காலத்தில் ஒரு பொருளுக்கு மாற்றாக இன்னொரு பொருளை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நிலை இருந்தது. ஆங்கிலேயர் வந்த பிறகு பணம் மாற்றுமுறை பரவலானது. காசு இருந்தால் எதையும் வாங்கலாம் என்ற சந்தை மனப்போக்கு வளர்ந்தது. நிலத்தின் சார்பு நிலை இதனால் அழிக்கப்பட்டு விட்டது. உற்பத்தித் தொழிலை விட ஊழியத் தொழிலே (Service Sector) முகாமைஆனது. உள்ளூர்ச் சந்தையை வலுப் படுத்துவதே இதற்கு மாற்றாக அமையும். இதற்கு திட்டமிட்ட உற்பத்தி முறை தேவை.

***-ஆதன், சென்னை-99***

### ஒற்றுமை உணர்வு தொடர வேண்டும்

'கண்ணகி கோட்டம்: பறிக்கும் மலையாளிகளும் தவிக்கும் தமிழர் களும்' கோ.மாரிமுத்துவின் கட்டுரை படித்தேன்.

அரசின் இன்றைய நடவடிக்கை என்ன என்பதையும் தமிழர்களின் பணி என்ன என்பதையும் தெளிவு படுத்தியது கட்டுரை.

''திராவிடம் விட்டு வாருங்கள்'' உறையிலிடாதான் கட்டுரை அருமை.

ஒகேனக்கல் பிரச்சினையில் தமிழன் தன் ஒற்றுமையை காட்டியது போல் இனிவரும் காலங்களிலும் அந்த உணர்வு தொடர வேண்டும்.

***-தொல்காப்பியன், ஓசூர்***

### பார்வைக் கோளாறு

'திராவிடம் விட்டு வாருங்கள்' உறையிலிடாதான் கட்டுரை படித்தேன்.

தமிழம் என்னும் தூயதமிழ்ச் சொல்லின் திரிசொல்தான் திராவிடம்.

திராவிட இயக்கம் தொடங்கிய காலந்தொட்டு அது தமிழ், தமிழன், தமிழ்நாடு என்றே செயல்பட்டு வந்திருக்கிறது.

ஆரியக்கலாச்சார ஒடுக்கு முறையால் வாய்ப்பிழந்த மக்களுக்கு வகுப்புரிமைச் சட்டத்தை கொண்டு வந்தது திராவிட இயக்கமேயாகும்.

தமிழர் வாழ்வில் பார்ப்பனியம் மேலாதிக்கம் செய்து வந்ததை உடைத் தெறிந்ததும் திராவிட இயக்கம்தான்.

அதைப்போலவே தமிழ், தமிழ்த்தேசம் என்ற சிந்தனை வந்ததன் மூலவேர் திராவிட இயக்கக் கொள்கைதானே!

எனவே திராவிடம் விட்டு வாருங்கள் என உறையிலிடாதான் அழைப்பது பார்வைக் கோளாறு தவிர வேறல்ல.

***-புலவர் க.முருகேசன், வேங்கூர்***

**நீர்த்துப் போயிருக்கின்றன**

கண்ணகிகோட்டம்ஃ பறிக்கும் மலையாளிகளும் தவிக்கும் தமிழர்களும் கோ.மாரிமுத்துவின் கட்டுரை உணர்த்துவது, கண்ணகி கோட்டத்தின் உரிமையை தமிழர்கள் இழந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதுதான்.

வழிபாட்டு உரிமை கூட தமிழர்க்கு இல்லை என்கின்றபோது திராவிடம் பேசும் கட்சிகளின் கொள்கைகள் நீர்த்து போயிருப்பதை எளிதில் உணரமுடியும்.

***-கதிர்மதி, திருச்சி***

**இன உணர்ச்சி பெறச் செய்கிறது**

மே இதழில் வெளிவந்துள்ள ஆசிரிய உரையில் இந்தியா தேசிய இனங்களின் சிறைக்கூடம் என்பது சரியான வரையறுப்பு. இந்தியாவில் உள்ள மற்ற தேசிய இனங்கள் ஒடுக்கப்படுவது உண்மை. ஆனால் தமிழினம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் எண்ணமும் ஆசையும்.

மேலும் தோழர் பெ.ம. அவர்களின் நேப்பாளம் பற்றிய கட்டுரை அனைவரும் படிக்க வேண்டிய புரட்சிக்கட்டுரை. மக்கள் சக்தியால் எதையும் வெல்ல முடியும் என்பதை நேப்பாள மக்களும் நேப்பாள மாவோயிஸ்ட்டுகளும் உலகுக்கு உணர்த்தியுள்ளனர்.

கன்னட வெறியாட்டமும் கங்காணி அரசியலும் கட்டுரை கருணாநிதி துரோகி என்பதை உணர்த்துகிறது. இந்த இதழ் ஒவ்வொரு தமிழனையும் இனஉணர்ச்சி பெறச் செய்யட்டும்.

***-ஆ.வே.அய்யனார், கொணமங்கலம்***

**விழிப்புணர்வு தூண்டுகோல்**

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் தற்காப்பு மறியல் போராட்டம் தமிழ் இனத்தின் விழிப்புணர்வு தூண்டுகோலாக உள்ளது.

எந்த ஒரு செய்தியையும் யாராவது ஒருவர் அல்லது ஒரு இயக்கம் தொடங்கி வைக்க வேண்டும். அந்தப் பெரும்பணியை தொடர்ந்து செய்து கொண்டே உள்ளீர்கள். இந்த மாதிரி நடவடிக்கைகளில் என்றும் உங்களுடன் இருப்பேன்.

***-க.இரா.முத்துசாமி, இயற்கை வாழ்வகம், திருப்பூர்***

# 1000 உறுப்பினர்கள் சேர்க்கும் முனைப்பியக்கம்

*புதிய தமிழர் கண்ணோட்டத் துக்கு 1000 புதிய உறுப்பினர் (சந்தாதாரர்) சேர்க்கும் முனைப்பியக்கம் தொடங்கி யுள்ளது.*

*சிதம்பரத்தில் 5,6.4.2008 நாள்களில் நடந்த பொதுக்குழுவில் இம்முடிவு எடுக்கப்பட்டது. இதற்கிடையே தமிழ்காக்கப் போராடிய தோழர்கள் மீது தடியடி நடத்திய காவல்துறையினரைக் கண்டித்து 3.5.2008 அன்று சென்னையில் நடந்த உண்ணாப் போராட்டம், மண்ணின் மக்களுக்கு வேலை கோரி 20.5.2008 அன்று திருவெறும்பூர் மிகுமின் ஆலை முன் நடந்த மறியல் போராட்டம் மற்றும் ஆங்காங்கே நடந்த பகுதி இயக்கங்கள் காரணமாக உறுப்பினர் சேர்ப்பு முனைப்பு இயக்கம் தொடங்குவதில் சுணக்கம் ஏற்பட்டது.*



*இப்பொழுது 1000 உறுப்பினர் சேர்ப்பு முனைப் பியக்கம் தொடங்கிவிட்டது. 2008 சூன் 30க்குள் 1000 உறுப்பினர் சேர்த்து முடிக்க வேண்டும்.*

***ஆண்டுக் கட்டணம் ரூ.120, மூன்றாண்டுக் கட்டணம் ரூ. 300, வாழ்நாள் கட்டணம் ரூ.1200.***

***''தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளை''*** *என்ற பெயரில் பணவிடை, வரைவோலை அனுப்பலாம்.*

*தமிழ் இனத்தின் தற்காப்புக் கவசமாய், தமிழ்த் தேசியப் புரட்சியின் போர்வாளாய் வந்து கொண்டிருக்கும் புதிய தமிழர் கண்ணோட்டத்தின் காவலராய் செயல்பட்டு இலக்கை விஞ்சி உறுப்பினர் சேர்க்குமாறு தோழமையோடு வேண்டுகிறோம்.*

***- ஆசிரியர்***

தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளை சார்பில் வெளியீட்டாளர் : பெ.மணியரசன் ■ 20/7, முத்துரங்கன் சாலை, தியாகராயர் நகர், சென்னை-17
என்ற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது ■ ஆசிரியர்: பெ.மணியரசன்

## தமிழ் காக்கப் போராடிய தோழர்களுக்குத் தடியடி – சிறைச்சாலை

# தடை கடந்து கண்டன உண்ணாப் போராட்டம்



மொழிப்போர் நாளான 25.01.2008 அன்று ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில், ஆங்கில எழுத்துகளை தார் பூசி அழித்த தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சித் தோழர்களைக் கோயம்பேடு ஆய்வாளர் தேன்தமிழ் வளவன் மற்றும் காவலர்கள் கொடுமையாகத் தாக்கி காயப்படுத்தினர். தோழர்கள் குருதி சிந்தினர்.

அதே நாளில் இந்திய அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்து தஞ்சை தலைமை அஞ்சலகம் மற்றும் தலைமை தந்தி அலுவலகத்தில் இந்தி எழுத்துகளைத் தார் பூசி அழித்த த.தே.பொ.க. தோழர்கள் மீது பிணை மறுப்புப் பிரிவுகளில் வழக்குத்தொடுக்கப்பட்டு திருச்சி சிறையில் அடைக்கப் பட்டனர்.

தமிழ்மொழி காக்கப் போராடிய த.தே.பொ.க. தோழர்களைத் தாக்கிக் காயப்படுத்திய காவல் ஆய்வாளர் தேன்தமிழ் வளவன் மற்றும் காவலர்களை இடைநீக்கம் செய்து நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசை வலியுறுத்தியும், தஞ்சை வழக்கைத் திரும்பப் பெற வலியுறுத்தியும் 22.02.2008 அன்று சென்னையில் கண்டன உண்ணாப்போராட்டம் நடத்துவது என த.தே.பொ.க. அறிவித்தது. காவல்துறை அனுமதியும் முறையாகக் கோரப்பட்டது.

கடைசி நேரத்தில் பிப்ரவரி 21 மதியம் ‘இந்த உண்ணாப்போராட்டத்திற்கு அனுமதி இல்லை’ என்று சென்னை காவல் துறை ஆணையர் அறிவித்தார்.

இந்த அனுமதி மறுப்பை எதிர்த்து தமிழ்த் தேசப் பொதுவுடைமைக்கட்சி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது. வழக்குப்பட்டியலில் இவ்வழக்கு கிட்டத்தட்ட நாள்தோறும் இடம் பெற்றாலும், நேரம் போதாமையால் வழக்கு எடுத்துக்கொள்ளப்படாமலேயே நாட்கள் கடந்தன.

இந்நிலையில் நிலுவையில் உள்ள வழக்கையும் சுட்டிக்காட்டி, அனுமதி வழங்க வேண்டியதன் நியாயத்தை வலியுறுத்தி காவல் ஆணையர்க்கு மீண்டும் விண்ணப் பித்தோம். இது தொடர்பாக நேரடி விசாரணை நடைபெற்று அதில் வழக்குரைஞர் தோழர் சேசுபாலன் ராஜா, பொதுச்செயலாளர் பெ.மணியரசன் ஆகியோர் நம் தரப்பு நியாயத்தை எடுத்து வாதிட்டனர்.இதன் அடிப்படையில் 03.05.2008 அன்று கண்டன உண்ணாப் போராட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

கண்டன உண்ணாப்போராட்டம் 03.05.2008 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை அருகில் நடைபெற்றது. தோழர் பெ.மணியரசன் தலைமை தாங்கினார். தமிழகமெங்குமிருந்து ஆண்களும், பெண்களுமாக த.தே.பொ.க. தோழர்கள் சுமார் 400 பேர் உண்ணாப்போராட்டத்தில் எழுச்சியோடு கலந்து கொண்டனர். தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை தலைவர் திரு த.வெள்ளையன் உண்ணாப் போராட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றினார்.

ம.தி.மு.க. துணைப்பொதுச்செயலாளர் திரு மல்லை சத்யா, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தோழர் தியாகு, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் நிலவன், இயக்குனர் சீமான், தமிழக மனித உரிமைக்கழகப் பொதுச்செயலாளர் தோழர் அரங்க.குணசேரகன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக்கட்சி கவிஞர் தமிழேந்தி, த.தே.பொ.க. தலைமைச்செயற்குழு உறுப்பினர் தோழர் கி.வெங்கட்ராமன், வழக்குரைஞர் சேசுபாலன் ராஜா, த.இ.மு.பொதுச்செயலாளர் தோழர் நா.வைகறை , கட்சியின் தஞ்சை மாவட்டச்செயலாளர் தோழர் பழ.இராசேந்திரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் தோழர் இரா.பாலசுப்பிரமணியன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கவிஞர் கவிபாஸ்கர், ஓசூர் செம்பரிதி, குழ.பா.ஸ்டாலின் ஆகியோர் எழுச்சிமிகு கவிதை வழங்கினர். சிறுமி புகழ்ச் செல்வி இன உணர்வூட்டும் தமிழிசைப் பாடல்களை இனிமையாகப் பாடினார்.

போராட்டத்தில் கலந்து கொண்டு தடியடி பட்ட, சிறை சென்ற தோழர்களுக்கு நினைவுப்பரிசும், சான்றிதழும் அளித்து, தமிழ் உரிமை கூட்டமைப்பு தலைவர் புலவர் கி.த.பச்சையப்பனார் பாராட்டுரை வழங்கினார்.

நிறைவில் உலகத்தமிழர் பேரமைப்புத்தலைவர் திரு பழ.நெடுமாறன் வாழ்த்துரை வழங்கி, பழச்சாறு கொடுத்து உண்ணாப்போராட்டத்தை முடித்து வைத்தார்.